தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 306 பிலவ வருடம், ஆவணி மாதம் 02ஆம் திகதி புதன்கிழமை (18.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 08, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

நக்கல் நமசிவாயம்

ரணில் எல்லாம் தலைவனா எண்டு ஆட்சியை எடுத்த ஆக்கள் இப்போ அவரிட்டவே எட்வைஸ் கேக்கினமெண்டா பாருங்கோவன் நிலைமைய

35 நகரங்கள் மூடப்பட்டன

•யோ.தர்மராஜ்

டெல்ட்டா தொற்று திரிபினால் நாடு முடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்ற நிலையில், நேற்று மாலை வரை 35 நகரங்களின் வர்த்தக நிலையங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்ப்பாணம் – கொடிகாமம், திருகோணமலை, கேகாலை, சிலாபம், அம்பாறை, வென்னப்புவ, கெக்கிராவ, மொனராகலை, திவுலப்பிட்டிய, தெரணியகல, ஊரகஸ் மங்ஹந்திய, வாதுவ, பாதுராகொட, ரிகில்லகஸ்கட மற்றும் அலவ்வ ஆகிய நகரங்கள் மறு அறிவித்தல் வரை மூடப் பட்டுள்ளதுடன்... 02≫

பேராபத்தை ஏற்படுத்தும் 3 திரிபுகள்

70 வீதம் வேகமாகப் பரவுமென அரசாங்கம் அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டில் டெல்ட்டா வைரஸின் மேலும் மூன்று வகையான புதிய திரிபுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேற்று தெரிவித்தார். நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கொரோனா நிலைவரம் குறித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் தற்போது டெல்ட்டா திரிபே பிரதானமாக பரவுகின்றதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். முன்னர் காணப்பட்ட வைரஸை விட 60 – 70 வீதம் வேமாக பரவுவதுடன், அதிக நோய் அறிகுறிகளை தோற்றுவிக்கின்றன. அத்தோடு, ஒட்சிசன் தேவையையும் இந்த டெல்ட்டா திரிபு அதிகரித்துள்ளது.

இலங்கையில் பரவும் டெல்ட்டா திரிபிலிருந்து மேலும் மூன்று புதிய திரிபுகள் உருவாகியுள்ளதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதன்படி, SA222V, SA701S மற்றும் SA1078S என்று மூன்று வகை திரிபுகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்நிலையில், இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப் படுவதற்கும் இந்த புதிய திரிபுகள் காரணமாக இருக்கலாம்.

ஆகவே, தடுப்பூசிகள் மூலம் கொரோனா தொற்று பரவுவதையும் மரணங்களின் எண்ணிக்கையும் குறைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதன்படி, நாட்டின் சனத்தொகையில் 54 வீதமானவர்களுக்கு ஏதேவொரு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது – என்றார்.

அனைத்துக் கட்சி அவசர கூட்டம்!

விரைவில் நடத்த ஜனாதிபதி தீர்மானம்

ரணிலுடன் நடந்த சந்திப்பிலும் ஆராய்வு

•நமது விசேட செய்தியாளர்

கொரோனா மற்றும் டெல்ட்டா வைரஸ் தொற்றுகள் நாட்டில் தீவிரமாக பரவி வரும் நிலையில், அது தொடர்பில் உரிய நடவடிக்கைள் எடுப்பது குறித்து கலந்தாலோசிப்பதற்காக அவசர அனைத்துக்கட்சி கூட்டமொன்றை கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது. 02≫

நாட்டில் ஒட்சிசனுக்கான தேவை அதிகரித்துள்ளதன் காரணமாக இந்தியாவிலிருந்து அதனைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சக்தி கப்பல் திருகோணமலை துறைமுகத்திலிருந்து நேற்றுக்காலை சென்னை நோக்கிப் புறப்பட்டது.

அரசும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைய வேண்டும்

கொரோனாவை கட்டுப்படுத்த கலந்துரையாடல்கள் அவசியமென முன்னாள் ஜனாதிபதி மைத்ரி தெரிவிப்பு

•சபை செய்தியாளர்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் நிலைமையை கட்டுப்படுத்த அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதுடன், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும்... 02≫

இந்தியாவை விட 15 மடங்கு ஆபத்து!

ராஜித எம்.பி. சபையில் எச்சரிக்கை

உலகில் பிரபலமான பல்கலைக்கழகமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம் இந்தியாவை விடவும் 15 மடங்கு அதிக ஆபத்தை இலங்கை எதிர்கொண்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலையென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். 02≫

முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்; இரு வாரங்களுக்கு நாட்டை முடக்குக!

எதிர்க்கட்சித் தலைவர் அரசிடம் கோரிக்கை

•சபை செய்தியாளர்கள்

நாட்டில் தீவிரமடைந்துவரும் கொவிட் தொற்றிலிருந்து மக்களின் உயிர்களைப் பாதுகாக்க இரண்டு வாரங்களுக்கு நாட்டை முழுமையாக முடக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

ஆளும், எதிர்க்கட்சிகளென பாராது அனைவரும் ஒன்றிணைத்து கொவிட் தொற்றை ஒழிக்க வேண்டும் எனவும் எமது முழுமையான ஒத்துழைப்புகளை இதற்கு வழங்கத் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். 02≫

வைத்தியசாலைகளில் 50 வீதமான சுகாதாரப் பிரிவினருக்கு கொரோனா

பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார் வைத்தியர் அபேசிங்க

•யோ.தர்மராஜ்

நாட்டில் டெல்ட்டா தொற்று தீவிரத்தால் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் 50 வீதமான சுகாதாரத்துறையினர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதால் கொரோனா நோயாளர்களை கண்காணிப்பதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர், வைத்தியர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

நாட்டின் நிலைமை குறித்து வினவியபோதே அவர் இதனை 'தமிழன்' நாளிதழுக்கு... 02≫

கஜேந்திரகுமார் எம்.பிக்கு கொரோனா தொற்று

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா பரிசோதனைகளின் அறிக்கை நேற்று கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில்... 02≫

ரூபா 61.5 பில். நிதி; சீனா அவசர உதவி

சீன அபிவிருத்தி வங்கியும் இலங்கை அரசாங்கமும் 61.5 பில்லியன் ரூபா உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இரண்டு வருட குத்தகை அடிப்படையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ட்விட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைய, இந்த உதவித்திட்டம் வழங்கப்படுவதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. 02≫

தமிழர்கள் சுய உரிமை கோருவதில் தவறில்லை

தலிபான்களை உதாரணங்காட்டி சிறீதரன் எம்.பி. சபையில் பேச்சு

•சபை செய்தியாளர்கள்

சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்கு போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தை தந்திருக்கின்றது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

உலகப்பந்தில் எந்த இனமும் சுயத்துடன் வாழ்வதற்கான உரிமையை கோரி நிற்பதில் எந்தத் தவறும் இல்லை. 02≫

Fun BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.

• நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.

TRC/D/PRO/20/10

Dialog

எதிர்காலம் இன்றே.

நீதிச் சேவையின் சலுகைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவே சட்டமூலம்

சபை செய்தியாளர்கள்

கொவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்க ளுக்கு நீதிச் சேவையின் சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவே கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கொவிட் - 19 தற்காலிக ஏற்பாடுகள் தொடர்பிலான திருத்தச்சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கொவிட் சட்டமூலத்தின் அவசியம் பற்றி முதலில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்தான் கருத்துகளை முன்வைத்திருந்தது. அதன் முன்னாள் தலைவர் காலிங்க இந்ததிஸ்ஸ மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சஞ்ஜீவ ஜயவர்தன, இக்ரம் மொஹமட் ஆகியோர் இணைந்தே சட்டமூலத்தின் அவசியத்தை முன்மொழிந்தனர். இக்கருத்தின் பின்னர்தான் கொவிட்-19 தற்காலிக ஏற்பாடு சட்டம் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

எதிர்க்கட்சியினரின் போலியான குற்றச்சாட்டு என்கிறார் அமைச்சர் அலி சப்ரி

ஏனைய நாடுகளிலுள்ள நான்கு காரணிகளின் பிரகாரம்தான் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறித்ததொரு செயற்பாட்டை செய்யும்போது குறித்த கால எல்லையை எவ்வாறு நீடிப்பது, நீதிமன்ற தலையீடுகளிலுள்ள வழக்குகளை வேறு நீதிமன்றமொன்றுக்கு எவ்வாறு பெற்றுக்கொடுப்பது, கொவிட் காலத்தில் நீதிமன்றங்களை இணையத்தளத்தில் எவ்வாறு நடத்தி செல்வது, சில உடன்படிக்கைகளை சட்ட ரீதியாக செய்துகொள்ள முடியாதுபோகும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மேலதிக காலத்தை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட நான்கு காரணிகளின் பிரகாரம்தான் இந்தச் செயற்பாடு இடம்பெற்றது.

மேற்கூறப்பட்ட நான்கு காரணிகளுக்கும் அப்பால் இச்சட்டத்தில் வேறு எதுவும் இல்லை. அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கும், துன்பங்களை எதிர்கொள்ளும் சாதாரண மக்களுக்கு சலுகையை பெற்றுக்கொடுப்பதே சட்டத்தின் நோக்கமாகும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அர்த்தமற்ற கருத்துகளை முன்வைக்கின்றனர். இதுதொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும் உள்ளன. ஆங்கில மொழியில் மட்டும் இல்லை என்பதை குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூற விரும்புகிறேன். நீதிமன்றின் தீர்ப்பைதான் ஆங்கிலத்தில் சமர்ப்பித்துள்ளோம்.

இந்தச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தவேண்டுமென்றால் உயர்நீதிமன்றத் திற்கு செல்ல முடியும்.

மேன்முறையீடொன்றை 42 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் சட்டம். ஆனால், கொவிட் தொற்று காரணமாக 42 நாட்களுக்குள் மேன்முறையீடொன்றை மேற்கொள்ள முடியாது செல்பவர்களுக்கு இந்த வாய்ப்பை பெற்றுக்கொடுப்பது சட்டத்தின் முதல் நோக்கமாகும்.

அதேபோன்று கொவிட் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுபோன நீதிமன்றங்கள் இணையத்தளத்தின் ஊடாக தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். இவ்வாறு ஏற்பாடு செய்தமையின் காரணமாக அரசியல் கைதிகளின் விவகாரத்தை இணையதளத்தின் ஊடாக கையாள முடிந்தது - என்றார்.

நிதிச் சட்டத்தின் சில உட்பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணானவை

உயர்நீதிமன்றம் அறிவிப்பு

•சபை செய்தியாளர்கள்

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் சட்டத்தின் சில உட்பிரிவுகள் அரசியலமைப்போடு ஒத்துப்போகவில்லை என்று உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவால் நேற்று அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 4/1, 5/1, 5/2, 5/3, 5/4, 5/5, 6/1, 7/1, 12 பி, 13/1, 14 ஆகிய பிரிவுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். மற்றும் 20, 17 ஆகிய பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானது.

அதன்படி, சம்பந்தப்பட்ட உட்பிரிவுகள் திருத்தப்பட்டால், முன்மொழியப்பட்ட வரைபை மூன்றில் இரண்டிற்கும் குறைந்த பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசும் எதிர்க்கட்சியும்...

அழைத்து கலந்துரையாடல்களையும் நடத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேடமாக எங்களைபோன்று முழு உலகமும் முகங்கொடுத்துள்ள கொவிட் நிலைமை தொடர்பில் அனைவரும் அறிந்துள்ளோம். வைத்தியர்கள்முதல் பாடசாலை மாணவர்கள் வரையில் அனைவரும் முழுமையான புரிந்துணர்வுடனேயே இருக்கின்றனர்.

மனிதர்கள் தோன்றிய நாள்முதல் இதுபோன்ற நிலைமைகளுக்கு எப்படி முகங்கொடுத்தார்கள் என்று ஆராயவேண்டும். ஆட்சியாளர்களினால் எதிர்பார்க்க முடியாத பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எமது சுகாதாரத்துறை தொற்று நோய் தொடர்பில் மிகவும் அனுபவமுள்ள துறையாகவே இருக்கின்றது. 1930 - 1940 காலப்பகுதியில் தொற்று நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதன்படி இவர்களுக்கு அனுபவம் உள்ளது. இப்போது உலக சனத்தொகையில் 280 மில்லியன் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அத்துடன், 44 இலட்சத்திற்கும் அதிகமான மரணங்கள் பதிவாகியுள்ளன. உலக சுகாதார தாபனத்தின் தகவல்களுக்கமைய உலக நாடுகளில் 222 நாடுகள் இந்தத் தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளன.

அதேபோன்று சகல வழிகளிலும் பலமாக இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் இந்தத் தொற்றால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கும் இந்தப் பிரச்சினையிலிருந்து மீள்வது தொடர்பான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

155 நாடுகள் ஓரளவுக்கு கட்டுப்பாட்டு நிலைக்கு வந்துள்ளன. இந்நிலையில், மரண வீதமானது மொத்த உலக சனத்தொகையில் 1.5 ஆக உள்ளது. இந்த நேரத்தில் இந்த நிலைமை மாறி மணித்தியாலத்திற்கு 6 பேர் வரையில் மரணிக்கும் நிலைமை இங்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் இப்போது 45 இலட்சம் பேர் வரையிலானோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நேரத்தில் மரண வீதம் அதிகரிப்பது தொடர்பில் நாங்கள் அனைவரும் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்த நிலைமை மேலும் அதிகரித்துச் செல்வதை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டிய நேரமாக நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

தற்போதைய நிலைமையில் பலமான நாடுகளும் ஆட்டம் கண்டுள்ளன. அவர்களின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நேரத்தில் நாங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களுக்குள் முடியாத வேலைகளை செய்வது தொடர்பாக கல்விக்குள் சேர்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் தவறுகளை தேடுவதை தவிர்த்து இருக்கும் பிரச்சினைகளை தீர்க்கவே நடவடிக்கை எடுக்கவேண்டும். நாங்கள் இந்த தொற்றுக்குள் வந்து ஒன்றரை வருடங்களாக பாதிக்கப்பட்டுள்ளோம். இந்த நேரத்தில் விசேட நிபுணர்களின் கணிப்புகளை கருத்திற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றோம்.

இந்நிலையில், அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்திற்கு செல்வது அவசிமாகும். இவ்வேளையில் மக்களின் உயிர் அச்சுறுத்தலை இல்லாமல் செய்வதற்கான வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். இது தொடர்பில் அரசாங்கமும் ஜனாதிபதியும் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தையும் அழைத்து கலந்துரையாட வேண்டும் என்று ஜனாதிபதி, பிரதமரை கேட்டுக்கொள்கின்றேன். அனைவரும் ஒன்றிணைந்து இந்தத் தொற்றை தோற்கடித்து நாங்கள் முன்னால் பயணிப்போம் - என்றார்.

வைத்தியசாலைகளில்...

நேற்று தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமை மிக ஆபத்தானதாகவேயுள்ளது. இதனால், நாட்டை முடக்குமாறு நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். குறிப்பாக, ஜனாதிபதிக்கும் நாங்கள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்குரிய முடிவுகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

மக்களை சுய கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்குமாறு கோருவது பொருத்தமற்றது. மக்களின் இயல்பு நிலைமைக்கு சட்டத்தை தவிர மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது. இதனை புரிந்துகொண்டு முடிவுகள் எடுக்கப்படாதிருப்பதனால் நாட்டில் மேலும் ஆபத்துகள் கூடும்.

இந்நிலையில், நாளுக்கு நாள் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பதால் வைத்தியசாலைகளில் இடவசதிகளில் ஏற்கனவே பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தற்போது நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் 50 வீதமான சுகாதாரத்துறையினர் கொரோனா தொற்றுக்குள்ளாகுவதால் தற்போது கொரோனா நோயாளர்களை கண்காணிப்பதற்குத் தேவையான மனித வளங்கள் குறைவடைந்து வருகின்றன.

இதனால், ஒட்சிசன் தேவையேற்படும் நோயாளர்களுக்கு தடையின்றி ஒட்சிசனை வழங்குவதற்குக்கூட மனித வளங்கள் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மிக மிகக் குறைந்த மனித வளங்களைக்கொண்டே சுகாதாரத் துறையினர் இயங்குகின்றனர். எனவே, இந்த நிலைமை தொடருமாக இருந்தால் எதிர்வரும் வாரங்களில் அடையாளம் காணப்படும் நோயாளர்களை முறையாக கண்காணிப்பதற்குக் கூட முடியாத துர்ப்பாக்கிய நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடும் - என்றார்.

அனைத்துக் கட்சி...

கொரோனா தடுப்பு விடயத்தில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையை சமாளிக்க வேண்டுமாயின் உடனடியாக அனைத்துக் கட்சி கூட்டமொன்றை கூட்டி கட்சிகளின் ஆதரவைப்பெற்று, நாடாளுமன்றத்தில் தேவையான நிதி ஒதுக்கீடுகளை செய்து நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தச் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க எம்.பி., ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேசமயம், தற்போது தேவைப்படும் மருத்துவ தேவைகளை பூர்த்திசெய்வதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு இந்தச் சந்திப்பில் ஆலோசனைகளை வழங்கியுள்ள ரணில், அதற்காக வெளிநாடுகளிடம் உதவிகளைப் பெறும் முயற்சிக்கு தம்மாலான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

ரணிலின் இந்தச் சந்திப்பையடுத்தே அனைத்துக் கட்சி கூட்டமொன்றை கூட்ட ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார். பெரும்பாலும் அடுத்த வாரமளவில் இந்தக் கூட்டம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவை விட 15 மடங்கு...

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது ராஜித சேனாரட்ன மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையும், உலக வங்கியும் இணைந்து மேற்கொண்டுள்ள புள்ளிவிபர கணக்கெடுப்பின்படி நாடொன்றில் ஒரு மில்லியன் மக்கள் எண்ணிக்கையில் நாளாந்த கொவிட் மரண வீதத்தில் இலங்கை இரண்டாம் இடத்திலேயே இருக்கின்றது. வாராந்த மரணங்களின் வீதங்களில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. அத்துடன், மரண எண்ணிக்கையின் அதிகரிப்பில் இலங்கை உலகிலேயே ஆபத்தான இடத்திலேயே இருக்கின்றது.

உலகில் பிரபலமான பல்கலைக்கழகமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம் தற்போது நாங்கள் இந்தியாவை விடவும் 15 மடங்கு அதிக ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தகவல்களை மறைத்து போலியான வகையில் புள்ளிவிபரங்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக, கம்பஹாவில் மூவாயிரம் கணக்கிலான நோயாளர் எண்ணிக்கையை கூறும்போது உண்மையான தொகை 12 ஆயிரத்து 555 ஆக உள்ளது. அதுமட்டுமன்றி அரசாங்கம் வெளியிட்ட எண்ணிக்கையிலும் கிழக்கு மாகாண நோயாளர் எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் உள்ளன. அரசாங்கம் 45 பேர் மட்டக்களப்பில் பதிவாகியுள்ளதாக கூறுகையில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பல மடங்கு அதிகமான எண்ணிக்கையை கூறுகின்றார்.

இதன்படி யார் இவற்றை மாற்றுவது? தமது வைத்தியர்களின் கணக்குகளின்படி நாளாந்தம் 250 பேருக்கும் அதிகமானோர் மரணிப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது. அப்படியாயின் அந்த புள்ளிவிபரங்களை மாற்றும் அந்த மேஜர் ஜெனரல் யார் என்பதனை நீங்கள் கூறவேண்டும். சுகாதார அமைச்சு அந்த நபர் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது.

அந்த நபரே எண்ணிக்கைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்கின்றனர். மக்கள் இறந்த பின்னர் வீடுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் இறந்தவருக்கு நீரிழிவு போன்ற பல்வேறு நோய்கள் இருக்கின்றதா என்று கேட்டு அதனை அதற்குள் போட்டு மரண எண்ணிக்கையை குறைத்து காட்டுகின்றனர். யார் அந்த நபர் என்று தேடுங்கள்.

இன்று நம்பிக்கையில்லா நிலைக்கு சுகாதார அதிகாரிகள் தள்ளப்பட்டுள்ளனர். அதன்படி அவர்களே நடப்பதை கூறியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்படுவது நாளை நானாகவும் இருக்கலாம். பேராசிரியர் அகம்பொடி என்பவர் கூறுகையில் நாட்டை முடக்காவிட்டால், மரணங்களை மனிதக் கொலையாகவே பார்க்க வேண்டிவரும் என்று கூறியுள்ளார்.

விசேட மருத்துவர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து கூடிய விரைவில் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதேபோன்று மருத்துவ கல்லூரிகள் அனைத்தும் இணைந்தும் இது தொடர்பாக கோரிக்கைகளை விடுத்துள்ளன.

அத்துடன், மருத்துவ நிபுணர்கள் முடக்கத்தை அறிவித்தால் நாளாந்த நோயாளர் எண்ணிக்கையை ஆயிரத்திற்குள் குறைத்து மரணிப்போரின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைக்க முடியும் என்பதுடன், 18 ஆயிரம் மரணங்களையும் தடுக்க முடியுமாக இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர். இதேவேளை, பேராசிரியர் ஜீவந்திர கூறும் போது 35 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் சமூகத்திற்குள் இருக்கலாம் என்று கூறுகின்றார். அத்துடன், சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கமும் எச்சரிக்கைகளை விடுக்கின்றன.மருத்துவர்கள் உத்தியோகபூர்வ பரிந்துரைகளை வழங்கினால் நாட்டை முடக்கத் தயார் என்று பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். அத்துடன், சுயமாக பயணத் தடையை ஏற்படுத் திக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளோர். உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட 30இற்கும் மேற்பட்ட சங்கங்கள் விசேட மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட அனைவரும் கூறும்போது இதற்கு மேல் கூறவேண்டிய மருத்துவர்கள் யார் என்று கேட்கின்றோம் - என்றார்.

ரூபா 61.5 பில். நிதி...

இலங்கையின் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகள், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

கஜேந்திரகுமார் எம்.பிக்கு...

தொற்று உறுதியானதாக அவர் தனது ட்விட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார். இதேவேளை, கஜேந்திரகுமாரின் பாரியாருக்கும் மகளுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், தன்னுடன் தொடர்பில் இருந்தோரை தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

34 நகரங்கள் மூடப்பட்டன...

மேலும், கம்பஹா, அம்பலாந்தோட்டை, அம்பலாங்கொடை, மரதஹமுல்ல, வெயங்கொடை, தங்கொட்டுவ, சேருநுவர, பலாபத்வல, உல்பத்த, தங்காலை, பதுளை, பலாங்கொடை, வலப்பனை, பண்டாரவளை, எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி, இறக்குவானை, கஹவத்தை, தம்புள்ளை மற்றும் மாத்தளை ஆகிய நகரங்களும் மூடப்பட்டுள்ளன.

முழுமையான ஒத்துழைப்பு...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கொவிட் தொற்றினால் நாடு பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது. இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமாகும். ஆளும், எதிர்க்கட்சி என பாராது அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

உலக சுகாதார அமைப்பின் கருத்தின் பிரகாரம் ஆபத்தான நிலைமையே ஏற்படப்போகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் நாளொன்றுக்கு 6ஆயிரம் நோயாளர்கள் அடையாளம் காணப்படலாம். தினமும் 220 வரையான மரணங்கள் ஏற்படலாம். 2022 ஆகும்போது நாட்டில் மொத்த கொவிட் மரணங்கள் 30ஆயிரத்தைத் தாண்டும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால், குறிப்பிட்ட காலத்துக்கு நாட்டை முடக்கி செயற்பட்டால் 18 ஆயிரம் மரணங்களில் இதனை தடுத்துக்கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அனைத்து சுகாதாரத்துறையினரும் நாட்டை இரண்டு வாரங்களுக்கு முடக்குமாறே தெரிவிக்கின்றனர். ஏனெனில், வைத்தியசாலைகளில் அனைத்து துறைகளிலும் சேவைசெய்யும் ஊழியர்கள் மிகவும் கஷ்டத்துடனே செயற்பட்டு வருகின்றனர். சுகாதார கட்டமைப்பு சிதைவடைந்தால் அது பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும். அதனால் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கவும் சுகாதார கட்டமைப்பை பாதுகாக்கவுமே இரண்டு வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு தெரிவிக்கின்றோம். ஏனெனில், கொவிட் சடலங்களை தகனம் செய்வதற்கு கொள்கலன்களில் ஏற்றிச்செல்வதை மனிதநேயம் உள்ள எவராலும் தாங்கிக்கொள்ள முடியாது.

மனிதாபிமானத்துடன் சிந்தித்து இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும்.

இதற்காக இரண்டு வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்போம். அவ்வாறு தீர்மானத்துக்கு வராவிட்டால் சுயாதீனமாக செயற்பட்டு மக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு உயிர்களை பாதுகாத்துக்கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கொவிட் தரவுகளின் உண்மைத்தன்மை பற்றி பாரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. தரவுகளில் சந்தேகம் ஏற்படும்போது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை மக்களுக்கு இல்லாமல்போகும். அதனால் தரவுகளின் உண்மைத்தன்மையை மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மேலும் தீவிரமாக்கவேண்டும். இரண்டுகட்ட தடுப்பூசி போதுமானதாக இல்லை என்றால் இதன் மூன்றாம் கட்ட தடுப்பூசியை ஏற்றுவதற்கும் அரசாங்கம் தயாராகவேண்டும்.

உலக நாடுகள் லெண்டா மற்றும் எக்சிலோன் என்ற வைரஸ் பரவி இருக்கின்றது. இது எமது நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இது டெல்ட்டா வைரஸை விட வீரியம் கூடியது என்றே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எக்சிலோன் வைரஸ் பாகிஸ்தானில் பரவி வருகின்றது. இது எமது நாட்டில் ஏற்பட்டால் பாரியளவில் மனித உயிர்கள் பலியாகலாம். அதனால் இதற்கு நாங்கள் தயாராகவேண்டும். அதற்காக சுகாதார கட்டமைப்பை பலப்படுத்தப்படவேண்டும். தேவையான சுகாதார உபகரணங்களை பெற்றுக்கொள்ளவேண்டும். அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றால் தனவந்தர்கள் மற்றும் நாடு புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் உதவி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொவிட் தொற்றுக்குள்ளானோரை வீடுகளில் தங்கவைத்து சிகிச்சை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அப்படியென்றால், அவர்களுக்குத் தேவையான சாதாரண வைத்திய உபகரணங்களையாவது பெற்றுக்கொடுக்க வேண்டும்.

நோய் தீவிரமடைந்தால் வைத்தியசாலைக்கு வருமாறு தெரிவிப்பதால் மாத்திரம் இதனைச் செய்ய முடியாது. அதேபோன்று டொசிலி சுமாப் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக கடந்த மே மாதம் சபையில் தெரிவித்திருந்தேன். தற்போது இந்த மருந்து நாட்டில் பெற்றுக்கொள்வதற்கு இல்லை. இது இருந்திருந்தால் இன்னும் சில உயிர்களை பாதுகாத்துக்கொண்டிருக்கலாம்.

எனவே அரசாங்கம் மனிதாபிமானத்துடன் செயற்பட்டு, சுகாதாரத்துறையினரின் கோரிக்கைக் கமைய நாட்டை இரண்டு வாரங்களுக்கு முடக்கி மக்களின் உயிர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

தமிழர்கள் சுய உரிமை...

ஆகவே, தமிழர்களாகிய நாமும் எங்களது உரிமை தொடர்பில் இப்போதும் ஒரு நிலையான கொள்கையோடு இந்த அரசிடம் நீதி கேட்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாடு மிகப்பெரியதோர் அபாயத்துக்குள் சிக்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது. ஆனால், குருந்தூர் மலையில் பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று பாரிய விகாரையை அமைக்கின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொன்னாலையில் சிறிய குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினைக்காக பொன்னாலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் சென்று அங்குள்ளவர்களை தாக்கியுள்ளனர். இவ்வாறு தாக்கும் அதிகாரத்தை யார் உங்களுக்குத் தந்தது என்று அங்குள்ளவர்கள் கேட்டுள்ளனர்.

எங்கு பார்த்தாலும் இராணுவம் குவிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் மத்தியில் ஓர் இராணுவ அச்சம் பிரயோகிக்கப்படுகின்றது. இந்த நாட்டில் கொரோனா உள்ளது. அதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சரியான நிவாரணம் சென்றடைவதில்லை. இவ்வாறான நிலையில், தமிழ் மக்கள் மீதான விசாரணைகள், நிலப்பறிப்புகள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் தொடர்ந்தும் நடந்துகொண்டே இருக்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி கிடைக்கும்?

இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் இந்த மண்ணுக்குரிய தனித்துவமான அடையாளத்துடன் கூடிய தேசிய இனம். 21ஆம் நூற்றாண்டில் தலிபான் இயக்கம் தன்னுடைய நாட்டை ஆயுத வழியில் வென்றுள்ளது. நாங்கள் ஆயுதம் பற்றி பேசவில்லை. எமது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் 12 ஆண்டுகள் கடந்து பேசுகின்றோம். ஆனால், அமெரிக்கா விட்டுச் சென்றதால் தலிபான்கள் பிடித்தார்கள். ரஷ்யா விட்டுச் சென்றதால் பிடித்தார்கள் என்பது பிரச்சினையல்ல. அவர்களின் தொடர் போராட்டமும் கொள்கைப்பிடிப்பும் அவர்களின் இலக்கு நோக்கிய பயணமும் அவர்களை இன்று தமது தாய்நாட்டை அடைய வைத்திருக்கின்றது. அந்த நாட்டை அவர்கள் மீடடெடுத்துள்ளனர்.

ஆகவே, நாங்கள் கேட்பது ஆயுத ரீதியான போராட்டத்தையல்ல. நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கட்டும், பிரதமராக இருக்கட்டும், சிங்கள தலைவர்களாக இருக்கட்டும். சற்று சிந்தியுங்கள். இன்று உலக ஒழுங்குகள் மாறுகின்றன. உலக சூழல் மாறுகின்றது. எத்தனையோ சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்கு போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தை தந்திருக்கின்றது. தலிபான்களின் விடுதலை என்பது சரியா பிழையா என்பதல்ல. ஆனால், அவர்களினால் முடிந்திருக்கின்றது. ஒரு பெரிய நாட்டை அவர்களினால் மீட்டெடுக்க முடிந்திருக்கின்றதென்றால் அது ஒரு மாற்றம். இந்த உலகப்பந்தில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவ ரீதியிலான, ஆயுத ரீதியிலான ஒரு மாற்றம்.

அவர்கள் அந்த நாட்டை பிடித்து முதலில் தோற்றுப்போனவர்கள். இரண்டாவது தடவை ஆப்கானிஸ்தானை பிடித்துள்ளார்கள். இனி அவர்கள் செய்யப்போகின்ற ஆட்சி, மக்கள் சார்ந்ததா, மக்களின் நலன் சார்ந்ததா என்பதனை காலம்தான் தீர்மானிக்க வேண்டும். அவர்களின் நடவடிக்கைகள்தான் தீர்மானிக்கவேண்டும். ஆகவே, உலகப்பந்தில் எந்த இனமும் சுயத்துடன் வாழ்வதற்கான உரிமையை கோரி நிற்பதில் எந்த தவறும் இல்லை. ஆகவே, தமிழர்களாகிய நாமும் எங்களது உரிமை தொடர்பில் இப்போதும் ஒரு நிலையான கொள்கையோடு இந்த அரசிடம் நீதி கேட்கிறோம். தயவுசெய்து இந்த அரசியல் கைதிகளையாவது நல்லெண்ண அடிப்படையில் பிணையிலாவது விடுவியுங்கள் - என்றார்.

இன்றைய ராசி பலன்

நாள்: 18.08.2021 புதன்கிழமை - ஆவணி 02

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

சுப நேரங்கள்
காலை 4.53 - 5.45

பிரம்ம முகூர்த்தம்
மாலை 4.34 -5.21

அசுப நேரங்கள்

ராகு காலம்
பகல் 12.16-1.48

குளிகை காலம்
மாலை 10.44-12.16

எமகண்ட காலம்
காலை7.40 - 09.12

துர் முகூர்த்தம்
காலை 11.50 - 12.39

மேடம் — பணியிடங்களில் நிறைவேறாத வகைகளில் பிரச்சினைகள் உண்டாகலாம். வங்கிகளில் வேலை செய்பவர்களுக்கும் சில பிரச்சினைகள் உண்டாகலாம்.

ரிஷபம் — தம்பதியரிடையே பிரச்சினைகள் நீங்குவதற்கும், பணம் மற்றும் வேலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறைவதற்கும் இறைவணக்கம் தேவைப்படலாம்.

மிதுனம் — பரம்பரை தொழில் மேம்படும். மருத்துவர்களின் வருவாய் அதிகரிக்கும். பிள்ளைகளின் வேலைகளில் பிரச்சினைகள் நீங்கும்.

கடகம் — தம்பதியரிடையே ஆதரவு நல்ல நிலை பெறும். பணியிடங்களில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பும், பதவி உயர்வுகளும் உண்டாகலாம்.

சிம்மம் — காணி/வீடு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். பிள்ளைகளை அரவணைத்துச் செல்வது நன்மை.

கன்னி — காதலர்களுக்கு பொறுப்பு, பொறுமை தேவைப்படலாம். வணிகத்தில் புதிய எண்ணங்கள் தோன்றும். பயணங்களில் கவனம் தேவைப்படலாம்.

துலாம் — கடன் பிரச்சினை நீங்கத் தொடங்கும். வணிக வேலைகள் சிறப்பாக நிறைவேறும். கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் புதிய பணிகளிலும் சேரும் வாய்ப்பு உண்டாகலாம்.

விருச்சிகம் — மனதில் சில கவலைகளும், அதிருப்தியும் உண்டாகலாம். பணிகளில் கவனமாக இருந்தால், பணியிடங்களில் செல்வாக்கு மேம்படலாம்.

தனுசு — பேச்சில் கவனம் தேவைப்படலாம். பரம்பரை சொத்து விடயங்களில் நன்மை கிடைக்கலாம்.

மகரம் — உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். வணிக பங்குதாரர்களுடன் சிறிய பிரச்சினைகள் தோன்றலாம். செலவுகளில் கவனம் தேவை.

கும்பம் — இல்லற சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிகள் திறமையான முறையில் நிறைவேறும். புதிய வளங்கள் உண்டாகலாம்.

மீனம் — வருவாயில் புதிய நல்ல நிலை தோன்றும். நிதியுதவிகள் கிடைக்கப் பெறலாம். தொழில் பயணங்கள் ஏற்படலாம்.

கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

மொத்த பாதிப்பு	சிகிச்சை பெறுவோர்	குணமடைந்தோர்	புதிதாக அடையாளம்	மரணம்
3,67,400	44,134	3,14,340	2,663	6263

பேருவளை, தர்கா நகரில் 158 பேருக்கு நேற்று முன்தினம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 95 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் 90 வீதமானோர் அளுத்கம பொலிஸ் பிரிவுக்குட்டபட்டவர்கள் என அதிகாரிகள் தெரிவத்துள்ளனர்.

கல்கிஸையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து, பூங்காவை மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

துளிச் செய்திகள்

பாணந்துறை வைத்தியசாலையில் கொரோனா நோய்க்கு சிகிச்சைபெற்றுவந்த 20 வயதான இளைஞர் ஒருவர் வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்றுள்ளார். அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் ஆயிரத்து 208 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பேருவளை சுகாதார வைத்திய பிரிவில் 279 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 23-31 வரை கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் வாரமாக

நாட்டில் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை, கர்ப்பிணித் தாய்மாருக்கு தடுப்பூசி செலுத்தும் நோக்கில், தடுப்பூசி செலுத்தல் வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கர்ப்பிணித் தாய்மார், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கோ அல்லது தடுப்பூசி செலுத்தும் மையத்திற்கோ சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கர்ப்பிணித் தாய்மார், 23 ஆம் திகதிவரை காத்திருக்காமல், தங்களது பிரதேசத்திலுள்ள தடுப்பூசி நிலையத்திற்குச் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், நெரிசல் நிலைக்கு மத்தியில் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என குடும்பநல சுகாதார பிரிவின் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாலூட்டும் தாய்மார், தடுப்பூசி செலுத்திக்கொள்ள எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாலூட்டும் தாய்மார் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனால், தாய்க்கும், சேய்க்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. அத்துடன், தாய்மார் தடுப்பூசி பெற்றுக்கொண்ட உடனேயே குழந்தைக்குப் பாலூட்டவும் முடியும். தடுப்பூசியேற்றத்தால் தாய்ப்பாலூட்டுவதில் எவ்வித பிரச்சினையுமில்லையென விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாங்கொடையில் நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள் விலகல்

பலாங்கொடை மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம் என்பன நேற்று முதல் ஒரு வார காலத்துக்கு நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்திவைக்க முடிவு செய்துள்ளதாக பலாங்கொடை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் தேசபந்து சூரியபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் பரவியுள்ள கொவிட் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களை அவதானமாகச் செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

வைத்தியசாலை யன்னலிலிருந்து பாய்ந்து எம்பிலிப்பிட்டியவில் கொரோனா நோயாளி பலி

கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர் யன்னலிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

உடவளவ பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவதற்கான அனுமதிக்கப்பட்ட நிலையில், அவருக்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

இதன் காரணமாக அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்சிசன் வழங்கப்பட்டபோதிலும் சுவாசிப்பதற்கு சிரமமாக இருப்பதாகவும், இதற்கு உயிரிழப்பதே மேல் எனவும் அவர் தாதியரிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே யன்னலில் பாய்ந்து அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றியவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 - 30 வயதுடையோருக்கு ஒக்டோபர் முதல் தடுப்பூசி

இலங்கையில், 18 – 30 வயது வரை உள்ளவர்களுக்கு ஒக்டோபர் மாதம் முதல் கொரோனா தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

செப்டெம்பர் இறுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று நள்ளிரவு முதல் மறுஅறிவித்தல் வரை திருமண நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை

கொரோனா தொற்றின் தீவிரத்தால் நேற்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல்வரை, வீடுகளிலும், மண்டபங்களிலும், திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதியில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வெளியிடப்பட்டிருந்த அறிவிப்பிற்கமையவே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், பதிவுத் திருமணத்தை நடத்துவதாயின், சம்பந்தப்பட்டவர்களின் வீட்டில் அதனை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, மணமகன் மற்றும் மணமகள் ஆகியோருடன், அவர்களின் பெற்றோர்களும், பதிவாளரும், சாட்சியாளர்கள் இருவரும் பங்கேற்க முடியும். இதனைத் தவிர்த்து வேறு எவருக்கும் இதன்போது பங்கேற்க அனுமதியில்லை.

கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்த தனியான நிலையங்களை அமைக்குக

குடும்பநல சுகாதார சேவை சங்கம் கோரிக்கை

கர்ப்பிணித் தாய்மாருக்கென தனிப்பட்ட தடுப்பூசி செலுத்தல் நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமென குடும்பநல சுகாதார சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் தடுப்பூசி நிலையங்களுக்கு கர்ப்பிணித் தாய்மார் செல்வதால், அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மேலும், தடுப்பூசி நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் மத்தியில், டெல்ட்டா திரிபு தொற்றுடையவர்கள் இருக்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது பிரதேச வைத்தியசாலையிலோ வாரத்திற்கு ஒரு முறையேனும் அல்லது சில மணித்தியாலங்கள் ஒதுக்கியேனும் கர்ப்பிணித் தாய்மாருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்கும் டெல்ட்டா ஆபத்து; பெற்றோருக்கு அதிக கவனம் தேவை

வைத்தியர் தீபால் பெரேரா வலியுறுத்து

கொரோனா வைரஸ் வேகமாக பரவுகின்ற நிலையில், குழந்தைகள் குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும் என சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா, பெற்றோர்களிடம் கோரியுள்ளார். டெல்ட்டா திரிபு அதிகமாக பரவுகின்றமையால், குழந்தைகளுக்கும் தொற்று ஏற்படக்கூடிய அபாயமுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, வைத்திய கண்காணிப்பின் கீழ் மாத்திரம் குழந்தைகளை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டும். அதனைத் தவிர்த்து, பொதுமக்கள் தாங்களாகவே தீர்மானம் எடுத்து, குழந்தைகளை வீட்டில் வைத்திருக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 2 வயதிற்கும் குறைந்த குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு கொவிட்-19 தொற்றுறுதியானால், விரைவாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 18 ஆம் திகதி, புதன்கிழமை

சவால்களை சமாளிப்பார்களா தலிபான்கள்!

ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை உலகத்தை அதன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை திரும்பப் பெறுவது என்று அமெரிக்கா முடிவெடுத்தபோதே விரைவில் தலிபான்களின் ஆட்சி அங்கே நிலைநாட்டப்படும் என்பதை உலகம் எதிர்பார்த்தது. எதிர்பார்த்ததுபோலவே, ஆப்கானிஸ்தான் தேசிய அரசு வீழ்த்தப்பட்டு தலைநகரமான காபூலை தலிபான்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். ஜனாதிபதி அஷ்ரப் கனி நாடுவிட்டு தப்பியோடிவிட்டார். தலிபான் தலைவர் முல்லா அப்துல் கனி தன்னை புதிய ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டுள்ளார்.

1989 பெப்ரவரி மாதம் சோவியத் யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து பின்வாங்கியபோது மதரஸாக்களில் அடிப்படைவாத கொள்கைகளுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்ட ஆயுதப்போராளிகள் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்ப முற்பட்டனர். கடுமையான உள்நாட்டுப் போருக்குப் பிறகு 1996இல் தலிபான்களால் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிக் அமீரகம் நிறுவப்பட்டதும், உருவ வழிபாடு தங்களது மதக்கொள்கைக்கு எதிரானது என்பதால் வரலாற்றுச் சிறப்புமிக்க புத்தர் சிலைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

எல்லோரும் நினைப்பதுபோல் ஆப்கானிஸ்தானிலுள்ள மக்களின் பெரும்பான்மை ஆதரவு தலிபான்களுக்குக் கிடையாது. தலிபான் என்பவர்கள் ஆப்கானிஸ்தானின் மக்கள்தொகையில் 45 வீதமானவர்கள் மட்டுமே உள்ள பஷ்டூன் பிரிவினரின் பிரதிநிதிகள். ஏனைய அனைத்து இனக்குழுவினரும் பஷ்டூனையும், தலிபான்களையும் எதிர்ப்பவர்கள், வெறுப்பவர்கள். தலிபான்களுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு தலைமை தாங்கும் திஜிக்ஸ் பிரிவினர் 35 வீதம் இருக்கிறார்கள்.

1996இல் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்ததுமுதல் உலகிலுள்ள எல்லா பயங்கரவாத அமைப்புகளுடனும் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டதுடன், அவற்றுக்கு ஆதரவு வழங்குவதையும் வழக்கமாக்கிக்கொண்டனர் தலிபான்கள். அந்த அமைப்புகளில் அல்குவைதாவும் ஒன்று.

அமெரிக்காவிலுள்ள இரட்டைக் கோபுரங்கள் மீது அல்கொய்டா தாக்கியதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் தலையிடவேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அமெரிக்கப் படைகளால் விரட்டியடிக்கப்பட்ட தலிபான்கள், பாகிஸ்தானில் தங்கி அங்கிருந்து செயல்பட்டனர். ஆனால், சர்வதேச விசித்திர அரசியல் என்னவென்றால் அது தெரிந்தும் கூட பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பொருளாதார உதவிகள் வழங்கிவந்ததுதான். ஒசாமா பின்லேடனுக்கு அடைக்கலம் வழங்கியிருந்த பாகிஸ்தானின் சாயம் வெளுத்தபோதுதான் அமெரிக்கா சற்று உஷாரடையத் தொடங்கியது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளால் காபூலிலிருந்தும், ஆப்கானிஸ்தானிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்ட தலிபான்கள், அதே அமெரிக்காவின் நிலைப்பாட்டால் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தங்களது கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தானைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி ஜல்மே கலிஜாத், தலிபான்களை கெஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கைப்பற்றியிருக்கும் ஆப்கானிஸ்தானை தலிபான் தலைமை எப்படி ஆட்சிசெய்வது என்பதில் தெளிவாகவே இருக்கிறது. அதன் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா மொஜாஹிர், கடுமையான முறையில் இஸ்லாமியர்களின் ஷரிஆ சட்டத்தின் அடிப்படையில்தான் ஆட்சி நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார். ஜனநாயக ரீதியான தேர்தல்கள் கிடையாது என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தங்களது ஜிஹாத் தொடரும் என்கிற அறைகூவலுடன் காபூலைக் கைப்பற்றியிருக்கிறார்கள் தலிபான்கள்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான் சென்றிருப்பதை பாகிஸ்தானைத் தவிர, ஏனைய நாடுகள் கவலையுடன்தான் எதிர்கொள்கின்றன. மத்திய ஆசியாவிலுள்ள தஜிகிஸ்தான் போன்ற முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளில் தலிபான்கள் ஊடுருவிவிடக்கூடாது என்று ரஷ்யா அச்சப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய பகுதிகளில் வாழும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துமோ என்கிற எச்சரிக்கையுடன்தான் ஈரானும் இருக்கிறது. சீனாவின் ஷின்ஜியாங் மாநிலத்திலுள்ள இஸ்லாமியர்களின் சார்பாக இயங்கும் கிழக்குதுர்கிஸ்தான் விடுதலை இயக்கத்தினருக்கு தலிபான்கள் உதவக்கூடாது என்றும், ஆப்கானிஸ்தான் தேசிய அரசுடன் சமாதானமாகப் போகவேண்டும் என்றும் சீனா விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படாததற்கு தலிபான்கள் மீது பீஜிங்கிற்கு வருத்தம் உண்டு. ஆனாலும் தலிபான்களுடன் உறவு பாராட்ட துணிந்திருக்கும் சீனா அதற்கூடாக தனது அரசியலை நகர்த்த வியூகம் வகுக்கிறது. காபூலிலிருந்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் வெளியேற படாதபாடுபட்டுக்கொண்டிருக்கும் சமயம் சீனாவோ தமது இராஜதந்திரிகளை அங்கிருந்து அகற்றவில்லை.

கடந்த வியாழக்கிழமை கட்டாரில் அமெரிக்கா, இந்தியா, சீனா மட்டுமல்லாமல் ஐ.நா. சபை, ஐரோப்பியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய 12 நாடுகள் கூடின. சமாதானத்தின் மூலம் அல்லாமல், இராணுவத்தால் காபூல் கைப்பற்றப்பட்டால் அந்த அரசுக்கு அங்கீகாரம் வழங்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கின்றன. ரஷ்யா என்ன முடிவெடுக்கும் என்பது இன்னும் தெரியவில்லை. நிச்சயமாக தலிபான்களை ஆதரிக்க வாய்ப்பில்லை. அதனால், காபூலில் அமையப் போகும் ஆட்சிக்கு பக்கபலமாக இருக்கப்போவது பாகிஸ்தான் மட்டுமாகத் தான் இருக்கும். சில மறைமுக காய்நகர்த்தல்களால் சீனாவும் ரஷ்யாவும் தலிபான்களுடன் இருக்கும் என்பதையும் சொல்லிவைக்கவேண்டும்.

அமெரிக்காவுக்கு தீவிரவாத இயக்கங்களை வளர்ப்பது வழக்கமாகிவிட்டது. ஈராக்கிலிருந்து அரைகுறையாக வெளியேறியபோது அந்த வெற்றிடத்தை ஐஎஸ் பயங்கரவாதிகள் நிரப்பி பேரழிவை ஏற்படுத்தினர். ஐஎஸ் பயங்கரவாதத்தால் பிரிட்டன், மேற்கு ஐரோப்பா, ஜேர்மனி, துருக்கி ஆகிய நாடுகள் பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றன. இப்போது அதேபோல் ஆப்கானிஸ்தானைக் கைகழுவி தலிபான்களை நிலைநிறுத்தியிருக்கிறது. அணுவாயுதங்களை சாட்டாகவைத்து ஈராக்கை நாசமாக்கிய மேற்குலக நாடுகள் இப்போது ஆப்கானை குழியில் தள்ளியுள்ளன .

ஆனால், இப்போது இதில் இன்னொரு பக்கமும் இருக்கிறது. தலிபான்கள் தமக்குள்ள பட்டறிவைக்கொண்டு நியாயமான ஆட்சியொன்றை நடத்த முயற்சிக்கலாம். இப்போது விமான நிலையங்களிலிருந்து வெளியேறத் துடிக்கும் மக்களுக்கு உத்தரவாதமொன்றை வழங்கி நல்லாட்சியொன்றை நடத்த முயற்சிக்கலாம். ஆனால், ஆயுதம் ஏந்தியே பழக்கப்பட்ட அல்லது ஆயுதமுனையில் பிரச்சினைகளைத் தீர்த்து பழகிய தலிபான்களுக்கு இது இலகுவான சவால் அல்ல . அந்த சவால்களில் அவர்கள் வெல்லுவார்களா இல்லையா என்பதை அடுத்த சில மாதங்கள் சொல்லிவிடும். ஆனால், நடப்புகளை பார்க்கையில் இந்த சவால்களை சந்தித்து சமாளிக்கும் நிலையில் தலிபான்கள் இல்லை. அதுவே உண்மை.

புரட்சி நாயகன் நேதாஜி!

(நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 76ஆவது நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

“எனக்கு இரத்தம் கொடுங்கள், உங்களுக்கு சுதந்திரத்தைப் பெற்று தருகிறேன்” என கூறிய இந்திய புரட்சிநாயகன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேயரை எதிர்த்து, இராணுவ ரீதியாக போராடிய ஈடிணையற்ற மாவீரன் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இந்தியாவின் முதல் இராணுவத்தை கட்டமைத்து இந்தியர்களின் ஆயுதக் கையாளுமையை உலகறியச் செய்தவர். மாபெரும் சாம்ராஜ்யத்தை அசைத்துப் பார்க்கும் அவர் முயற்சி சற்று பின்னடைவை சந்தித்தாலும், அவரது வீரம் என்றென்றும் நினைவு கூரத்தக்கது. சுதந்திர இந்தியாவுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட நேதாஜி ஒவ்வொரு இந்தியனின் நெஞ்சிலும் இன்றளவும் நீங்கா இடம் பெற்றிருக்கிறார்.

1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி இந்தியாவின் ஒரிசா மாநிலத்திலுள்ள கட்டாக் என்ற இடத்தில் ஜானகிநாத் போஸுக்கும், பிரபாவதி தேவிக்கும் ஒன்பதாவது மகனாக ஒரு வங்காள இந்து குடும்பத்தில் பிறந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

ஆசிரியருடன் தகராறு

நேதாஜி சுபாஷ் சந்திர சிறுவயதிலிருந்தே விவேகானந்தர் போன்றோரின் ஆன்மீகக் கொள்கைகளை படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தவர். 1915ஆம் ஆண்டு கொல்கத்தா ப்ரெசிடென்ஸி கல்லூரியில் இந்தியாவிற்கு எதிரான கருத்துகளை சொன்ன ஆசிரியருடன் தகராறு செய்து அதனால் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டார்.

லண்டனில் ஐ.சி.எஸ்.

‘‘ஸ்கொட்டிஷ் சர்ச் கல்லூரியில்’’ சேர்ந்து இளங்கலைப் பட்டம் பெற்ற அவர், தன்னுடைய பெற்றோர்களின் விருப்பத்திற்காக 1919ஆம் ஆண்டு ஐ.சி.எஸ். தேர்வுக்கு படிக்க லண்டனுக்கு சென்றார். ஐ.சி.எஸ். தேர்வில் நான்காவது மாணவனாக தேர்ச்சிப்பெற்றார்.

திருப்புமுனை தந்த ஜாலியன் வாலாபாக்

1919ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவமே சுபாஷ் சந்திர போஸை சுதந்திர போராட்டத்தில் ஈடுபட காரணமாக அமைந்தது. அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், வெள்ளையர் ஆட்சி மீது சுபாஷ் சந்திர போஸுக்கு வெறுப்புணர்வை அதிகரித்தது. உடனடியாக லண்டனில் தன்னுடைய பணியை துறந்து 1921ஆம் ஆண்டு இந்தியா திரும்பி வந்தார் சுபாஸ் சந்திர போஸ்.

‘நேதாஜி’ பட்டம்

1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்தெடுக்கப்பட்ட சுபாஷ், “நான் தீவிரவாதிதான். எல்லாம் கிடைக்கவேண்டும் அல்லது ஒன்றுமே தேவையில்லை என்பதுதான் எனது கொள்கை” என முழங்கினார். சுபாஷ் காங்கிரஸ் தலைவரானதும் ரவீந்திரநாத் தாகூர் அழைத்து, அவருக்குப் பாராட்டு விழா நடத்தியதோடு மட்டுமல்லாமல், ‘நேதாஜி (மரியாதைக்குரிய தலைவர் என்பது பொருள்) என்ற பட்டத்தையும் அவருக்கு வழங்கினார்.

காதல் மனைவி

நாட்டின் விடுதலைக்காக வியன்னா, செக்கோஸ்லோவேகியா, போலந்து, ஹங்கேரி, இத்தாலி, ஜேர்மனி, ஐரோப்பா, ஆஸ்திரியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்த நேதாஜி, ஆஸ்திரியாவை சேர்ந்த எமிலி என்பவரை டிசம்பர் 27, 1937ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு 1942ஆம் ஆண்டு, அனிதா போஸ் என்ற மகளும் பிறந்தார்.

காந்தியும் நேதாஜியும்

1939 ஆம் ஆண்டு, இரண்டாவது முறையாக காங்கிரஸ் தலைவர் பதவிக்கு நேதாஜி போட்டியிட்டார். போஸின் செல்வாக்கு உயர்ந்து வருவதைக்கண்ட காந்தி, அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தினார். காந்தியின் வேட்பாளர் தோல்வியடையவே, தனக்கு பெரிய இழப்பு என்று கருதிய காந்தி, உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். இதனால், நேதாஜி காங்கிரஸ் கட்சியிலிருந்து தானாகவே வெளியேறினார்.



நேதாஜியின் போராட்டம்

1941ஆம் ஆண்டு “சுதந்திர இந்திய மையம்” என்ற அமைப்பைத் தொடங்கிய நேதாஜி, சுதந்திர இந்திய வானொலியை பேர்லினிலிருந்து தொடங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய விடுதலைப் போராட்டத்தை மையப்படுத்தியும் உலகப்போர் பற்றிய செய்திகளையும் இதில் ஒளிபரப்பினார்.

நீடிக்கும் மர்மம்

ஓகஸ்ட் 18, 1945ஆம் ஆண்டு நேதாஜி பயணம் செய்த விமானம் பர்மோசா தீவுக்கு அருகே விபத்துக்குள்ளாகி அவர் இறந்துவிட்டார் என ஜப்பானிய வானொலி அறிவித்தது. இந்தச் செய்தி, இந்திய மக்களை நிலைக் குலைய செய்தது. நேதாஜி இறந்துவிட்டார் என்பதை பலரும் நம்பவில்லை. இறுதிவரை அவருடைய மரணம் மர்மமாகவே புதைந்துவிட்டது.

இளைஞர்கள் மனதில்

தன் உயிரையே பணயம் வைத்து ஜேர்மனியிலும், ஜப்பானிலும், கிழக்காசிய நாடுகளிலும் அலைந்து திரிந்து ஒரு தற்காலிக சுதந்திர அரசை அமைத்து இந்திய தேசிய இராணுவத்தைத் திரட்டி போரிட்டு உலக வரலாற்றிலேயே ஒரு புதிய சாதனையை - அத்தியாயத்தை உருவாக்கியவர் நேதாஜி. புரட்சியை நேசிக்கும் உலக இளைஞர்கள் மனதில் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதே உண்மை.

மக்கள் கடிதம்

வாசகர்களே ,

உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.

பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

சூரியவெவவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவர் பலி

சூரியவெவ, வெவேகம வீதி மஹவெலிகடார சந்தியில் தங்க ஆபரண திருடர்கள் மற்றும் பொலிஸாருக்கிடையில் நேற்று(17) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராம, தெபரவெவ பிரதேசத்தில் தங்கச்சங்கிலியை அறுத்துச் செல்வதாக அந்த பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்து கிடைத்த தகவலுக்கமைய, இவர்கள் இருவரையும் கைதுசெய்வதற்காக பொலிஸார் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய, சூரியவெவ பொலிஸ் குழுவினர் திருடர்களின் பின்னால் சென்றபோது மோட்டார் சைக்கிளில் பயணித்த திருடர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதுடன், பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் திருடர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

திருடர்கள் துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தர்ப்பத்தில் அதிலிருந்து தப்பிப்பதற்காக சென்ற பொலிஸ் ஜீப் ரக வாகனம் வீதியிலிருந்து விலகி மரத்தில் மோதியதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற ஊழியர்கள் 12 பேருக்கு கொரோனா

நேற்று உறுதிசெய்யப்பட்டதாக படைக்கல சேவிதர் தகவல்

யோ.தர்மராஜ்

டெல்டா தொற்றின் தீவிரத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை 9 மணிமுதல் 12 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட 275 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே இவ்வாறு 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சி.சி.ரி.வி. காணொளிகளை பயன்படுத்தி நோயாளர்களுடன் நெருங்கியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு, மறுஅறிவித்தல்வரை நாடாளுமன்ற காரியாலயங்களில் குறைந்தளவான பணியாட்களைக்கொண்டு சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக நாட்டின் பல்வேறு நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், பண்டாரவளையில் கடைகள் நேற்று மூடப்பட்டிருந்ததை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பதுளை செய்தியாளர்)

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தில் நேற்று (17) நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பு கோராத நிலையிலேயே கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக இம்மாதத்தின் இரண்டாவது சபை அமர்வை ஒருநாள் மாத்திரம் மேற்கொள்ள ஆளும், எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் தீர்மானித்திருந்தன. அதன்பிரகாரம் நேற்று நாடாளுமன்றம் கூடியது.

கொவிட்-19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் சமர்ப்பித்து ஆரம்ப உரையை நிகழ்த்தினார். கொவிட் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதாக அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஆளும், எதிர்க்கட்சிகள் சட்டமூலத்தின்மீது விவாதத்தில் ஈடுபட்டன. கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாகவும் முறையான திட்டமிடல் இல்லாது தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதால்தான் தொற்றை கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ்சுமத்தினர்.

விவாதங்களும் நிறைவுற்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் திருத்தங்களுடன் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தலால் 11 ரயில் நிலையங்களுக்கு பூட்டு

எப்.எம். அஸ்லம்

கொரோனா தொற்றின் தீவிரத்தால் 11 புகையிரத நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர ஜயசேகர 'தமிழனுக்கு' நேற்று (17) தெரிவித்தார்.

அதன்படி, இந்துருவ, ரத்கம, வில்வத்த, தல்பே, ஹெட்டிமுல்ல, எகொடஉயன, பன்னிப்பிட்டிய, உலுகஸ்கொடை, தும்மோதர, ரம்புக்கனை மற்றும் களுத்துறை வடக்கு புகையிரத நிலையங்களே மூடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புகையிரத சேவை துணைத்துறையின் கீழுள்ள ஊழியர்களில் 115 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது, அதன்படி, புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் 41 பேருக்கும் 14 கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் 60 ஊழியர்கள் என 115 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

198 புகையிரத நிலையங்களில் அதிகளவான புகையிர நிலையங்களுக்கு கொரோனா தொற்று அச்சுறுத்தல் காணப்படுகின்ற நிலையில், மிக ஆபத்தான நிலையிலேயே புகையிரத போக்குவரத்துகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் 327 ரயில்வே ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று 101 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் மேலும் 101 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் நேற்று (17) தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், கோயில்புதுக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், வவுனியாவில் பணிபுரியும் மல்லாவியைச் சேர்ந்த ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் ஒருவருக்கும், மகாகச்சகொடி பகுதியில் எட்டு பேருக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், சின்னப்புதுக்குளம் பகுதியில் ஆறு பேருக்கும், நாகர்இலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் மூன்று பேருக்கும், குருக்கள்புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை, செக்கட்டிப்புலவு பகுதியில் ஆறு பேருக்கும், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மணிபுரம் பகுதியில் ஒருவருக்கும், கப்பாச்சி பகுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் ஒருவருக்கும், மணியர்குளம் பகுதியில் ஒருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், குடாகச்சகொடி பகுதியில் ஒருவருக்கும், கல்மடு பகுதியில் நான்கு பேருக்கும், தோணிக்கல் பகுதியில் நான்கு பேருக்கும் கொரோனா ஏற்பட்டுள்ளது.

நெளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பூங்கா வீதி நகரசபை விடுதியில் ஒருவருக்கும், வவுனியாவில் பணிபுரியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவருக்கும், தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் ஆறு பேருக்கும், தேக்கவத்தை பகுதியில் ஒருவருக்கும், புதுவிளாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், உளுக்குளம் பகுதியில் இருவருக்கும், மகாமயிலங்குளம் பகுதியில் இருவருக்கும், அம்பலாங்கொட பகுதியில் மூன்று பேருக்கும், அலகல்ல பகுதியில் இருவருக்கும், அவுசலப்பிட்டிய பகுதியில் இரண்டு பேருக்கும், கெப்பற்றிக்கொல்லாவ பகுதியில் ஒருவருக்கும், டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் இருவருக்கும், மதவுவைத்தகுளம் பகுதியில் ஒருவருக்கும், மூன்றுமுறிப்பு பகுதியில் ஒருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் இரண்டு பேருக்கும், கல்குண்ணாமடு பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தைப் பகுதியில் ஒருவருக்கும், கந்தசாமி கோவில் வீதியில் ஒருவருக்கும், சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் ஒருவருக்கும், கல்மடு பகுதியில் ஒருவருக்கும், புதியகோவில்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், பூவரசன்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், கைதராமணி ஆடைத் தொழிற்சாலையில் இருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் மூன்று பேருக்கும், மெனிகபாம் பகுதியில் ஒருவருக்கும், சின்னக்குளம் பகுதியில் ஒருவருக்கும் என 101 பேருக்கு கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அளிக்கம்பையில் பன்றிக்கு வெடி வைக்க முயன்றதில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் தம்பதியினர் படுகாயம்

(கனகராசா சரவணன்)

அம்பாறை அளிக்கம்பை பிரதேசத்தில் பன்றிக்கு வெடி வைக்க வெடியை வீட்டில் வைத்து தயாரித்தபோது வெடி வெடித்ததில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று அளிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய குலன் மற்றும் அவரது மனைவியான 62 வயதுடைய வெங்கட்மேரி என்பவர்களே இவ்வாறு படுகாயமடைந்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குறித்த பகுதி காட்டை அண்டிய பகுதியான இந்தக் கிராமத்தில் இரவில் யானைகள் மற்றும் காட்டுவிலங்குகள் ஊடுருவி பயிர்ச்செய்கைகளை நாசப்படுத்தி வருவது வழமையானது. இந்நிலையில், நேற்று மாலை 4.30 மணியளவில் குறித்த வீட்டில் யானை வெடிகளை பிரித்து அதிலுள்ள மருந்துகளை ஒன்றிணைத்து அதனை பன்றிக்கு வெடிக்கவைக்க வெடி தயாரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தவறுதலாக அந்த வெடி வெடித்ததில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர்களை பனங்காடு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசென்றபோது அங்கு அவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாதென வைத்தியர் தெரிவித்த நிலையில், வைத்தியர் மீது ஓட்டோ சாரதி தாக்கமுற்பட்ட நிலையில் அங்கிருந்து அவர்களை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 70 கிலோ உலர் மஞ்சளுடன் ஒருவர் கைது

கற்பிட்டி களப்பு பகுதியிலுள்ள கிளித்தீவில் கடற்படையினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த 370 கிலோ உலர் மஞ்சளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத வியாபார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையினரால் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, நேற்று கிளித்தீவுக்கு வருகைதந்திருந்த டிங்கி இயந்திரத்தினூடாக வள்ளத்துக்குள் சந்தேகத்துக்கிடமான பொதிகள் மாற்றம் செய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 10 பைகளில் பொதியிடப்பட்டிருந்த 370 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. டிங்கி இயந்திரம் மற்றும் வள்ளம் என்ப கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி, முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக சின்னப்பர்டு சுங்க நிவாரண காரியாலயத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக கிளிநொச்சி சந்தை முடக்கம்

கிளிநொச்சியில் கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில், கிளிநொச்சி சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்றும் பொருத்தமான பொது இடங்களில் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் கரைச்சி பிரதேச சபை அறிவித்துள்ளது.

வியாபாரிகளும் மக்களும் சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றி நடந்துகொள்ளுமாறும் பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது.

பாதுக்க பிரதேசத்தில் 120 பேருக்கு கொரோனா

நாட்டின் பல்வேறு இடங்களிலும் உப கொரோனா கொத்தணிகள் உருவாகியுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுக்க பிரதேசத்தில் நேற்று 121 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டதில் 120 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, பதுளை – ஹப்புத்தளையில் 230 பேருக்கு துரித அன்ரிஜன் பரிசோதனை நடத்தப்பட்டதில் 45 பேருக்கு தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

இதேவேளை, பண்டாரவளையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் 92 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் வீதிகளில் மக்கள் நேற்று முகக்கவசம் அணியாமல் நடமாடியதை படங்களில் காணலாம்.
(படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)

ஹட்டன் நகரத்தை உடனடியாக முடக்கி பொதுமக்களுக்கு பாதுகாப்பு தாருங்கள்

நகர சபை உறுப்பினர் நந்தகுமார் வேண்டுகோள்

(எம்.கிருஷ்ணா, இரா.யோகேசன்)

ஹட்டன் நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் அண்மைக்காலமாக கொரோனா பரவல் வெகுவாக அதிகரித்து வருகின்றது. எனவே, உடனடியாக ஹட்டன் நகரத்தை முடக்கி சன நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நகர வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என ஹட்டன் – டிக்கோயா நகர சபை உறுப்பினரும், முன்னாள் நகர பிதாவுமான டாக்டர் அழகமுத்து நந்தகுமார் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டில் கொரோனா மற்றும் டெல்டா வைரஸ் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மலையகமும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணித்தவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து காணப்படுகின்றது. அந்தவகையில், ஹட்டன் நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் கொரோனா பரவலும் மரணங்களும் தினசரி அதிகரித்த வண்ணம் உள்ளன.

நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு இரத்தினபுரி, பலாங்கொடை, பதுளை, பண்டாரவளை, கேகாலை முதலான நகரங்களை இரண்டு வார காலத்துக்கு மூடுவதற்கு அங்குள்ள வர்த்தக சங்கங்கள் தாமாகவே முடிவெடுத்து, மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளன. அதேபோல், மலையகத்தின் முக்கிய கேந்திர நிலையமாகக் காணப்படும் ஹட்டன் நகர வர்த்தகர்கள் உடனடியாக கடைகளை மூடுவதற்கு முன்வரவேண்டியது அவசியமாகும். நகரம் முடங்கும்போது பொதுமக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விடும். ஓரளவுக்கேனும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்த விடயத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

மேலும், பொதுமக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் நகரங்களுக்கு வருகைதருவதோடு, அநாவசிய பயணங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு, நகரத்தில் நூற்றுக்கணக்கான முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் பயணிக்கும் மக்களின் நலன் கருதி அடிக்கடி தொற்று நீக்கும் கிருமிநாசினியை தெளித்துக் கொள்வதிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் பொதுமக்கள் முகக்கவசம் அணியாமலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமலும் வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்வதன் மூலம் ஹட்டன் நகரத்தையும், மக்களையும் காப்பாற்ற முடியும் என்பதை உணர்ந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

ஹட்டனில் 32 பேருக்கு கொரோனா; தொண்டமான் பயிற்சி நிலையம் மூடல்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஹட்டன் நகரசபைக்குட்பட்ட பகுதியில் 32 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரச வங்கி மூடப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்றாளர்களோடு தொடர்பைப் பேணிய 52 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஹட்டன் நகர சபை ஊழியர்கள் 11 பேருக்கும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் கடமையாற்றிய 10 பேருக்கும் ஹட்டன் நகரிலுள்ள அரச வங்கி ஊழியர்கள் 09 பேர் மற்றும் நகர பகுதியைச் சேர்ந்த 32 பேருக்கு நேற்று தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களை அவர்களது வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது அரசு; மக்கள் சுயமுடக்கத்துக்கு தயாராக வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்

கொரோனா வைரஸ் பரவலை உரிய வகையில் கட்டுப்படுத்தி நாட்டுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் தவறியுள்ளது. அத்துடன், சுகாதார தரப்புகளால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு செவிமடுக்காமல் தான்தோன்றித்தனமாகவும் செயற்பட்டுவருகின்றது. நாட்டுமக்கள் செத்து மடிந்தாலும் பரவாயில்லை பொருளாதாரம்தான் முக்கியம் என்ற மனநிலையில் இருக்கும் ஆட்சியாளர்களை இனியும் நம்பமுடியாது.

எனவே, நாட்டு மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சுய முடக்கத்துக்கு தயாராக வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் அவசர வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் நேற்று விடுக்கப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா முதலாவது அலை ஏற்பட்டபோதே உரியவகையில் செயற்பட்டு முறையான கொள்கைத் திட்டங்களை வகுத்திருந்தால் 2ஆவது அலை ஏற்பட்டிருக்காது. ஆனால், எவ்வித தூரநோக்கு சிந்தனையுமின்றி நாட்டை ஆளுந்தரப்பு திறந்துவிட்டது. விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறைகளை விடுத்து, மூட நம்பிக்கையின் பின்னால் ஓடியது. முழு உலகமுமே தடுப்பூசிக்கு தயாராகும்போது, பாணி கூத்து, பானை கூத்து என கோமாளி கூத்துகள் அரங்கேற்றப்பட்டதால்தான் இன்று 3ஆவது அலை தாண்டவமாடுகின்றது.

போரை முடித்த எங்களுக்கு கொரோனா சிறுவிடயம் என மார்தட்டியவர்கள், இன்று விழிபிதுங்கி நிற்கின்றனர். தற்போதைய சூழ்நிலைக்கு அரசாங்கமே முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும். கொரோனா மரணங்களை படுகொலைகளாகவே கருத வேண்டியுள்ளது.

மக்கள் வீதிகளிலும், வீடுகளிலும் செத்து மடியும் நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் நிலையிலும் உயிர் குறித்து சிந்திக்காமல், பொருளாதாரம் பற்றியே அரசாங்கம் கதைக்கின்றது. பொருளாதாரத்தைவிடவும் உயிர் மேலானது என்பது அவர்களுக்கு புரியவில்லை. இதயமற்ற, இரக்கமற்ற இந்த அரசுக்கு மக்களின் வலி, வேதனை எங்கு புரியப்போகின்றது?

தடுப்பூசி கதைகூறி சமாளிக்க பார்க்கின்றது. ஆனால், தடுப்பூசி திட்டம்கூட முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை. முதலாவது டோஸை பெற்றவர்களுக்கு 2ஆவது டோஸ் கிடைப்பது உறுதியற்ற நிலைமையே காணப்படுகின்றது. வீட்டில் இருக்கும் தொற்றாளர்களுக்கு மருத்துவ வசதிகள் இல்லை. பி.சி.ஆர். பரிசோதனையின் அளவும் குறைவடைந்துள்ளது. எழுமாறாகக்கூட பரிசோதனைகள் உரியவகையில் முன்னெடுக்கப் படுவதில்லை.

இவ்வாறு எல்லாவழிகளிலும் தோல்வி கண்டுள்ள இந்த அரசாங்கத்தை இனியும் நம்பமுடியாது. நிலைமை தற்போது மோசமாகியுள்ளது. சமூகத்தொற்று ஏற்பட்டுவிட்டது. எனவே, தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டிய நிலைதான் உருவாகியுள்ளது. ஆகவே, சுய கட்டுப்பாடுகளை, முடக்கத்தை பின்பற்றுமாறு மக்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத சிகரெட்டுகளுடன் சீனப் பிரஜை உள்ளிட்ட இருவர் கைது

பொல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ப்ரோட்லன்ட் பிரிவில் நேற்று முன்தினம் மஸ்கெலியா விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக தீர்வை வரியின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரும் பொல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடமிருந்து 2 ஆயிரத்து 700 கிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சீனாவைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரும் மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்து இருவரும் பொலிஸாரினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். பொல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நுவரெலியா மாவட்ட வாகன சாரதி பயிற்சி பரீட்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

திகதிகள் பின்னர் அறிவிக்கப்படவுள்ளன

(கினிகத்தேனை நிருபர்)

மோட்டார் வாகன திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட கிளையினால் வாகன சாரதி பயிற்சி தொடர்பாக மேற்கொள்ளப்படும் எழுத்துமூல பரீட்சைகள் மற்றும் செயல் முறை பரீட்சைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் அதிதீவிரமாக பரவிவரும் கொவிட் தொற்று காரணமாக நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிரதேசங்களிலும் கொவிட்-19 பரவல் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக ஹட்டன், மஸ்கெலியா, நோர்வூட், தலவாக்கலை, நுவரெலியா போன்ற பிரதேசங்களில் தற்போது தொடர்ச்சியாக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

அதேபோல் ஒன்றுகூடலுக்கும் அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மோட்டார் வாகனத்தின் நுவரெலியா கிளையில் முன்னெடுக்கப்படும் பரீட்சைகள் மற்றும் செயன்முறை பரீட்சைகள் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து நடைபெறவிருக்கும் பரீட்சைகள் மற்றும் செயன்முறை விடயங்கள் வாகன கற்றல் நிலையங்களூடாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த மாத்தளையில் விசேட நடவடிக்கை

மாநகர முதல்வர்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை நகரில் கொவிட் வைரஸ் தாக்கம் மிக வேகமாக தீவிரமடைந்துவரும் நிலையில், வைரஸை கட்டுப்படுத்திட மாத்தளை மாநகர சபை அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் தெரிவித்தார்.

மாத்தளை மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று மாத்தளை மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தற்பொழுது கொவிட் வைரஸ் நாட்டில் வேகமாக பரவி பல உயிர்களை காவுகொண்டு வரும் நிலையில், அரசாங்கமும் இதனைக் கட்டுப்படுத்தி மனித உயிர்களை பாதுகாத்திட பல முயற்சிகளை மேற்கொண்டு வருவது நாம் கோடிட்டு காட்ட வேண்டும். கொரோனா வைரஸ் தற்போது மாத்தளை நகரை ஆக்கிரமித்து சுமார் 40இற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, மாத்தளை நகரில் வாழும் மக்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டியது மாத்தளை மாநகர சபையின் தலையாயக் கடமையாகும். இதனடிப்படையில் மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் 13 வட்டாரங்களையும் உள்ளடக்கியவாறு 13 சுகாதார சிகிச்சைப் பிரிவுகளை அவசரமாக நிர்மாணித்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதோடு இந்த ஒவ்வொரு சிகிச்சைப் பிரிவும் மாத்தளை மாநகர ஆணையாளரின் நேரடி கண்காணிப்பில் 24 மணிநேரமும் இயங்கிட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு நோயாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் மற்றும் மாநகர சபை சுகாதார பிரிவுகளுக்குமிடையே அவசர தொலைத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக 24 மணிநேர தொலைபேசி தொடர்புகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்த ஒவ்வொரு சிகிச்சைப் பிரிவுகளிலும் மாத்தளை சுகாதாரப் பிரிவு வைத்தியரின் நேரடித் தொடர்பையும் மாத்தளை மாநகர சுகாதாரப் பகுதியினரின் சேவைகளையும் மாத்தளை மாநகர மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்த ஒவ்வொரு சிகிச்சைப் பிரிவிலும் ஆண், பெண் சுகாதார உத்தியோகத் தர்களை பணியில் அமர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாத்தளை மாநகர சபை ஆணையாளரின் நேரடி கண்காணிப் பில் மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் கொரோனா தொற்றாளர்களின் நலன்கருதி விசேட அம்பியூலன்ஸ் 24 மணிநேர சேவையை யும் மாத்தளை மாநகர சபை ஏற்பாடு செய்துள் ளது.

மாத்தளையில் தீவிரமாக பரவிவரும் கொவிட் தொற்றிலிருந்து தங்களை பாது காத்துக்கொள்ள ஒவ்வொருவரும் வீடு களுக்குள்ளேயே இருக்க வேண்டும் என வும் தேவையற்ற காரணங்களுக்கெல் லாம் வீடுகளை விட்டு வெளியே வந்து கொரோனா தொற்றாளர்களாக மாறிவிடாமல் வீடுகளிலேயே தங்கியிருந்து தங்களையும் தங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ள அனைத்து மாநகர மக்களையும் கேட்டுக்கொள்வதோடு மாத்தளை மாநகர எல்லைக்குள் கொவிட் தொற்றுக்குள்ளாவோரின் வாழ்வாதார நலன் கருதி அவர்களுக்கான உலருணவுப் பொருட்களையும் வழங்கிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கோவேறு கழுதை உரிமையாளர்களுக்கு மாற்றுவழி பரிந்துரைக்க கோரிக்கை

மத்திய மாகாண ஆளுநர்

(கண்டி)

நுவரெலியா கிரகரி ஏரி மற்றும் நுவரெலியா 'ரேஸ் கோர்ஸ்' திடல் என்ப வற்றுக்கு அருகே கட்டுப்பாடின்றி நடமாடித் திரியும் கோவேறு கழுதைகளின் உரிமையா ளர்களுக்கு எதிராக நுவரெலியா மாநகர சபை எடுக்கவிருந்த நடவடிக்கை தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் சமரசம் செய்துள்ளார்.

மேற்படி 'போனி' என்றழைக்கப்படும் கோவேறு கழுதைகளின் நடமாட்டம் காரண மாக பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருவ தாகவும் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக நுவரெலியா மாநகர சபை அபராதம் விதிக்கவுள்ளதாகவும் ஊடகங்களில் செய்தி கள் வெளியாகின. இது தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போதைய கொவிட் சூழ்நிலையில் சுற்றுலாத்துறை கடுமையான நெருக்கடியில் உள்ளது. சுற்றுலாத்துறையை நம்பியுள்ள மேற்படி போனி உரிமையாளர்களும் பாதிப் படைந்துள்ளனர். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது மாற்றுவழி ஒன்றைப் பரிந்துரைக்குமாறு ஆளுநர் மாநகர சபை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆறுநாட்டு வேளாளர் சபையினரால் கிளங்கன் வைத்தியசாலையில் புதிய கட்டிடம் நிர்மாணிப்பு

(செ.தி.பெருமாள், இரா.யோகேசன்)

மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி, டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலை மற்றும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகியன விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை ஆறுநாட்டு வேளாளர் சபை கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலைக்கான கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து வருகின்றது.

தற்போது நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலில் குறித்த நிர்மாணப் பணி விடயங்களை ஆறுநாட்டு சபையின் தலைவர் பழ. புஸ்பநாதன், செயலாளர் கே.நந்தகுமார், திட்ட அமைப்பாளர் டி.இராமநாதன், முன்னாள் தலைவர் ஈ.முத்துகிருஷ்ணன், முன்னாள் செயலாளர் டி.அமிர்தலிங்கம், மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் எம்.தேவராசன், ஆலோசகர் கே.ரி.குருசாமி உட்பட பல முக்கியஸ்தர்களுடன் மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி டி.சந்திரராஜன், டிக்கோயா வைத்திய அதிகாரி ஜே.அருள்குமரன் ஆகியோர் சகிதம் பார்வையிட்டதோடு ஒரு தொகுதி முகக்கவசங்களையும் வழங்கினர்.

மத்திய மாகாண நிதித்துறைப் பிரதி செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான எச்.எம்.பி.புஞ்சி பண்டாவும், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான திருமதி டபிள்யூ.எஸ்.பி. விக்கிரமாராச்சியும் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளனர். கண்டி ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகேயிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டதை காணலாம். (கண்டி நிருபர்)

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

தனித்துவமான இணைய (virtual) வழி விழாவில் மேலும் 162 ‘பிரணாம’ புலமைப்பரிசில்களை வழங்கும் செலிங்கோ லைப்

- **காப்புறுதித்துறையின் முன்னணி நிறுவனத்தின் நீண்டகாலம் முன்னெடுக்கப்படும் கல்விசார் உதவி முயற்சி 20ஆவது ஆண்டு மைல்கல்லை எட்டியுள்ளது**
- **2,887 திறமையான இளம் இலங்கையர்களுக்கு ரூ. 167 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது**

சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன - துணை வேந்தர் - ருஹுணு பல்கலைக்கழகம், செலிங்கோ லைப் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி துஷார ரணசிங்க மற்றும் செலிங்கோ லைப் ‘பிரணாம’ புலமைப்பரிசில் மெய்நிகர் விழாவின் இரண்டு இளம் தொகுப்பாளர்கள்.

செலிங்கோ லைப் அண்மையில் தனது ‘பிரணாம’ புலமைப்பரிசில் திட்டத்தின் 20ஆவது நிகழ்வை முதல் இணைய (virtual) வழி விழாவாக கொண்டாடியதுடன், இதன்போது கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சிறந்து விளங்கிய 162 மாணவர்களுக்கு ரூ. 11.8 மில்லியன் புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டது.

புலமைப்பரிசிலுடன் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஓகஸ்ட் முதல் வாரத்தில் கிளை மட்டத்தில் தனித்தனியாக புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் என்று ஆயுள் காப்புறுதித்துறையின் முன்னணி நிறுவனமான செலிங்கோ தெரிவிக்கின்றது.

நாடு முழுவதுமுள்ள பயனாளிகள் மற்றும் செலிங்கோ லைப் ஊழியர்களுக்கான Zoom ஊடான புலமைப்பரிசில் விழாவின் காணொளி ஒளிபரப்பு செலிங்கோ லைப் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி துஷார ரணசிங்கவின் வரவேற்புரையுடன் ஆரம்பித்ததுடன், அதைத் தொடர்ந்து ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன பிரதம விருந்தினரின் முக்கிய உரையாற்றினார்.

மேலும், கடந்த கால பிரணாம புலமைப்பரிசில் வெற்றியாளரும், தற்போது ஆராய்ச்சி பொறியியலாளராகவும் உள்ள சரண சுனேத் சோனாதார மற்றும் தற்போதைய புலமைப்பரிசில் வெற்றியாளர்களும், கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றவர்களுமான ஜே.எம். தரிந்த ரஷ்மி பண்டார நவரத்ன, கோணேசமூர்த்தி அக்ஷிகா மற்றும் உமேஷா அமோதமா திலகரத்ன ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

செலிங்கோ லைப் நாட்டில் இலவசக் கல்வி இருந்தபோதிலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியில் பணத்தையும் முயற்சியையும் முதலீடு செய்வதற்கு அதிகரித்துவரும் சுமையை கருத்திற் கொண்டு 2002இல் பிரணாம புலமைப் பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அடுத்த 19 ஆண்டுகளில் நிறுவனம் 2,725 மாணவர்களுக்கு ரூ. 155 மில்லியன் புலமைப்பரிசில் தொகையை வழங்கியதுடன், 2021ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 20ஆவது புலமைப்பரிசில் தொகையுடன் அந்த எண்ணிக்கை இப்போது ரூ. 167 மில்லியனை எட்டியுள்ளதுடன், இது 2,887 இளம் மற்றும் திறமையான இலங்கையர்களுக்கு பயனளித்தது. நாட்டின் அடுத்த தலைமுறையினரை ஊக்குவிக்கும் செலிங்கோ லைப்பின் முயற்சியின் பெறுமதிக்கு சான்றாக சமுதாயத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள் அல்லது பிற முக்கிய பதவிகளில் பல கடந்த பிரணாம புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் உள்ளனர்.

செலிங்கோ லைப் பிரணாம புலமைப்பரிசிலானது அந்தந்த மாவட்டங்களில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மற்றும் தேசிய மட்டத்தில் விளையாட்டு, கண்டுபிடிப்புகள், நாடகங்கள், கலாசார நடவடிக்கைகள் அல்லது பிற சிறப்புத் திறன்களை வெளிப்படுத்தும் செலிங்கோ லைப் காப்புறுதிக் கொள்கைகளைக் கொண்டிருப்போரின் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. அத்தோடு க.பொ.த. உயர்தர பரீட்சையில் மாவட்ட ரீதியில் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காவது இடங்களைப் பெற்ற செலிங்கோ லைப் காப்புறுதிக் கொள்கைகளைக் கொண்டிருப்போரின் பிள்ளைகளுக்கு நிறுவனம் சிறப்பு பணப் பரிசுகளையும் வழங்குகிறது.

‘பிரணாம’ புலமைப்பரிசிலின் அண்மைய தொகுப்பானது, 2020ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்து விளங்கிய 30 மாணவர்களுக்கு தலா 1,20,000 ரூபா ஐந்து ஆண்டுகளில் தவணையாக செலுத்தப்படும் வகையில் வழங்கப்பட்டது. 2019 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 25 மாணவர்கள் தலா ரூ. 84,000 பெற்றுக் கொள்ளவுள்ளதோடு, இரண்டு ஆண்டுகளுக்கு மாதந்தோறும் இது வழங்கப்படும். அதேநேரத்தில் 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தமது மாவட்டங்களில் முதலிடம் பெற்ற 25 மாணவர்கள் தலா ரூ. 1,44,000 பெறுமதியான புலமைப்பரிசில் தொகையை மூன்று வருட காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளவுள்ளனர். இந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் செலிங்கோ லைப்பிடமிருந்து Lenovo IdeaPad D330 சாதனத்தை சிறப்பு வெகுமதியாகப் பெறவுள்ளதுடன், பென் டிரைவ், வயர்லெஸ் மவுஸ் மற்றும் ப்ளூடூத் ஸ்பீக்கர் உள்ளிட்ட பரிசுப் பொதியையும் பெறவுள்ளனர்.

மேலும், 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தங்கள் மாவட்டங்களில் 2ஆவது, 3ஆவது மற்றும் 4ஆவது இடங்களைப் பெற்ற 73 மாணவர்களுக்கு தலா ரூ. 30,000 ஒரு முறை கொடுப்பனவாக செலுத்தப்படவுள்ளது.

2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் விளையாட்டு, நாடகம், கண்டுபிடிப்பு அல்லது படைப்பாற்றல் துறைகளில் சிறந்து விளங்கிய ஒன்பது மாணவர்களுக்கு தலா ரூ. 35,000 பெறுமதியான தகுதி அடிப்படையிலான விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், மாவட்ட ரீதியில் மூன்று பொதுப் பரீட்சைகளிலும் முதல் 10 இடங்களைப் பிடித்த 550 மாணவர்களுக்கு விரைவில் அந்தந்த கிளைகளில் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுப் பொதி வழங்கப்படும்.

பிரான்ட் பைனான்ஸ் நிறுவனத்தால் இலங்கையில் ‘மிகவும் பெறுமதிமிக்க ஆயுள் காப்புறுதி வணிகக்குறி’ (Most Valuable Life Insurance Brand) எனவும், 2021ஆம் ஆண்டில் தொடர்ச்சியான 15ஆவது சாதனை ஆண்டாக, ஆண்டின் ‘மக்களின் விருப்ப ஆயுள் காப்புறுதிச் சேவை வழங்குநர்’ (Peoples Life Insurance Service Provider of the Year) எனத் தெரிவுசெய்யப்பட்டதுமான செலிங்கோ லைப், செயற்பட்டுவரும் தனது 33 ஆண்டுகளில் அதன் அரைவாசிக்கு மேற்பட்ட காலம் முழுவதும் நாட்டின் காப்புறுதித்துறையின் சந்தை முன்னோடியாகக் காணப்படுகின்றதுடன், Great Place to Work® நிறுவனத்தால் இலங்கையில் பணியாற்றுவதற்குச் சிறந்த இடங்களின் ஒன்றாக ‘Great Workplace’ எனச் சான்றளிக்கப்பட்ட செலிங்கோ லைப், இலங்கையின் மிகவும் பெறுமதியான ஆயுள் காப்புறுதி நிறுவனத்துக்கான Brand Finance நிறுவனத்தின் விருதை 2020ஆம் ஆண்டு வென்றதோடு, இலங்கையில் சிறந்த ஆயுள் காப்புறுதியாளர் விருதை ஏழாவது தொடர்ச்சியான ஆண்டாகவும் வேள்ட் பைனான்ஸ் (World Finance) நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. அதே ஆண்டில், இலங்கையின் வர்த்தகத்துக்கான சர்வதேச சம்மேளனம் (International Chamber of Commerce, Sri Lanka) ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனம் (CIMA) ஆகியன இணைந்து வெளியிடும் இலங்கையில் அதிகம் வியக்கப்படும் நிறுவனங்களின் பட்டியலில் அந்நிறுவனம் இடம்பெற்றது.

செயற்படுநிலையிலுள்ள சுமார் பத்து இலட்சம் காப்புறுதிக் கொள்கைகளைக்கொண்டுள்ள செலிங்கோ லைப் நிறுவனமானது புத்தாக்கம், உற்பத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வாடிக்கையாளர் சேவை, தொழில்வாண்மை அபிவிருத்தி, கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் உள்நாட்டின் காப்புறுதித்துறையின் உயர்நிலை அளவுகோலாகக் கருதப்படுகிறது.

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
ஆங்கில எழுத்து H
திகதி: 17.08.2021
வெற்றி இலக்கங்கள் 07 10 63 72
சீட்டிழுப்பு இலக்கம்: 0569

	கட்டமைப்பு	பரிசுகள்		வெற்றியாளர்கள் எண்ணிக்கை
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000,000.00	0
2 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100,000.00	2
3 ஆம் பரிசு	3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	3,000.00	59
4 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000.00	142
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100.00	3457
6 ஆம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின்	ரூ.	60.00	2290
7 ஆம் பரிசு	1 இலக்கம் சரியாயின்	ரூ.	20.00	58556
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின்	ரூ.	20.00	10813

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,389,480.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 75,319
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 81,208,411.60
• ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
• சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.
ஜாதிக லொதரஸ் போர்ட்டுவ
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J.
முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு இலக்கம்: 2834 சீட்டிழுப்பு திகதி: 17.08.2021
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 06 21 45 71

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை ரூ.	வெற்றி பெற்றோர்
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000,000.00	1
2 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000.00	6
3 ஆம் பரிசு	இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	2,000.00	120
4 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	1,000.00	296
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	100.00	6802
6 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40.00	4577
7 ஆம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	20.00	114121
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	20.00	20591

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 146,514
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,693,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 60,293,285.20
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
ஜாதிக லொதரஸ் போர்ட்டுவ
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J.
முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம்: 4539 உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
திகதி: 17.08.2021
வெற்றி எழுத்து B வெற்றி இலக்கங்கள் 4 9 8 6 2 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

1ஆம்பரிசு	4 9 8 6 2 8	ரூ.	2,000,000/-	2
2ஆம் பரிசு	9 8 6 2 8	ரூ.	100,000/-	9
3ஆம் பரிசு	8 6 2 8	ரூ.	10,000/-	90
4 ஆம் பரிசு	6 2 8	ரூ.	1,000/-	876
5ஆம் பரிசு	2 8	ரூ.	100/-	8861
6ஆம் பரிசு	8	ரூ.	20/-	87155

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

7ஆம் பரிசு	4 9 8 6 2	ரூ.	10,000/-	9
8ஆம் பரிசு	4 9 8 6	ரூ.	1,000/-	87
9ஆம் பரிசு	4 9 8	ரூ.	100/-	879
10ஆம் பரிசு	4 9	ரூ.	50/-	8731
11ஆம்பரிசு	B	ரூ.	20/-	34918

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ.10,705,010.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெறுவதற்கான தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.24,606,331.20
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

மேகா பவர் MEGA POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 0887
NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 17.08.2021
ஆங்கில எழுத்து K சுப்பர் இலக்கம் 01 வெற்றி இலக்கங்கள் 29 47 54 65

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை ரூ.	வெற்றி பெற்றோர்
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000,000.00	0
2 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000.00	3
3 ஆம் பரிசு	இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000.00	68
4 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	500.00	149
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	100.00	3802
6 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40.00	2562
7 ஆம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	20.00	63461
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	20.00	11485

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ.143,983,299.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ.2,424,100.00
N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஜாதிக லொதரஸ் போர்ட்டுவ
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சுபிரி வாசனா சம்பத
சீட்டிழுப்பு திகதி: 17.08.2021 சீட்டிழுப்பு இலக்கம் 1613
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 04 11 36 54

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை	வெற்றியாளர் எண்ணிக்கை
1பரிசு	4 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 500,000.00	0
2பரிசு	சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 20,000.00	4
3பரிசு	3 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 1,000.00	87
4பரிசு	சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 200.00	273
5பரிசு	2 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 100.00	3623
6பரிசு	சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின்	ரூ. 60.00	3257
7பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	ரூ. 20.00	44911
8பரிசு	சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின்	ரூ. 20.00	10770

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 1,892,940.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,675,311.60
ஜாதிக லொதரஸ் போர்ட்டுவ
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J.
முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

கிழக்கு மாகாண சபையில் தகவலறியும் உரிமை சட்டத்தை முறையாக அமுல்படுத்த கோரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாண சபையில் தகவலறியும் சட்டத்தை முறையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தகவலறியும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய தகவல்களை பெற முடியாத ஒரு நிறுவனமாக மாகாண சபை காணப்படுகிறது. குறிப்பாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களில் தகவல்களைப் பெறுவது பெரும் கஷ்டமாக இருக்கிறது.

ஒரு தகவலைப் பெறுவதற்காக விண்ணப்பித்து விட்டு, மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலையேற்படுகிறது. இங்குள்ள அதிகாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தகவலறியும் சட்டம் பற்றிய தெளிவு கூட இல்லாதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.தகவலறியும் சட்டத்தின் கீழ் ஒரு தகவல் கோரப்பட்டால், தகவல் கோரும் கடிதம் கிடைக்கப்பெற்றமை பற்றியும் கோரப்பட்ட தகவல் 14 நாட்களுக்குள் தரப்படும் எனவும் அறிவிக்கப்பட வேண்டும். தகவல்கள் வழங்குவது தாமதமானால், தகவல் கோரியவரிடம் கால அவகாசம் கோர வேண்டியது அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய ஏற்பாடாகும். இவை எதுவும் கிழக்கு மாகாண கல்வித்துறையில் கவனத்தில் கொள்ளப்படுவதாக தெரியவில்லை. ஆளுநரின் இணையத்தளத்தில் தகவல் அதிகாரிகளது பெயர்கள் பதிவிடப்பட்டுள்ளன. இத்தகவல் அதிகாரிகளுடன் தொலைபேசியில் கூட தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்களது சொந்த பெயர்களுக்கு அனுப்பப்படும் தகவல் கோரல் விண்ணப்பம் கூட கவனிக்கப்படுவதுமில்லை.

தகவல் அதிகாரியால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தகவல்கள் வழங்கப்படா விட்டால் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி என்ற வகையில் மாகாண அமைச்சுச் செயலாளருக்கு விண்ணப்பிக்கின்ற போதிலும் அவர் கூட எவ்வித தகவலும் தருவதில்லை - என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஓட்டமாவடியில் காட்டு யானை அச்சுறுத்தலுக்கு தீர்வு

(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மா நகர் மக்கள் மிக நீண்ட காலமாக காட்டு யானைகளின் தாக்கத்தினால் பல இன்னல்களை அனுபவித்து வந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கவுள்ளது.

காட்டு யானைகளினால் மஜ்மா நகர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பல அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டதோடு, 2018ஆம் தொடக்கம் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதன் தொடரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியிடமும், அரச அலுவலகங்களுக்கும் காட்டு யானைகளால் இப்பிரதேசம் எதிர்நோக்கும் இன்னல்களை மஜ்மா நகர் சமூகமட்ட அமைப்புகளூடாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பயனாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மற்றும் பிரதேச செயலகம் மேற்கொண்ட தொடர் முயற்சிகளினால் மஜ்மா நகர் பிரதேசத்தை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கான வேலி அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கான பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்களான எம்.அஸ்ஹர், எம்.அஸ்வர், காணிப்பிரிவு உத்தியோகத்தர் எம்.முக்சீத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.சுபைர், எம்.நூர்தீன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகளும் அதற்கான இடங்களைப் பார்வையிட்டனர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி, ஓட்டமாவடி பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகாரிகள், கிராமசேவகர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் அல்-மஜ்மா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஏ.எல்.சமீம் பிரதேச மக்கள் சார்பாக மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் அமைக்க திட்டம்

மாவட்ட செயலாளர் சமன் தர்ஷன பாண்டிகோராள தெரிவிப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான சமன் தர்ஷன பாண்டிகோராள தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கம், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், ஏற்கனவே சம்பந்தப்பட்ட உற்பத்தித்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, வாய்ப்பு மற்றும் ஆதரவை வழங்குவதன் மூலம் ஒரு புதிய தயாரிப்பை

உருவாக்க விரும்புவோரின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகும் என தெரிவித்த திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான சமன் தர்ஷன பாண்டிகோராள, இத்திட்டமானது கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

எனவே, இதற்காக கிட்டத்தட்ட 86 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், சில பிரதேச செயலகங்களுக்கு பயனாளிக் குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகள் மற்றும் இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இத்திட்டம் வெற்றிகரமாக இயங்கும்போது, இதன் கீழ் பல திட்டங்கள் பொதுமக்களுக்கு கிடைக்கத் தயாராக உள்ளதாகவும், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான சமன் தர்ஷன பாண்டிகோராள, தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெரியகல்லாறில் வங்கிக்குப் பூட்டு;

முகாமையாளருக்கு கொரோனா தொற்று

(பாண்டிருப்பு நிருபர்)

பெரியகல்லாறில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியில் கடமைபுரியும் முகாமையாளருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ்வங்கி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

பெரியகல்லாறிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் கடமைபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் திருகோணமலைக்குச் சென்றுள்ள நிலையில், அங்கு அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இங்குள்ள வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது வங்கி முகாமையாளர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த வங்கியில் கடமைபுரியும் ஊழியர்கள் அனைவரும் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிரதேசத்திற்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள பிரசன்ன பிரஹாமனகே, தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார். திருகோணமலை துறைமுக வீதியில் அமைந்திருக்கும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (16) இந்நிகழ்வு இடம்பெற்றது.

(அப்துல்சலாம் யாசீம்)

மட்டு. மாநகர சந்தை வியாபாரிகள் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் அதிகரித்துவரும் கொரோனா தொற்றையடுத்து பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.கிரிசுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை பொதுச்சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் மரக்கறி வியாபாரிகள் 32 பேரிடம் நேற்று (17) காலை மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாக கோட்டைமுனை பொது சுகாதார பிரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

ஏற்கனவே, தொற்று அதிகரித்ததன் காரணமாக மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ மற்றும் மாநகர சபை உட்பட பல அரச நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், மாநகர ஆணையாளர் உட்பட பலர்

தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை தொடர்மாடிக் குடியிருப்பில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறி வசித்துவரும் குருந்தையடி ரெட்குரோஸ் தொடர்மாடிக் குடியிருப்பில் நேற்று (17) 92 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 18 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். நேற்று முன்தினம் 8 பேர் தொற்றுக்குள்ளாகியிருந்தனர். இதன்மூலம் அங்கு 26 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் கல்முனை வடக்கில் இரு தினங்களில் 47 கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் இங்குள்ள கல்முனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக கல்முனை வடக்கில் கொரோனா தொற்றாளர்களின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது. இதனையடுத்து அங்கு ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள், வெளியிடங்களுக்குச் சென்று வந்தவர்கள் என இனங்காணப்பட்டவர்களுக்கு கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனையினால் பிரதேசத்தில் 130 பேருக்கு நேற்று (17) அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. இதில் 27 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தனர். கல்முனை குருந்தையடி சுனாமி தொடர்மாடிக் குடியிருப்பில் மட்டும் 18 பேர் தொற்றுக்குள்ளாகியிருந்தனர். பொதுமக்கள் அனைவரும் பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அத்துடன், சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகப் பேணுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் போதைப்பொருள் கடத்தல் குழுவினர் கைது; ரூ.38 இலட்சம் பெறுமதியான ஐஸ் - ஹெரோயின் மீட்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவந்த குழுவொன்றை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து 38 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரால் நேற்று (17) அதிகாலை கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி வீடு ஒன்று நேற்று முற்றுகையிடப்பட்டதுடன், அங்கிருந்து 300 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 15 கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டன. அத்துடன், போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டதுடன், அங்கிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டது.

சுமார் 38 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பெறுமதி கொண்ட போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கல்முனையிலும் போதைப்பொருள் விற்பனை நிலையம் ஒன்று கல்முனை பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டதுடன், அங்கிருந்து 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்த முற்றுகையின்போது பெண் ஒருவர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் கொழும்பிலுள்ள பிரதான போதைப்பொருள் வியாபாரிகளுடனான தொடர்புகள் மூலம் போதைப்பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்துள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றன.

கொரோனா பற்றிய வைத்திய ஆலோசனைகளுக்கு அவசர தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீதர் அறிவிப்பு

(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண மூன்று மாவட்டங்களுக்கும் கொவிட்-19 தொற்றுக்கென அவசர தொலைபேசி இலக்கங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அந்தந்த மாவட்டத்துக்கு வழங்கி வைக்கப்பட்ட இலக்கத்துடன், குறித்த மாவட்ட மக்கள் தொடர்பு கொண்டு கொவிட்-19 நோய்த்தொற்று பற்றிய மேலதிக வைத்திய ஆலோசனைகளையும், அதற்கான தீர்வுகளையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும் என்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் நேற்று (17) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ளவர்கள் 0706800368 என்ற இலக்கத்துக்கும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளவர்கள் 0706800369 என்ற இலக்கத்துக்கும், திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் 0706800370 என்ற இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு கொவிட்-19 நோய் பற்றிய சகல ஆலோசனைகளையும் தாமதமின்றி பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சமூகநல மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் கடந்த வருடம் முதல் இற்றை வரையான காலம்வரை கொவிட்-19 நோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளையும், நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் இமியூன் பூஸ்ட்டர் பானங்களையும், துண்டுப்பிரசுரங்களையும் வீடு வீடாகச் சென்று வழங்கிவைத்து வருகின்றனர்.

குறிப்பாக, தனிமைப்படுத்தலில் இருக்கும் மக்களுக்கும், பாதுகாப்புப் படையினர், பொலிஸார், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் கிழக்கு மாகாணம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் மேலும் தெரிவித்தார்.

கொவிட்-19 நோய்த்தொற்று பற்றிய மேலதிக வைத்திய ஆலோசனைகளையும், அதற்கான சிகிச்சைகளை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் மத்திய அரசினால் கொவிட்-19 இற்கென அவசர தொலைபேசி (Hotline) இலக்கங்கள் நாடளாவிய ரீதியில் வழங்கிவைக்கப்பட்டு அதற்கான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டு

நிந்தவூர் கடலரிப்பை தடுக்க 120 இலட்சம் ரூபா செலவில் 100 மீற்றர் நீளமான தடுப்புச்சுவர் அமைக்க நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேசத்தில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தடுக்கும் முகமாக கரையோரம் பேணல் திணைக்களத்தினால் 12 மில்லியன் ரூபா செலவில் 100 மீற்றர் நீளத்துக்கு கற்களைக் கொண்டு தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைகள் நேற்று முன்தினம் நிந்தவூர் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறாத பகுதிகளில் ஆரம்பகட்டமாக தற்போது இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. மேலும், மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற பகுதிகளில் கற்களைக்கொண்டு தடுப்புச்சுவர் அமைப்பது அவர்களின் நாளாந்த தொழிலுக்கு தடையாக அமையும் என்பதனால் கரையோரம் பேணல் திணைக்களத்தினால் இப்பகுதியில் (Geo bag) மண் மூடைகள் இடுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. ஜியோ பேக் (Geo Bag) பைகளில் மண் இட்டு நிரப்பி

கடலரிப்பை தடுக்கும் முறைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து கரையோரம் திணைக்களத்தினால் 25 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூரில் இடம்பெற்றுவரும் தீவிர கடலரிப்பை பரீட்சிப்பதற்காக தன்னுடைய வேண்டுகோளை ஏற்று கடந்த ஜூலை 24 அன்று நிந்தவூர் பிரதேச செயலாளர் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் பொறியியலாளர் றிபாஸ் ஆகியோர் கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விஜயத்தின்போது குறித்த இடத்திலேயே கரையோர பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் சுஜீவ ரணவகவுடன் நடைபெற்ற தொலைபேசி கலந்துரையாடலைத் தொடர்ந்து கொழும்பு கரையோர திணைக்கள அலுவல உயரதிகாரிகளுடன் மேற்கொண்ட சந்திப்புகளை யடுத்து மேற்கூறப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் தெரிவித்தார்.

இந்த ஆரம்பகட்ட வேலைகளின் தொடக்க நிகழ்வில் அம்பாறை மாவட்ட கரையோரம் பேணல் திணைக்களத்தின் மாவட்ட பொறியியலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனையில் கடைக்குள் புகுந்த கனரக வாகனம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் கல்முனை பஸ் நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று வீதியூடான இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இனிப்புப் பண்டம் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்குள் வீதியை விட்டு விலகிய கனரக வாகனம் புகுந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்றுக் காலை கல்முனையில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கல்முனை பிரதான நகரிலிருந்து

திருக்கோவில் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த குறித்த கனரக வாகனம் வீதியை விட்டு விலகியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தின் மூலம் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், குறித்த இனிப்புப் பண்டம் விற்பனைசெய்யும் கடைக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், வீதியில் காணப்பட்ட தெரு விளக்கு, மின் கம்பம், தொலைத்தொடர்பு கம்பம் போன்றவையும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

விபத்துக்குள்ளான கனரக வாகனம் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமானதென தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பொருளாதார அபிவிருத்தியா? மனித உயிர்களா? எது முக்கியம் என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும்

மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன்

(வீரமுனை நிருபர்)

கொரோனா தொற்றுப்பரவல் சூழ்நிலையில் மக்களின் உயிர்களா, மாறாக ஏனைய பொருளாதார அபிவிருத்திகளா முக்கிய தேவை என்கிற தெரிவில் அரசு முறையான முடிவினை எடுக்கவேண்டியுள்ளது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

கொரோனா தாக்கத்திற்கு மத்தியில் அரசின் அரசியல் நோக்கங்கருதிய செயற்பாடுகள் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொரோனாவினால் இலங்கையில் தினமும் மரணிப்போரின் தொகை ஏறுவரிசையில் அதிகரித்துள்ளது. 15ஆம் திகதிய தகவலின்படி 161 பேர் மரணித்துள்ளனர். அந்தவகையில் மணித்தியாலத்திற்கு 7 நபர்கள் மரணிப்பதாகவும், நாடுபூராகவும் மரணித்தவர்களின் எண்ணிக்கை 6,096 ஆகவும் உயர்ந்துள்ளது. உலகளவில் 41 இலட்சம் மக்கள் கொரோனாவினால் மடிந்துள்ளனர்.

மக்களாட்சி நாடுகளில் மனித உயிர்களுக்கு தலையாய முன்னுரிமை அளிக்கப்படுகிறது, அதனை விடுத்து ஏனைய திசைகளில் கவனம் செலுத்துவதென்பது மக்களின் உயிர்களை மதிக்காத செயலாகவே பார்க்கப்படும்.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல்சார் முடிவுகளைவிட துறைசார் நிபுணர்களின் தீர்மானங்களே வெற்றியளிக்கும். மனித உயிர்களோடு ஒப்பிடுகிறபோது அரசியல், பொருளாதார அபிவிருத்தி, தொல்லியல் தேடல், திட்டமிட்ட குடியேற்றம், சேனைச்செய்கை, காணி அபகரிப்பு எல்லாம் இரண்டாம் பட்சங்களானவை.

மேலும், நாட்டுமக்கள் கொரோனாத் தாக்கத்தில் திண்டாடுகின்றபோது தமிழ் பேசும் மக்களை ஓரங்கட்டுவது அல்லது பழிவாங்குவதென்பது நாடு எரிகின்றபோது பிடில் வாசித்த பொறுப்பற்ற நீரோ மன்னனின் கதையாகவே அமையும். அதேவேளை, அரசாங்கம் சார்பான தலையாட்டித் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்

தம்மை தமிழர்களின் மீட்பர்கள் என்று உளறுவது சபிக்கப்பட்ட சாத்தானின் வேதமாகவே அமைகிறது.

20ஆவது யாப்புத்திருத்தம், போர்ட்சிற்றி ஆணைக் குழுச்சட்டம் போன்ற சர்வாதிகார அரசியல், இறைமையைப் பலவீனமாக்கல் என்பவற்றுக்கு கையுயர்த்துதல் என்பது மக்களையும் நாட்டையும் பகடைக்காய்களாக உருட்டி விளையாடுவதுபோல் அமையும்.

தமிழ்ப் பிரதிநிதிகள் பதவிப் பண சுகத்தை அனுபவிப்பதாக இருந்தால் கையுயர்த்திகளாக மட்டும் இருங்கள் என்பதாக அதிகார மையத்தின் கட்டளையாக அமைகிறது.

ஆகவே, மக்களும் உண்மையான மக்கள்சார் பிரதிநிதிகளும் விழிப்பாக இல்லாவிட்டால் நாடு அதலபாதாளத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. கொரோனாத் தொற்று விடயத்தைக் கையாள்வதற்கு ஆற்றல் அறிவியல்மிக்க பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான நிபுணர் குழுவிடம் ஒப்படைப்பதே பொருத்தமானது. மாறாக இராணுவத்திடமும், கட்சி அரசியல்வாதிகளிடமும் ஒப்படைப்பதென்பது நகைப்புக்குரிய விடயமாகவே அமையும்.

எனவே, இங்கு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கை முக்கியமானது. அதாவது, நாட்டை முடக்கியாவது கொரோனா வைரஸ் கொலையாளிகளிடமிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்பதே சங்கத்தின் அறிவியல் கோரிக்கையாகும். அதேவேளை, அரசு அநாவசிய செலவீனங்கள், கப்பங்கள், கையூட்டுகள், கறுப்புப்பண உழைப்புகள், அரசியல்வாதிகளால் வெளிநாட்டு வைப்பகங்களில் பதுக்கியுள்ள நிதிகள் என்பவற்றைத் தவிர்த்தல், மீளப்பெறுதல் மூலமாகவும் அவற்றைக்கொண்டு கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாப்பதே இன்றைய முதலாவது மட்டுமல்ல, இரண்டாவது, மூன்றாவது தேவைகளுமாகும்.

கருத்துகளை, ஆலோசனைகளை நாம் முன்வைக்க முடியும். அதனை ஏற்கவேண்டியது அதிகார மமதையிலுள்ள அரசாங்கத்தின் செவிகளும் மூளைகளுமாகும். இல்லையென்றால் எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தீர்ப்புகள் அதற்கான பாடங்களைப் புகட்டும். தேர்தல் மோசடிகளாலாவது வென்று விடலாம் என்று முன்னாள் பிலிப்பைன்ஸ் தலைவர் பேர்டினன் மாக்கோஸ் போன்று இனியும் அரசு கனவு காணக்கூடாது. முஸ்டிகளைப் பாவிப்பதைவிட மூளைகளைப் பாவித்தால்தான் நாட்டை முன்னேற்ற முடியும் - என்றார்.

புதிய உபவேந்தருக்கும் புதிய பீடாதிபதிக்கும் பழீல் மௌலானா பவுண்டேஷன் வாழ்த்து

இவ்விருவரும் குறுகிய காலத்தில் இறை உதவியால் பல பதவி உயர்வுகளை அடைந்திருப்பதனால் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ சமூகத்திற்கும், சிவில் சமூகத்திற்கும் பயனுள்ள பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார்கள் என எமது பவுண்டேஷன் எதிர்பார்க்கிறது.

(றாசிக் நபாயிஸ்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக புதிய உபவேந்தராக பதவியேற்றுள்ள பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் புதிய பீடாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பேராசிரியர் எம்.எம்.பாஸில் ஆகியோருக்கு மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் வாழ்த்துத் தெரிவிப்பதாக அதன் தவிசாளர் விரிவுரையாளர் அஷ்-ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா (நழீமி) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

வான்எல - பன்சலகொடல்ல பகுதியில் யானை தாக்கியதால் இரு வீடுகள் சேதம்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்சலகொடல்ல பகுதியில் காட்டு யானைகளின் தாக்குதலில் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வான்எல பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது. பன்சலகொடல்ல பகுதியில் ஊருக்குள் புகுந்த யானைக் கூட்டம் வீடுகள் மற்றும் உபகரணங்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வான்எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாக்கடைகளின் பேச்சை சாமானியர்கள் ஏற்றுக்கொள்வதில்லை

கிண்ணியா நகர சபை உறுப்பினர் மஹ்தி சாடல்

(கிண்ணியா நிருபர்)

புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரான நடராஜா ரவிக்குமார் போன்ற சாக்கடைகளின் பேச்சுகளும் கருத்துகளும் சாக்கடைகளுக்கே சொந்த மாகுமென கிண்ணியா நகரசபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கைபரப்புச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி தெரிவித் துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் என கூறிக்கொள்ளும் நடராஜா ரவிகுமார் என்பவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமாகிய ரிஷாட் பதியுதீன் மீதும், இஸ்லாமிய பெண்கள், இஸ்லாமிய பெண்களின் ஆடைகள் மீதும் மிகவும் கீழ்த்தரமாக உண்மைக்குப் புறம்பான, எந்தவொரு அடிப்படையுமில்லாத தகவல்களை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் பணத்திற்காகவும் பதவிக்காகவும் சோரம்போகின்ற இவரைப் போன்ற கைக்கூலிகளால் இதேபோன்று இதற்கு முன்னரும் பல தடவைகளில் இவ்வாறான நாடகங்கள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் இவ்வாறான சாக்கடைகளால் தெரிவிக்கப்படுகின்ற கருத்துகளை சாமானிய இந்துக்களோ பௌத்த மக்களோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவரால் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளிலிருந்து அவரது பின்புலம், அவர் வளர்ந்த விதம் பற்றியும் எல்லோராலும் இலகுவாக அடையாளங்காணக்கூடியதாக உள்ளது.

ரிஷாட் பதியுதீன் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்றன. எதிலுமே அவர் குற்றவாளியாக காணப்படவில்லை. இஸ்லாமியப் பெண்களையும் அவர்களுடைய ஆடைகளையும், ரிஷாட் பதியுதீனையும் விமர்சிப்பதன் மூலம் பிரபலமாவதற்கு முயற்சிக்கின்ற இவரைபோன்ற மட்டமானவர் களை ஒருபோதும் மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள்.

இவரால் இட்டுக்கட்டப்பட்டு சொல்லப்பட்ட உண்மைக்குப் புறம்பான அந்த கருத்துகள் மத நிந்தனையை செய்யக்கூடியவை. இன முரண்பாடுகளையும், விரிசல்களையும் தோற்றுவிக்கக்கூடியவை.

அந்த அடிப்படையில் அவருக்கெதிராகவும் அவரது கருத்துகளுக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் அவரை மனநிலை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபரை கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் 81 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம்

எழுவர் உயிரிழப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் ஏழு மரணங்களும், தொற்றுடன் 81 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் திருகோணமலையில் 23 பேரும், பதவிசிறிபுரவில் 13 பேரும், மூதூரில் 12 பேரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம், உப்புவெளியில் 09 பேரும், குச்சவெளியில் 08 பேரும், கந்தளாயில் 07 பேரும், கோமரங்கடவலவில் 03 பேரும் குறிஞ்சாங்கேணி, தம்பலகாமம், சேருவில ஆகிய பகுதிகளில் தலா இருவருமாக, திருகோணமலை சுகாதார சேவை பிரிவுகளில் இவ்வாறான எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இவர்களுள் 42 பெண்களும், 39 ஆண்களும் அடங்குவதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மூதூர் மற்றும் கந்தளாய் பிரதேசங்களில் தலா இருவரும், குச்சவெளி, சேருவில, உப்புவெளி பிரதேசங்களில் தலா ஒருவர் வீதமுமாக, மாவட்டத்தில் மொத்தம் 7 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் மொத்த மரணங்களின் எண்ணிக்கை 172 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

திருகோணமலையில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதால் நடமாடும் சேவையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஏற்பாடு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா பரவலானது சடுதியாக அதிகரித்திருப்பதைக் கருத்தில்கொண்டு நேற்று 17ஆம் திகதி முதல் அத்தியாவசிய சேவைகள் அல்லாத கடைகள் மற்றும் வியாபார நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த செய்தியாளர் சந்திப்பு நேற்று (17) திருகோணமலை நகர சபையில் இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைய நேற்று (17) செவ்வாய்க்கிழமை முதல் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து வியாபார நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானித்திருப்பதாக திருகோணமலை நகரசபை தலைவர் என்.ராஜநாயகம் தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்யும் முகமாக மக்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள சிறு கடைகள் திறக்கப்பட்டிருக்கும் எனவும், நடமாடும் சேவைகள் மூலம் மீன் மற்றும் மரக்கறி வகைகளை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்

குறித்த சந்திப்பில் திருகோணமலை நகரசபை தலைவர் என்.ராஜநாயகம், பட்டணமும் சூழலும் பிரதேச சபை தலைவர் சதுன் தர்ஷன ரத்னாயக்க, திருகோணமலை வர்த்தக சம்மேளனத் தலைவர் கே.குலதீபன் மற்றும் ஷிரோமன் ரங்கன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அக்கரைப்பற்று பிரத்தியேக தகவல் திரட்டு செயலி, தரவுத்தள விபரத்திரட்டு நூல் அறிமுக நிகழ்வு

(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் முழுமையான விபரங்கள் அடங்கிய அக்கரைப்பற்று பிரத்தியேக தகவல் திரட்டு செயலி மற்றும் அதனுடன் இணைந்த தரவுத்தள விபரத்திரட்டு நூல் ஆகியவற்றின் அறிமுக நிகழ்வுகள் நேற்று முன்தினம் (16) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.றஸான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு செயலியினை (App) உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்து ஆரம்பித்து வைத்தார். 14 ஆயிரத்து776 குடும்பங்களும் சுமார் 47ஆயிரத்து 510 மக்கள்தொகையும் கொண்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் பொதுமக்களுக்கு அலுவலக நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கோடும், தாமதமற்ற வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்கும் பொருட்டும் இத்தரவுத்தள செயலி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், அக்கரைப்பற்று குடியிருப்பாளர்களின் முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணத்திரட்டு நூலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா முன்னிலையில் இந்நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டு, கிராம நிலதாரிகள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.ராசீக், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜே.எம்.வஃஸீர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அறுவடையின் பின்னர் வைக்கோலை எரிக்காதீர்

விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தல்

(சாய்ந்தமருது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடையின் பின்னர் நெற்செய்கைக் காணிகளில் காணப்படும் வைக்கோலை எரிக்க வேண்டாமென மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ. சனீர் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பாலான வயல்களில் அறுவடையின் பின்னர் மீதமாகின்ற வைக்கோலை எரிப்பதால் ஏற்படக் கூடிய பாதக விளைவுகள் குறித்தும், வைக்கோலை நிலத்தில் இடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் தொடர்பாகவும் விவசாய திணைக்களத்தினால் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும், இவற்றை கவனத்தில் கொள்ளாமல் அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் வைக்கோல் எரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இது மிகவும் கவலைக்குரிய செயற்பாடாகும். ஆனால், வைக்கோலை எரிக்காமல் வயலில் ஒரு இடத்தில் அவற்றை சேமித்து வைத்து, மண்ணுடன் கலந்து சேதனப்பசளையாகப் பயன்படுத்தினால் கூடுதலான விளைச்சலைப் பெற முடியும்.

அத்துடன், இதன்மூலம் மண்ணின் இரசாயன, பௌதிக மற்றும் உயிரியல் தன்மைகள் விருத்தியடைய வழிவகுக்கும் - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இரவுநேர ஊடங்கு வேளையில் மட்டு. மாவட்டத்தில் மக்கள் பூரண ஒத்துழைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு அமுலுக்கு வந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த இரவு 10 மணிக்கு இம்மாவட்டத்தில் காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர் மற்றும் வாழைச்சேனை உட்பட அனைத்து நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதான வீதி ஆகியவற்றிலும் வாகனப் போக்குவரத்து முற்றாக இடம்பெறவில்லை.

இதன்போது அத்தியாவசிய சேவைகளுக்குரிய வாகனங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ள மருதமுனை அல்-மனார், ஷம்ஸ் மத்திய கல்லூரிகள்

(மருதமுனை நிருபர்)

மருதமுனையில் அல்-மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ்மத்திய கல்லூரி என்பன தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அரசின் ஆயிரம் தேசிய பாடசாலைகள் உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இப்பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்குரிய 2021-05-17 ஆம் திகதியிடப்பட்ட உத்தியோக பூர்வ கடிதங்கள் நேற்று முன் தினம் (16) அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.வீரசிங்கவின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சந்திரசிறி, மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் எம்.எம்.ஹிர்பஹான் ஆகியோரிடம் தரம் உயர்த்தப்பட்ட பாடசாலைகளின் உத்தியோகபூர்வ கடிதங்களை கையளித்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளர் சர்மில் ஐஹான் கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாண சமூகசேவை திணைக்களத்தினால் பொத்துவில் பிரதேசத்தில் வாழும் வலது குறைந்ததோருக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்றுகோல்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. பொத்துவில் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (16) சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.ஜீ.அர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் கலந்துகொண்டு மேற்படி உபகரணங்களை வழங்கிவைத்தார். இதன்போது நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.சுபையிர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (பொத்துவில் நிருபர்)

முள்ளியடிக்கு பொலிஸ் காவலரண் அமைக்குமாறு கோரிக்கை

(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முள்ளியடி கிராமத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பிரதேச தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக பண்டார, திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் மூலம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் இக்கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தம்பலகாமம் மூன்று இனங்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசமாகும். தம்பலகாமம் முள்ளியடி பகுதியில் அதிகமான திருட்டு சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்கள் இடம் பெறுவதாக பொதுமக்கள் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வருகின்றனர். இதேவேளை, இப்பிரதேசத்தில் கொரோனா தடுப்புச் சட்டங்களுக்கு முரணான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவையனைத்தையும் கருத்தில்கொண்டு இக்கிராமத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

லீசிங் ஊக்குவிப்புத் திட்டத்தை ஆரம்பித்த கொமர்ஷல் வங்கியும் ஹேலீஸ் அக்ரிகல்ச்சரும்

விவசாயத்துறையில் ஈடுபடும் கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர்கள், பல்வேறு வகையான விவசாய இயந்திரங்களையும், ட்ரக்டர்களையும், குறைந்த லீசிங் கொடுப்பனவுகளையும், நெகிழ்வான கொடுப்பனவுத் திட்டங்களையும் கொண்ட ''அக்ரி லீசிங்" திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் வாய்ப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கிக்கும் ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் (Hayleys Agriculture Holdings Ltd) நிறுவனத்துக்குமிடையிலான பங்காண்மை மீண்டும் புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, இவ்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உயர்தர இயந்திரங்களையும், ட்ரக்டர்களையும் கவர்ச்சிகரமான கழிவுகளுடன் விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம், பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஊக்குவிப்புத் திட்டமானது Kubota, Agrotech, Farmtrac வகை விவசாய இயந்திரங்களை ஹேலீஸ் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யும்போது நடைமுறையில் இருக்கும். இந்த ஊக்குவிப்புத் திட்டமானது 2021ஆம் ஆண்டின் இறுதிவரை செயற்படும் என்பதோடு, நெகிழ்வான லீசிங் பொதிகள், பருவகாலக் கொடுப்பனவுத் திட்டங்கள், விசேட வாடகைகள், ஏனைய சலுகைகள் ஆகியன இதில் உள்ளடங்கும் என வங்கி தெரிவித்தது.

குறிப்பிடத்தக்கதாக, விவசாயிகளின் பருவகால வருமான அமைப்பு, பயிர்ச்செய்கை மாதங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, வங்கியின் நெகிழ்வான மீள்செலுத்துகைத் திட்டங்கள் காணப்படுவதால், தமது லீசிங்குகளைச் சிறப்பாகக் கட்டமைக்கும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இவ்வகையான இணைந்த ஊக்குவிப்புத் திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதோடு, வங்கியும், ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனமும் நாட்டின் விவசாயப் பொருளாதாரத்துக்குக் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகிறது என வங்கி தெரிவித்தது.

இலங்கையில் முழுவதும் கார்பன் நடுநிலையான (wholly carbon neutral) முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும், அப்பட்டியலில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்குகின்றது. அத்துடன் இவ்வங்கி இலங்கையில் 268 கிளைகளையும், 932 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.டி.எம்.) கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக் கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியான்மாரின் நேய்பியுடோவில் நுண்நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு இவ்வங்கி கொண்டுள்ளது.

பிரபல வானொலி அறிவிப்பாளர் ஜோக்கிம் பெர்னாண்டோ காலமானார்

பிரபல அறிவிப்பாளரும், கலைஞருமான ஜோக்கிம் பெர்னாண்டோ நேற்று நண்பகல் காலமானார். மிகச்சிறந்த வானொலிக் கலைஞராக, தேசிய வானொலியின் கல்விச்சேவை, மாதர் பகுதி, தேசியசேவை நாடகங்கள் எனப்பல நிகழ்ச்சிகளில் அவர் பங்குகொண்டிருந்தார்.

வங்கியில் வகித்த நிரந்தரப் பதவியைக்கூட (சகோதர மொழி கட்டாயமாக்கப்பட்டதால்) உதறித் தள்ளிவிட்டு, இறுதிக்காலம் வரை பகுதிநேர அறிவிப்பாளராகவே, வானொலிக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவரென அவரது நண்பர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இறுதிக்கிரியைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கார் ஒன்றில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவரை 300 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுடன் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்த நிலையில், ஒருவர் அங்கிருந்து தப்பியோடிய சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை (17) காலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி விஷ்ணுகோவில் வீதியில் வைத்து நேற்று முன்தினம் (16) இரவு விசேட அதிரடிப்படையினர் கார் ஒன்றில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட வியாபாரிகள் இருவரை கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து சுமார் 38 இலட்சம் ரூபா பெறுமதியான 300 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 15 கிராம் ஹரோயின் போதைப்பொருள், இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் என்பற்றை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பு-கூளாவடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரையும், காத்தான்குடி ஒல்லிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவரையும் விசேட அதிரடிப்படையினர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்கான நடைமுறைகளை மேற்கொண்டிருந்த வேளை கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான காத்தான்குடி ஒல்லிக்குளத்தைச் சேர்ந்தவர் அங்கிருந்து வெளியேறி பொலிஸ் நிலையத்துக்கு வெளியே மோட்டார் சைக்கிளில் காத்திருந்த ஒருவருடன் ஏறித் தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து விசேட அதிரப்படையினர் போதைவஸ்து வியாபாரியை மோட்டார் சைக்கிளில் ஏற்றித் தப்பிக்க வைத்தவரை கைதுசெய்ததுடன், தப்பி ஓடியவரை கைதுசெய்ய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு - கண்காணிப்பு அமைச்சிற்கான துறைசார் பொறுப்புகள் மறுசீரமைப்பு

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சிற்கான துறைசார் பொறுப்புகள் மறுசீரமைக்கப்பட்டு புதிய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்தின் கீழ் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல், செயற்றிறன் மற்றும் உயிர்ப்பான பொறிமுறையினூடாக மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி, ஜனாதிபதியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் ஒருங்கிணைத்தல், செயற்றிட்டங்களை கண்காணிக்கும் பொறுப்பு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, ஜனாதிபதியின் 'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்ச்சித் திட்டத்தில் மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில், ஜனாதிபதியினால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் பணிப்புரைகளை விரைவாக செயற்படுத்துவதற்காக மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளை வழிநடத்தும் பொறுப்பும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா சடலங்களை புத்தளம் - கல்லடிய பிரதேசத்தில் அடக்கம் செய்வதற்கு மக்கள் எதிர்ப்பு

அடுத்தகட்ட ஆலோசனைகள் மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தினுஷா தகவல்

(ஜீட் சமந்த)

புத்தளம், கல்லடிய பிரதேசத்திலுள்ள இடமொன்றில் கொரோனாவினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்காக ஒதுக்குவதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் புத்தளம் மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தினுஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் சடலங்களை புத்தளம், கல்லடிய பிரதேசத்திலுள்ள இடமொன்றில் நல்லடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடந்த சில நாட்களாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

கொரோனாவினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்காக தமக்கு சொந்தமான கல்லடிய பிரதேசத்திலுள்ள இடமொன்றைப் பெற்றுக்கொடுக்க புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்.

இந்த பிரதேசத்தில் நிலத்தடி நீர் 4 தொடக்கம் 5 அடி மட்டத்தில் காணப்படுகின்றது. ஏதாவதொரு முறையில் கொரோனா சடலமொன்று நல்லடக்கம் செய்யப்படுமாக இருந்தால் அந்த பிரதேசத்திலுள்ள மக்கள் குடிநீர் பெற்றுக்கொள்ளும்போது பிரச்சினை ஏற்படுமென நீர்வளச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது அதிகார பிரிவுக்குள் கொரோனா மயான பூமியை உருவாக்குவது தொடர்பான அனுமதி பெறுதல் தொடர்பான தகவலோ, அறிவிப்போ இல்லை என புத்தளம் பிரதேச சபையின் தலைவர் அஞ்சன சந்தருவன தெரிவித்தார்.

புத்தளம் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மற்றும் தற்போது உறுப்பினராக செயற்பட்டு வரும் நிமல் பமுனுஆராச்சியிடம் இது தொடர்பில் வினவினோம். கல்லடிய என்று தெரிவிக்கப்படும் இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்வதற்காக பாரிய போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இப்பிரதேசத்தில் நீரோட்டம் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. அதனால், இந்தப் பிரதேசத்தில் மயானத்தை ஸ்தாபிப்பதென்பது எந்தவொரு விதத்தில் முன்னெடுக்க முடியாதவொரு திட்டமாகும். அரசியல் பலத்தை பயன்படுத்தி கொரோனா சடலங்களை அடக்கம் செய்வதற்கு கல்லடிய பிரதேசத்தை யாராவது தேர்ந்தெடுப்பார்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிடுவோம் என்று குறிப்பிட்டார். புத்தளம், கல்லடிய பிரதேசத்தில் கொரோனாவினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகள் உள்ளிட்ட பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தாலும், பிரபல அமைச்சர் ஒருவர் அதற்கு எதிராக செயற்பட்டு வருவதாக தெரியவருகிறது. குறித்த பிரபல அமைச்சர் குறித்த பிரதேசத்தில் கொரோனா நோயாளர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

காங்கேசன்துறை கடையொன்றில் தீ விபத்து

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பிரதான வீதியில் தண்ணீர் சுத்திகரிப்பு தொழில்நுட்ப வியாபார நிலையத்தில் ஏற்பட்ட மின் கசிவின் காரணமாக குறித்த கடையில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தக் கடையிலிருந்த இலத்திரனியல் உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அவ்விடத்துக்கு விரைந்து சென்று, வேகமாக செயற்பட்டதன் காரணமாக பாரிய தீ விபத்து தடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் வீதித் தடைகளில் மாற்றம் ஏற்படுத்த தீர்மானம்

நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள வீதித் தடைகளுக்குள் உள்ள கடைகளுக்கு செல்வதற்கு பொதுமக்களை அனுமதிப்பதற்கான நேர ஒழுங்கொன்றினை யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

நல்லூர் ஆலய வருடாந்திர மகோற்சவம் கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மகோற்சவ காலங்களில் வழமையாக ஆலய சூழலை சுற்றியுள்ள வீதிகள் பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டிருக்கும். அந்த வகையில் இம்முறை மகோற்சவத்தை முன்னிட்டு கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு முதல் எதிர்வரும் 7ஆம் திகதி நள்ளிரவு வரையில் வீதித்தடைகள் போடப்பட்டு பொதுப் போக்குவரத்திற்கான தடை நடைமுறையிலிருக்கும் என முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இம்முறை ஆலய மகோற்சவத்திற்கு பக்தர்கள் அனுமதிக்கப்படாத நிலையில், ஆலயச் சூழலில் வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் வியாபாரமின்றி நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர். அதே நேரம் அப்பகுதி மக்களுக்கும் குறித்த வர்த்தக நிலையங்களுக்கு செல்ல முடியாத நிலைமை காணப்பட்டு வந்தமையால், இவை தொடர்பில் யாழ்.மாநகர முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதனை தொடர்ந்து, நேற்றைய தினம் யா.மாநகர முதல்வர் யாழ்ப்பாண பொலிஸாருடன் ஆலய சூழலுக்கு சென்று வீதித்தடைகள் குறித்து நேரில் ஆராய்ந்தனர். அதனடிப்படையில் வீதித்தடைகளினூடாக பொதுமக்களை அனுமதிப்பது தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. அது தொடர்பில் முதல்வர் அறிவிக்கையில், ஆலயத்தின் விசேட பூஜை நேரமான அதிகாலை 4 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரையிலும் , காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 04 மணி முதல் இரவு 06 மணி வரையிலும் வீதித்தடைகள் ஊடாக உட்செல்ல அனுமதியில்லை.

அதேநேரம் விசேட திருவிழா நாட்களில் முழுநாளும் வீதித்தடையினூடாக உட்செல்ல அனுமதியில்லை. ஏனைய நேரங்களில் பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தங்கள் தேவைகளுக்காக வீதித்தடைகள் ஊடாக பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். இதேவேளை சுகாதார நிலைமைகளின் அடிப்படையில், தேவையேற்படின் இந்த நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.

அம்பாறையில் காற்றுடன் கூடிய அடைமழை; வெள்ள அபாயம் ஏற்படுமென எச்சரிக்கை

தாழ்நில நெற்செய்கை வயல் நிலங்களும் முற்றாக வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. பகல் நேரத்தில் பயணிக்கும் வாகனங்களின் முன்விளக்குகள் ஒளிரச் செய்யப்பட்டு பயணிப்பதையும் அவதானிக்க முடிந்தது. அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் பலத்த மழைபெய்து வருவதுடன், வீதிகள், குடியிருப்புக்கள் எனப்பல இடங்களும்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறையில் மழையுடன் கூடிய காற்றுடன் காலநிலை மாற்றம் திடீரென ஏற்பட்டமையினால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். சில இடங்களில் மழை குறைந்து காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்வதுடன், மரங்களின் கிளைகளும் முறிந்து விழுந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் கடும் மழையுடன் காற்று வீசியது. இதனால் வீதியால் பயணம் செய்த பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் சிரமங்களை எதிர்கொண்டனர். இதேநேரம் மழை வீழ்ச்சி இடைவிடாது பெய்து வருகின்ற நிலையில், நீர்நிலைகள் யாவும் நீரால் நிரம்பியுள்ளதுடன், சில வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளமையும், இந்நிலை நீடித்தால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் புழுதியுடன் கூடிய காற்று வீசியதுடன், விளம்பரப் பலகைகளும் சேதமடைந்தன. கடற்கரையோரங்களிலுள்ள தென்னைமரங்கள் அகோர காற்றினால் ஓலைகளை இழந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொரோனா தொற்றுப் பரவலின் காரணமாக கம்பஹா நகரிலுள்ள கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

இந்தியா, பாகிஸ்தான், சீனாவுடனான சமபல உறவுகளே தலிபான்களுக்கு உலக அங்கீகாரத்தை பெற்றுத் தரும்

புலிகளுடன் தொடர்பில்லை என்று கூறுவது ஒருநாள் செய்தி மாத்திரமே என மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

''புலிகளுடன் எங்களுக்கு தொடர்பிருக்கவில்லை'' என்று தலிபான் பேச்சாளர் கூறுவது, இலங்கையில் ஒரு ''ஒருநாள் செய்தி.'' அவ்வளவுதான். இது இங்கே பெரிதாக யாரையும், மகிழ்ச்சியிலோ, கவலையிலோ, ஆழ்த்தவில்லை. இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் சமபல உறவுகளை பேணுவது தலிபான்களுக்கு உலக அங்கீகாரத்தை பெற்று தரும். இதுவே ஆப்கன் மக்களின் உடனடி தேவையான நிம்மதியை பெற்றுத்தரக்கூடிய, உள்நாட்டு, வெளிநாட்டு சூழலை ஏற்படுத்தும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இடைக்காலத்தில் வந்து போன தலிபான்களின் ஆட்சியும் ஒன்றும் சொல்லிக்கொள்ளும் படியாக இருக்கவில்லை. ஆகவே, தமது மக்களை நேசிக்கும் பொறுப்புள்ள ஆட்சியாளராக தம்மை மாற்றிக்கொள்வதும், காட்டுவதும்தான், ஆப்கனை ஆக்கிரமித்திருந்த வல்லரசுகளுக்கு தலிபான்கள் தரக்கூடிய தக்க பதிலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளர்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தங்களது எதிர்காலத்தை தீர்மானித்துக்கொள்ள ஆப்கன் மக்களுக்கு உரிமையிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக முதலில் அன்றைய சோவியத், பின்னர் இன்றைய அமெரிக்கா என்ற இரண்டு வல்லரசுகளின் விளையாட்டுத்திடலாக ஆப்கன் ஆகியது. தலிபான், முஹாஹிஜிதீன்களின் நிர்மாணத்திற்கே அமெரிக்கர்கள்தான் பிள்ளையார்-சுழி போட்டனர்.

ஆனால், இடைக்காலத்தில் வந்து போன தலிபான்களின் ஆட்சியும் ஒன்றும் சொல்லிக்கொள்ளும்படியாக இருக்கவில்லை. அனைத்துலகம் ஏற்றுக் கொண்டுள்ள மனித உரிமை பட்டயத்தை மிகவும் ஆவேசமாக தலிபான்கள் மீறினார்கள். அனைத்துமே மேற்கத்திய ஊடக அவப்பிரசாரம் என்று அவர்கள் இன்று பூசி மெழுக முடியாது.

எனினும், இன்று காலம் அவர்களுக்கு பாடம் படிப்பித்திருக்கும் என நம்புவோம். வல்லாதிக்க நோக்கங்களுக்கு வெளியே தம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க அப்பாவி ஆப்கன் மக்களுக்கு இருக்கின்ற உரிமையை, முதலில் ஆப்கன் ஆட்சியாளர்கள்தான், அவர்கள் எவராக இருந்தாலும் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் இரு வல்லரசுகளின் போட்டியில் சீரழிந்த தம் வரலாற்றை மனதில் கொண்டு இப்போது மற்றுமொரு வல்லரசான சீனாவின் விளையாட்டுத்திடலாக ஆப்கன் மாற, தலிபான்கள் இடமளிக்கக் கூடாது. இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் சமபல உறவுகளை பேணுவது தலிபான்களுக்கு உலக அங்கீகாரத்தை பெற்று தரும்.

சமூக நீதி, சட்ட ஒழுங்கு, மனித உரிமைகள், குறிப்பாக கல்வி கற்பதற்கும், தொழில் செய்வதற்குமான ஆப்கன் பெண்களின் உரிமை ஆகியவற்றை மதிப்பதன் மூலம், சொல்லொணா துன்பங்களை அனுபவித்த ஆப்கன் மக்களுக்கு, ''இது நம்ம ஆட்சி'' என்ற நம்பிக்கையை ஏற்படுத்த தலிபான்கள் படிப்படியாக முன்வர வேண்டும்.

நாட்டை மீண்டும் அடிப்படைவாத 9ஆம் நூற்றாண்டுக்கு கொண்டு சென்று, கடந்த 20 ஆண்டு கால அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆட்சியே பரவாயில்லை என ஆப்கன் இளைய தலைமுறை தீர்மானிக்கும் நிலைமையை, தலிபான்கள் ஏற்படுத்தக் கூடாது. இல்லாவிட்டால் இயல்பு வாழ்வு திரும்பாது. ஸ்திரமான ஆட்சியும் ஏற்படாது. ஆகவே, ரஷ்யா, அமெரிக்கா போன்று சீனாவும் இன்னொரு சுற்று ஓடலாம். அது இறுதிச் சுற்றாகவும் மாறி விடலாம். அப்பாவி ஆப்கன் மக்கள் மத்தியில் இரத்த ஆறு இனியும் ஓடக்கூடாது.

''புலிகளுடன் எங்களுக்கு தொடர்பிருக்கவில்லை'' என்று தலிபான் பேச்சாளர் இன்று கூறுவது, இலங்கையில் ஒரு ''ஒருநாள் செய்தி". இது இங்கே பெரிதாக யாரையும், மகிழ்ச்சியிலோ, கவலையிலோ, ஆழ்த்தவில்லை. கடந்த இடைக்கால தலிபான் ஆட்சியில், பாமியன் உலக பௌத்த மரபுரிமை சின்னங்கள் குண்டால் தகர்க்கப்பட்டமை உண்மைதானே. இதுபோன்ற ஆவேச முட்டாள்தனங்களை செய்யாமல் ஆப்கன் மக்களின் உடனடி தேவையான நிம்மதியை பெற்றுத்தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சூழலை ஏற்படுத்த தலிபான்கள் முன்னுரிமை வழங்க வேண்டும். தமது மக்களை நேசிக்கும் பொறுப்புள்ள ஆட்சியாளராக தம்மை மாற்றிக்கொள்வதும், காட்டுவதும்தான், ஆப்கனை ஆக்கிரமித்திருந்த வல்லரசுகளுக்கு தலிபான்கள் தரக்கூடிய பதிலாகும் என்று சுட்டிக்காட்டியள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆங்கில மொழியில் சமர்ப்பிப்பு

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உறுப்பினர்களிடையே சர்ச்சை

கொவிட்-19 வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரதி ஆங்கிலத்தில் மாத்திரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் நேற்று சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, வைரஸ் தொற்று (கொவிட்-19) தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒழுங்குபிரச்சினையை முன்வைத்த ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான கெவிந்து குமாரதுங்க,

''நீங்கள் வழங்கிய நீதிமன்றத் தீர்ப்பு ஆங்கில மொழியில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னரும் 20ஆவது திருத்தம் மற்றும் துறைமுக நகரம் தொடர்பான தீர்ப்பின் பிரதியும் ஆங்கிலத்திலேயே வழங்கப்பட்டது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை மீறலாகும். இதற்கு முன்னர் இது தொடர்பில் அறிவித்துள்ளோம். தாய் மொழியில் பிரதியை வழங்க நடவடிக்கையெடுக்குமாறு கேட்கின்றோம்'' - என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பை அவ்வாறே நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்குவதே வழமையாகும் - என்றார்.

இவ்வேளையில் எழுந்த சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, ''இந்த விடயத்தில் ஏற்கனவே நீதி அமைச்சர் அறிவித்துள்ளார். வழமையாக உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவ்வாறே வழங்கப்படும். எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கையெடுப்போம்'' என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேசா விதானகே கூறுகையில்,

''சட்டமூலம் ஜூலை மாதம் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது திருட்டுவழியில் நீதிமன்றத்திற்கு சென்று வருகின்றது. இங்கு பெரும்பாலும் சிங்கள மொழியை பயன்படுத்துகின்றனர்.

இதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிய விடயங்களும் உள்ளன. ஆனால், திருட்டு வழியில் நீதிமன்றத்திற்கு செல்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் மொழிகளில் வழங்குவதற்கு நிலையியல் கட்டளையில் ஏற்பாடுகள் உள்ளன. இப்படியிருக்கையில் தொற்று நிலைமையில் ஏன் வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள். இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று கேட்கின்றேன்.

இதேவேளை, எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவிக்கையில்,

''இந்த விடயங்களை தமிழ், சிங்களத்திலும் வழங்கவேண்டும். இந்த சட்டமூலத்தில் ஆபத்தான விடயங்களை அரசாங்கம் திருட்டு வழியில் உள்ளடக்கியுள்ளது. மக்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமாறு கேட்கின்றேன்'' - என்றார்.

இந்நிலையில், சட்டமூலம் மீதான் விவாதத்தின் போது இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, இதுதொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும் உள்ளன. ஆங்கில மொழியில் மட்டும் இல்லை என்பதை குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூற விரும்புகிறேன். நீதிமன்றின் தீர்ப்பைதான் ஆங்கிலத்தில் சமர்ப்பித்துள்ளோம். இந்தச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டுமென்றால் உயர்நீதிமன்றத்திற்கு செல்ல முடியும் - என்றார்.

கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் ஐவருக்கு கொரோனா தொற்று

(ஜூலட் சமந்த)

கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சேவையாற்றும் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சேவையாற்றும் சகலருக்கும் மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம், ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் நேற்றுக் காலை வரையில் 30 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

சிலாபம் பிரதேசத்தில் 25 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பங்கதெனிய பிரதேசத்தில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

மாரவில, வென்னப்புவ மற்றும் தங்கொட்டுவ ஆகிய பிரதேசங்களில் 55 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வரையில் மாரவில ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த கொரோனா நோயாளர்கள் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். அதற்கமைய, வென்னப்புவ பிரதேசத்தில் நால்வரும், தங்கொட்டுவவில் ஒருவரும், கொஸ்வத்தையில் ஒருவரும், மாரவில பிரதேசத்தில் இருவரும் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, சிலாபம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த கொரோனா நோயாளர்கள் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், இருவர் சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவ்வாறு உயிரிழந்த சகலரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு பட்டங்களின் செல்லுபடித்தன்மையை பல்கலை மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தாது

சாய்ந்தமருது நிருபர்)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்களின் செல்லுபடித்தன்மை பற்றி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) எவ்வித உறுதிப்படுத்தலையும் வழங்காதென தகவலறியும் சட்டத்திற்கமைய தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை தொடர விரும்பும் இலங்கை மாணவர்கள், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொண்டு விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

இதன்போது சர்வதேச மற்றும் பொதுநலவாய மட்டத்தில் செயற்படும் பல்கலைக்கழகங்களின் விபரங்கள் உறுதிப்படுத்தப்படும்.

எவ்வாறாயினும் அந்த பல்கலைக் கழங்களினால் வழங்கப்படும் பட்டங்களின் செல்லுபடித்தன்மை பற்றிய உறுதிப்படுத்தல்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்க மாட்டாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கையிலேயே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் சகல பட்டங்களும் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதற்கான உத்தரவாதம் இல்லை என்பதை ஊகிக்க முடிகிறது என கல்வித்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இணையத்தளங்களை பதிவு செய்க! ஊடக அமைச்சு அறிவுறுத்தல்

(சாய்ந்தமருது நிருபர்)

நாடளாவிய ரீதியில் இயங்கும் இணையத்தளங்களை பதிவுசெய்து, அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட இணையத்தளங்களின் பதிவுகளை புதுப்பித்துக் கொள்ளுமாறும் ஊடக அமைச்சு கேட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் அறிந்துகொள்ளலாம் என அமைச்சு அறிவித்துள்ளது.

இணையத்தளங்களை பதிவுசெய்யும் நடைமுறை 2012ஆம் ஆண்டுமுதல் அமுலில் இருந்துவருகின்றது. நாட்டில் இயங்கும் அனைத்து இணையத்தளங்களும் ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட்டு, அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வருடமும் அப்பதிவு புதுப்பிக்கப்பட்ட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்.எம். 102.3 அலைவரிசையில் கல்வி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அக்கரைப்பற்றில் இயங்கிவரும் பிராந்திய வானொலியான பிறை எவ்.எம். சுமார் 15 வருட காலமாக எவ்.எம்.102.3 அலைவரிசையில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றது.

உலகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்றின் காரணமாக உலக நாடுகள் அனைத்துமே திண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், இலங்கையில் முக்கியமாக மாணவர்களின் கல்வி நிலை பாரிய பின்னடைவை எதிர்நோக்கிவருகின்றது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட கல்வி நிலையை மீண்டும் முன்னெடுத்துச்செல்லும் முகமாக வானொலி அலைவரிசைகள் ஊடாக கல்வி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு நேற்று முன்தினம் கல்வி நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாக பிறை எவ்.எம். பிராந்திய வானொலி சேவை ஒலிபரப்பாகிவந்த எவ்.எம். 102.3 அலைவரிசை கல்வி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக பிறை எவ்.எம். பிராந்திய வானொலிக்கு புதிதாக எவ்.எம். 90.1 அலைவரிசை ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய அலைவரிசையில் பிறை எவ்.எம். நிகழ்ச்சிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பாகி வருகின்றன. பிராந்திய வானொலி பிறைஎவ்.எம்.இன் வழமையான நிகழ்ச்சிகளை 90.1 அவைரிசையில் நேயர்கள் செவிமடுக்கலாம்.

போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோடா வீதிக்கு அருகில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 30 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோகந்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், இரவுநேரங்களில் கடைகளை உடைத்து அதிலுள்ள சொத்துகளை திருடிய பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹோகந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கப்புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மேலுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 04 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இன்னுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹோகந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலாத்துஓயா

தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹகெட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலாத்துஓயா பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உனுவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைக்குண்டுகளுடன் ஒருவர் கைது - மன்னார்

பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காடஸ்பந்திரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் வீடொன்றில் புகுந்து வீட்டாரை தாக்கி சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்ற நபரொருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 02 கைக்குண்டுகள் மற்றும் வாள் என்பவற்றுடன் மன்னார் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காடஸ்பந்திரி, பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீதி விபத்துகளில் இருவர் பலி

தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்லை - பன்னிப்பிட்டிய வீதியில் நேற்று முன்தினம் பத்தரமுல்லை பிரதேசத்தில் பத்தரமுல்லையை நோக்கி பயணித்த வேன் ஒன்று வீதியில் பயணித்த பெண் ஒருவர் மீது மோதியதால் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான பெண் தலங்கம வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்து அனுப்பி வைக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் வேனின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹெட்டிப்பொல

ஹெட்டிப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டிப்பொல, குளியாபிட்டிய வீதியில் நேற்று முன்தினம் தஹனெக்கெதர வாவிக்கு அருகில் குளியாபிட்டியவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று சாரதியின் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையினால் வீதியிலிருந்து விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் சாரதி குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

அங்கமுவ, மகலாகம பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் குளியாபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் கைது

பூகொடை

பூகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடகனம்பெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பூகொட விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 168 லீற்றர் சட்டவிரோத மதுபானத் துடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பூகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொலிஸாரினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர் பூகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார்.

பண்டாரகம

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயன்வத்தவெவ காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் கோனஹேன விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு பண்டாரகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 202 லீற்றர் சட்டவிரோத மதுபானம், சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 1,357 லீற்றர் கோடா, 03 சமையல் எரிவாயு சிலிண்டர், 02 வாயு அடுப்பு உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அளுபோமுல்ல மற்றும் கம்மன்பில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 43 மற்றும் 23 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். நாளையதினம் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மாரவில

மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் புத்தளம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டு மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 37.5 லீற்றர் சட்டவிரோத போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் ஸ்பிரீட், வாயு அடுப்பு, சமையல் எரிவாய சிலிண்டர் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நாளைய தினம் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளனர்.

தேக்கு மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது - எம்பிலிப்பிட்டிய

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டி வீதியில் 97 1/2ஆம் கட்டைக்கு அருகில் நேற்று முன்தினம் உடவலவ விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி தேக்கு மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு திபோல்கெட்டிய வன பாதுகாப்பு காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொலம்பகே ஆர பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத செயற்பாடுகளுக்குத் துணைபோகின்றன வடக்கு சுகாதாரத்துறையும் கல்வித் திணைக்களமும்

இலங்கை ஆசிரியர் சங்கம் பகிரங்க குற்றச்சாட்டு

நிலையறி பரீட்சை செயற்பாடு தற்போதைய சூழலில் அவசியமற்றதொரு செயற்பாடு – என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

மாணவர்களை முறையற்ற வகையில் பாடசாலைகளுக்கு அழைக்கும் எந்தவொரு சுற்றுநிருபமும் வெளியிடப்படவில்லை. மாணவர்களைப் பாதுகாக்கும் வகையில்தான் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளுக்கு பெற்றோர்களையோ அல்லது வேறு எவரையுமோ அழைத்து எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ஆகவே, சட்டம் இவ்வாறிருக்கையில், வடமாகாண சுகாதாரத்துறையும், கல்வித் திணைக்களமும் செய்கின்ற சட்டவிரோத செயற்பாடுகளை அனைத்துத் தரப்பினரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் மோசமானதொரு செயற்பாடு.

எனவே, இத்தகைய செயற்பாடுகளால் ஏற்படப்போகும் விளைவுகள் அனைத்துக்கும் வடமாகாண சுகாதாரத்துறையும், கல்வித் திணைக்களமும்தான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதற்காக பின்னர் மக்கள் மீது குற்றஞ்சாட்டுவதால் எந்தவொரு பிரயோசனமுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் என்றும் காட்டமாகத் தெரிவித்தார்.

யாழ். நகரில் அமைந்துள்ள இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் தொற்று காரணமாக ஒருவருட காலமாக பாடசாலைகள் திறக்கப்படவில்லை. கல்வி சுமுகமாக வழங்கப்படவில்லை. இந்நிலையில், குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மாத்திரமே ஒன்லைன் கல்வியைப் பெற்றிருக்கின்ற

நிலையில், அந்த வசதியைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்காக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டு பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், இந்த நிலையறி பரீட்சையை நடத்துவது ஒரு சிறுபிள்ளைத்தனமான விடயமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இது எங்கள் மாணவர்களின் உளவியலுடன் விளையாடுகின்றதொரு செயற்பாடு.

மாணவர்களுக்கான கற்பித்தலையே சுமுகமானதொரு சூழலில் மேற்கொள்ள முடியாத நிலையில் ஒன்லைன் மூலமாகவோ அல்லது வினாத்தாள்களைப் பெற்றுக்கொண்டு சென்று வீட்டிலே செய்வதன் மூலமாகவோ மாணவனின் நிலையை அறிய முடியுமா என்பதுதான் இங்கு நாம் முன்வைக்கும் கேள்வி. ஆகவே, கற்றலைச் சுயமாக மேற்கொண்டு பரீட்சை எழுதும் மாணவனின் புள்ளிநிலை குறைக்கப்படும்போது அந்தப் பிள்ளையின் உளவியல் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதைச் சிந்திக்க முடியாத கல்வி சமூகமாகத்தான் வடமாகாணக் கல்வித் திணைக்களம் காணப்படுகின்றது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஒன்லைன் வசதியில்லாத மாணவர்களின் பெற்றோர்கள் வினாத்தாள்களைப் பாடசாலைகளில் பெற்றுப் பரீட்சைகளைச் செய்து ஒப்படைக்குமாறு கூறியிருக்கின்றார்கள். தற்போதைய தீவிரமான கொவிட் தொற்றுப் பரவல் சூழலில் இது எவ்வளவு அச்சுறுத்தலான விடயமாகும். இதன்மூலம் தொற்றுப் பரவாதா என சுகாதாரத்துறையினரை நோக்கிக் கேட்க விரும்புகின்றேன்.

வேலணை பகுதியிலுள்ள பிரபலமான பாடசாலையொன்றில் ஒன்லைன் வசதியில்லாத மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்வதாக கூறிக்கொண்டு அங்கு ஏனைய மாணவர்களையும் அழைத்துக் கற்பித்தார்கள். இந்த விடயம் இலங்கை ஆசிரியர் சங்கத்திற்குத் தெரியவரவே நான் வேலணைப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டுசென்றேன். அவர்கள் சட்டத்துக்கு மாறாக பாடசாலையில் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதாக நேரசூசி ஆதாரத்துடன் தெரியப்படுத்தியபோதும் அவர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக பாடசாலைக்கு வருகை தந்த மாணவன் ஒருவனுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு, பாடசாலைக்கு வற்புறுத்தி அழைக்கப்பட்ட ஆசிரியர்களுக்குத் தொற்று ஏற்பட்டு இறுதியாக வேலணை பிரதேசத்தின் ஒரு கிராமமே முடக்கப்பட்டது.

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் தேசிய பாடசாலையொன்றில் தற்போது தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நடந்துகொண்டிருக்கின்றது. அதேவேளை, அதே பாடசாலையில் மாணவர்களை அழைத்து ஆசிரியர்கள் சிலரை வற்புறுத்தி வரவேண்டும் என அழைத்து மறுபுறம் கற்பித்தலும் இடம்பெறுகிறது. இதற்கெதிராக இதுவரை சுகாதாரத்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால் இதனைப் பக்கச்சார்பான விடயமாகவே நாங்கள் கருதுகின்றோம். ஆகவே, சுகாதாரத்துறையினர் சுகாதார நடைமுறைகளை வெறும் வார்த்தைகளாகவும், அறிக்கைகளாகவும் மாத்திரம் அறிவுறுத்துவதை விடுத்து அதனை ஒழுங்கான வகையில் நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும்.

இலங்கையில் புதிய திரிபொன்று வருகிறது. தடுப்பூசி பெற்றிருந்தாலும் இது தாக்குப் பிடிக்குமோ தெரியாது. சிறுவர்களையும் மோசமாகப் பாதிக்கக்கூடியதொரு சூழல் காணப்படுகின்றது எனச் சொல்லிக்கொண்டு வடமாகாணத்தில் சுகாதாரத்துறை இதற்குரிய நடவடிக்கைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்காமையானது பாரியதொரு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. வடக்கு, கிழக்குப் பகுதி மக்களின் நலனில் அக்கறை இல்லாத தன்மையே இதனை வெளிக்காட்டுகின்றது. வேண்டுமென்றே இது செய்யப்படுகின்றது.

நாங்கள் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தமிழ்ப் பிரதேசங்களில் கற்றல் செயற்பாடு இடம்பெறுவதாக ஒரு மாயையைத் தோற்றுவித்து தமிழ்ப் பகுதியில் எல்லாம் சிறப்பாக நடக்கின்றது என தென்னிலங்கையில் இனவாதத்தைக் கூட்டுகின்ற வகையில் அரசாங்கத்துக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வடமாகாணச் சுகாதாரத்துறையும், கல்வித் திணைக்களமும் செயற்பட்டு வருகின்றன. எனவே, இந்த விடயத்தில் நாங்கள் ஆழமாகச் சிந்திக்க விரும்புகின்றோம்.

இதுவரைகாலமும் நாங்கள் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்தபோது ஓர் ஆசிரியர் கொத்தணி உருவாகப் போகின்றது என சுகாதாரத்துறையினரும், ஏனைய துறையினரும், மக்களும் எங்களை விமர்சித்தார்கள். எனினும், நாங்கள் பின்பற்றிய சுகாதார நடைமுறைகள் காரணமாக எவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை. எனினும், விமர்சனங்களைக் கருத்திற்கொண்டு நாங்கள் எங்கள் போராட்ட வழிமுறைகளை மாற்றிக்கொண்டோம்.

இவ்வாறான நிலையில் கொரோனாப் பரவல் மோசமடைந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றதென்றால் இதன் பின்னணி தொடர்பிலும் எங்களுக்குச் சந்தேகம் எழுகின்றது. ஆகவே, இவ்வாறான விடயங்களை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றுமுழுதாக எதிர்க்கின்றது.

தற்போதைய நிலையில் பரீட்சை நடத்துவது ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காகவே என இலங்கை ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. ஒருசிலரின் இலாபங்களுக்காக ஆசிரியர்கள், அதிபர்கள் மீது திணிக்கப்பட்டு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மாணவர்கள் மீது அக்கறைப்பட்டு இவ்வாறான பரீட்சைகள் எதுவும் இடம்பெறவில்லை. மாணவர்கள் மீது உண்மையாகவே அக்கறைப்பட்டால் மாணவர்களின் சாதாரணமான உளவியலைச் சிந்திக்க முடியாதவர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினர் இருக்கின்றார்களா எனவும் அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். இதேவேளை, மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட செயலாளர் செ.சிவசுதன், சங்கத்தின் யாழ். மாவட்ட பிரதித் தலைவர் தி. திருஞானசேகரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலை ஊழியர்கள் பணிக்கு திரும்பும்போது கவனிக்கவேண்டியவை

ஊழியர் சங்கத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினருக்கும், துணைவேந்தருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை நடந்த கலந்துரையாடலின் பின்னர் துணைவேந்தரால் வெளியிடப்பட்டுள்ள உள்ளக சுற்றுநிருபம் தொடர்பில் ஊழியர் சங்கத் தலைவர் த.சிவரூபன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அ: பணிக்குத் திரும்பும்போது பின்வரும் விடயங்களை கவனத்திற்கொள்ளவும்.

1. ஒவ்வொரு பணியிடத்திலும் வாரத்தில் மூன்று தினங்களென்ற சுழற்சிமுறையை கட்டாயமாகக் கடைப்பிடித்தல்.

2. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் துறைத்தலைவருக்கு உரிய முறையில் அறிவித்து வீட்டிலிருந்து பணியாற்றல் வேண்டும்.

3. பணியிடங்களில் கொரோனா அபாயமுள்ளவர்கள் அல்லது தங்களுக்கு கொரோனா தொற்றாளர் ஒருவருடன் நேரடி தொடர்புள்ளதெனக் கருதுபவர்கள் அல்லது தங்கள் சூழலில் - பிரதேசத்தில் கொரோனா அபாயமுள்ளவர்கள் துறைத் தலைவருக்கு, உரிய முறையில் அறிவித்து வீட்டிலிருந்து பணியாற்றல் வேண்டும்.

4. உங்களது துறையில் பணிபுரியும் ஒருவர் தொற்றுக்குள்ளாகியுள்ளாரெனின், பல்கலைக்கழக கொவிட் தடுப்பு செயலணித் தலைவரின் பரிந்துரையின்றி உங்கள் துறைக்குள் பிரவேசிக்க வேண்டாம்.

5. பணிக்கு வருகைதந்த நிலையில், தங்களுக்கு கொரோனா தொற்றாளர் ஒருவருடன் நேரடித் தொடர்புள்ளது எனத் தெரியவரின் உடனடியாக பாதுகாப்பான முறையில் துறைத்தலைவருக்கு உரிய முறையில் அறிவித்து உடனடியாக பணியிடத்தினைவிட்டு வெளியேறி வீடு திரும்பி உங்களை சுயதனிமைப் படுத்திக்கொள்வதோடு உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவும்.

6. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் கொரோனாவைக் கண்டறிவதற்கான சோதனையை (PCR Test/ Antigen Test) மேற்கொண்டிருப்பின் தயவுசெய்து அச்சோதனையின் முடிவு வரும்வரை உங்களை சுயதனிமைப்படுத்திக் கொள்வதோடு முடிவு கிடைத்தபின்னர் சுகாதாரத்துறையினரின் (PHI/MOH) வழிகாட்டல்களை பின்பற்றவும்.

மேற்கூறிய 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் சந்தர்ப்பங்களில் துறைத் தலைவருக்கு, உரிய முறையில் அறிவித்து துறைத்தலைவர் மறுக்கும் பட்சத்தில் அல்லது அறிவிக்கமுடியாத சந்தர்ப்பத்தில் துணைவேந்தருக்கு நேரடியாக எழுத்து மூலமாக அறிவிப்பதோடு, ஊழியர் சங்கத்திற்கும் தெரியப்படுத்தவும்.

ஆ: நீங்கள் சுழற்சிமுறையில் பணிக்கமர்த்தப்பட்ட நாட்களில் கடமைக்கு சமுகமளிக்க முடியாவிட்டால் அத்தினங்கள் தங்களின் சொந்த விடுப்பாகவே கருதப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். சுழற்சி முறையில் பணிக்கு வராமல் வீட்டில் தங்கியிருக்கும் நாட்களில் நிகழ்நிலை (online) மூலம் பணியாற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

இ: கடமையிலுள்ளபோதும், பிரயாணங்களின்போதும், வெளியில் செல்லும்போதும் முகக்கவசத்தை உரிய முறையில் அணிந்திருத்தலோடு, சமூக இடைவெளியை அவசியம் பேணவும். எப்போதும் கைவசம் செனிடைசர் போத்தலை வைத்திருந்து, உணரப்படும் போதெல்லாம் உரிய முறையில் சவர்க்காரமிட்டு கை கழுவும் வசதி கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அத்துடன், அத்தியாவசிய காரணங்களின்றி வெளியில் நடமாடித் திரிவதை தவிர்க்குமாறும் வேண்டுகிறோம்.

ஈ: இங்கு குறிப்பிடத் தவறிய வேறு அபாய சூழ்நிலைகளின்போதும் துறைத் தலைவர் தங்களைப் பணிக்கு அழைக்காமல் விட சுற்றுநிருபம் வாயிலாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். அதை அவர் கொரோனா பரவலை கட்டுப்படுத்த பயன்படுத்த முடியும். அவ்வாறு துறைத் தலைவர் பணிக்கு அழைக்காமல் விடும் சந்தர்ப்பங்களில் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவும்.

உ: பல்கலைக்கழக கொவிட் தடுப்பு செயலணிக்குழு உரிய தகுதிவாய்ந்த மருத்துவ நிபுணர்களால் மீள வலுப்படுத்தப் படுவதோடு இக்குழு அதிகாரமிக்க தொன்றாக சகலதுறைகளின் தடுப்பு நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டுமென ஊழியர் சங்கம் அடுத்து வரும் தினங்களில் கடுமையாக வலியுறுத்தி ஆவன செய்யும்.

மேலும், பல்கலை பணியாளர்களுக்கான பிரத்தியேக கொவிட் தடுப்பு சிகிச்சை மையமொன்றை உருவாக்கவும் துணைவேந்தரிடம் நாம் முன்வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஊழியர் சங்க அறிவுறுத்தலின் பிரகாரம் கொரோனாவிலிருந்து பாதுகாக்க பணியிடங்களுக்குச் செல்லாது வீட்டில் தங்கியிருந்த காலப்பகுதி (பராமரிப்புத்துறை பணியாளர்கள் 09.08.2021 முதலும் ஏனைய அனைத்துப் பணியாளர்கள் 12.08.2021 முதலும் 15.08.2021 வரை) ஊழியர்களின் சொந்த விடுமுறையில் கழிக்கப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

மருதமடு கிராமத்தின் அரச காணி அபகரிக்கும் முயற்சி தடுத்துநிறுத்தம்

(மன்னார் நகர் நிருபர்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மருதமடு கிராமத்துக்குச் சொந்தமான 14.5 ஏக்கர் அரச காணியை அபகரிக்க மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வேறு கிராமத்தவர் அனுமதிப்பத்திரங்களின்றி குறித்த காணியை அடாத்தாக அபகரிக்க முற்பட்டு புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை, அக்கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கவனத்திற்குக் கொண்டுசென்றனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையை நேரடியாக அவதானித்தார்.

இவ்விடயம் தொடர்பாக முசலி பிரதேச செயலாளருடன் கலந்துரையாடினார். முசலி பிரதேச காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தரும் அந்த இடத்திற்கு வருகை தந்து இக்காணி அரச காணியாக எல்லைப்படுத்தப்பட்ட காணி என்பதை உறுதிசெய்தனர். வேறு கிராமத்தவர் அடாத்தாக காணியை அபகரித்த செயல் உடனடியாக தடுத்துநிறுத்தப்பட்டு மருதமடு கிராமத்தில் காணியற்ற மக்களுக்கு அவற்றைப் பிரித்து வழங்கும்படி முசலி பிரதேச செயலாளருக்கு நாடாளுமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் கொவிட் தொற்றால் மூவர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொவிட்தொற்று காரணமாக மேலும்மூவர் உயிரிழந்துள்ளதாகசுகாதாரத் திணைக்களத் தினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில், வவுனியா வைத்தியசாலையின் கொவிட் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த மூவரே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 77 வயதுடைய பெண் ஒருவரும், வவுனியா, புளியங்குளத்தைச் சேர்ந்த 93 வயதுடைய ஆண் ஒருவரும், வவுனியா, பிரமனாலங்குளத்தைச் சேர்ந்த 90 வயது பெண் ஒருவரும் என மூவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்களை சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, கடந்த இரு தினங்களில் வவுனியாவில் கொவிட் தொற்றால் ஐவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையில் ஒருவர் சடலமாக மீட்பு

பருத்தித்துறை சுப்பர் மட பகுதியில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி இராஜ கிராமம் பகுதியைச் சேர்ந்த வைரவ நாகரத்தினம் (வயது 78) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள சுப்பர் மட பகுதியில் சடலமொன்று காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலத்தை அடையாளம் காணும் முயற்சியில் விசாரணைகளை முன்னெடுத்தபோது, குறித்த நபர் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராஜ கிராமம் பகுதியைச் சேர்ந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு அவ்விடத்திலிருந்து சத்தத்துடன் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்ததாகவும், காலையில் சடலமாகக் காணப்பட்டதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

கொவிட்-19 நோயால் மேலும் நால்வர் யாழில் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் மேலும் நால்வர் கொவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த அச்சுவேலியைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 39 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், பருத்தித்துறை இமையாணன் பகுதியில் மயங்கி வீழ்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 181 ஆக உயர்வடைந்துள்ளது.

வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகின.

அதில் வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் பூலோகம் இந்திரனுக்கும், அவரது மனைவிக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதுடன், குறித்த இருவரும் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

நீர்ப்பாசன செழுமைத் திட்டத்தின்கீழ் 81 கிராமிய குளங்களைப் புனரமைக்கும் பணி யாழில் முன்னெடுப்பு

(சாவகச்சேரி நிருபர்)

'நீர்ப்பாசன செழுமை' எனும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் 2021ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 81 கிராமியக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வேலைத்திட்டம் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவிற்கமைவாக நீர்ப்பாசன அமைச்சின் வழிகாட்டுதலில், கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அதனை அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் தென்மராட்சி பிரதேசத்தில் 12 குளங்கள், கோப்பாய் பிரதேசத்தில் 11 குளங்கள், நல்லூர் பிரதேசத்தில் 5 குளங்கள், காரைநகரில் 4 குளங்கள், பருத்தித்துறையில் 5 குளங்கள், மருதங்கேணியில் 5 குளங்கள், நெடுந்தீவில் 2 குளங்கள், சங்கானையில் 5 குளங்கள், உடுவிலில் 5 குளங்கள், தெல்லிப்பழையில் 5 குளங்கள், சண்டிலிப்பாயில் 7 குளங்கள், கரவெட்டியில் 5 குளங்கள் மற்றும் வேலணையில் 10 குளங்கள் என மொத்தமாக யாழ். மாவட்டத்தில் 81 குளங்கள் குறித்த வேலைத்திட்டத்தினூடாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஆப்கானில் ஆட்சியமைப்பது குறித்து தலிபான்கள் கட்டாரில் ஆலோசனை

அரச ஊழியர்களுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதாகவும் அறிவிப்பு

ஆப்கானிஸ்தானில் புதிய ஆட்சியமைப்பது குறித்து தலிபான் அமைப்பினர் கட்டாரில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய அரசதுறைகளின் செயன்முறை மற்றும் பெயர் குறித்து டோஹா நகரத்தில் தலிபான் அமைப்பினர் ஆலோசித்து வருகின்றனர். இதன்போது தலிபான்கள் மீது மக்கள் கொண்டுள்ள அச்சத்தை அகற்றுவது குறித்து முதல் கட்டமாக அவர்கள் ஆலோசனைசெய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கனில் அமையவிருக்கும் தங்களது அரசு குறித்து விரைவில் விரிவான அறிக்கை வெளியிடவும் தலிபான்கள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆப்கனிலுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சமூகத்தினர் பங்கேற்றுள்ளனர். ஆப்கனில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் தலிபானுக்கு ஒரு சோதனைக் காலம் என்று அந்த அமைப்பின் துணைத் தலைவர் முல்லா பராதர் தெரிவித்துள்ளதாக காபூலில் செயற்பட்டு வரும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கன் மக்களின் பாதுகாப்பு தற்போது தங்களது பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ள பராதர், நாடு விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைப்பது குறித்தும் தலிபான்களின் புதிய

கொள்கைகள் குறித்தும் விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே அதிபர் அஷ்ரப் கனி அரசில் பதவி வகித்த அரச உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். அவர்கள் அனைவரும் புதிய நம்பிக்கையுடன் உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும் என்றும் தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானின் நிலை சிறப்பாக உள்ளது - ரஷ்யா

ஜனாதிபதி அஷ்ரப் கனியைவிட தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தானின் நிலை சீராகவும் சிறப்பாகவும் உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆப்கானிஸ்தானுக்கான ரஷ்ய தூதர் டிமிட்ரி ஜிர்னோவ் தெரிவிக்கையில்,

தலிபான்கள் தலைநகருக்குள் நுழைந்து, ஆப்கன் அரசையும் அமெரிக்கப் படைகளையும் நாட்டை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டன. இதனால் அஷ்ரப் கனி தப்பித்துச் சென்றுவிட்டார். இது இழிவான செயல். அஷ்ரப் கனியின் ஆட்சியைவிட தலிபான்களின் கட்டுப்பாட்டின்கீழ் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நிலைமை சிறப்பாக இருந்தது என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தலிபான்களின் கீழ் வந்த முதல் நாளிலேயே என்னாலும் இதைக் கூற முடியும். இனி, காபூலில் நிலைமை அமைதியாகிவிடும்.

நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களைக்கொண்ட ரஷ்ய தூதரகம் தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ளது. ரஷ்ய அதிகாரிகளை மீட்பது குறித்து தலிபான்களுடன் விரிவான பாதுகாப்புப் பேச்சு நடத்தியிருக்கிறேன். முந்தைய ஒப்பந்தங்களின்படி, ரஷ்ய தூதரக அதிகாரிகளின் பாதுகாப்புக்கு தலிபான்கள் உறுதியளித்துள்ளனர். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

உடைமைகளை துறந்து தாய்நாட்டிலிருந்து அகதிகளாக புறப்பட்ட ஆப்கானியர்கள்

ஆப்கான் தலைநகர் காபூலிலிருந்து கட்டாருக்குப் புறப்பட்ட சி-17 குளோப்மாஸ்டர் - 3 விமானத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 640 பேர் எவ்வித உடைமைகளுமின்றி ஆப்கானை விட்டு வெளியேறியுள்ளனர்.

தலிபான்கள் மீதான அச்சத்தால் உயிர்ப்பதற்காக விமானத்தில் குழந்தைகள், பெண்கள் என பெருந்திரளானோர் முண்டியடித்துக்கொண்டு அமர்ந்திருந்த புகைப்படம் உலகளாவிய ரீதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விமானத்திலிருந்து விழுந்த மக்கள்:

இதேவேளை, தலிபான்கள் மீதுள்ள அச்சம் காரணமாக ஆப்கானிஸ்தானில் வசித்துவரும் வெளிநாடுகளைச் சேர்ந்தோர் தாயகம் திரும்பி வருகின்றனர். அதனால், காபூல் விமான நிலையத்தில் கூட்டம் அலைமோதியது. ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குத் தப்பிச்செல்லும் நிலை காணப்படுகிறது.

விமான நிலையத்திலிருந்து கிளம்பிய அமெரிக்கப் போர் விமானத்தில் ஏறுவதற்கு மக்கள் முண்டியடித்தனர். சிலர் விமானத்தின் இறக்கைகளில் தொங்கிக்கொண்டு சென்றனர். விமானம் புறப்பட்ட பிறகு 3 பேர் கீழே விழும் காணொளி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. விமானத்திலிருந்து விழுந்தவர்கள், நெரிசலில் சிக்கியவர்கள் என 7 பேர் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான்:

புவியியல்ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நாடான ஆப்கானிஸ்தான், மீண்டும் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது.

ஆப்கன் நாடாளுமன்றம், ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய தலிபான்கள், ஆட்சியமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில் அமைதி வழியிலான புதிய சகாப்தம் தொடங்கும் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானை ஆட்சிசெய்த

தலிபான்கள், மக்களுக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்தனர். பெண்கள், ஆண் உறவினர்களின் துணையின்றி வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது, நவீன ஆடைகளுக்குத் தடை, ஆண்கள் கட்டாயம் தாடி வளர்க்க வேண்டும், பெண்கள் பாடசாலைகளுக்குச் செல்லத் தடை உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்தனர்.

ஆனால், 2001இல் அமெரிக்காவின் உதவியுடன் தலிபான்கள் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஆப்கானிஸ்தான் முன்னேற்றம் காணத் தொடங்கியது. பெண்கள் கல்வி கற்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நவீன ஆடைகளும், தொழில்நுட்பங்களும் அறிமுகமாயின. சிறுபான்மையினர் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் மீண்டும் பழைமைவாதிகளான தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளதால், எத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக, பெண்களின் நிலை குறித்து மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

மக்கள் வெளியேற வேண்டாம் - தலிபான்கள்:

ஆப்கானிஸ்தான் அரசுக்காகவும், அரச படைகளுக்காகவும் பணியாற்றியவர்கள் மீது எந்தவித பழிவாங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் தொழில் தொடங்குவதற்கேற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ள தலிபான்கள், மக்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் மீது தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருவதாக மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

அனைவருக்குமான அரசு - சீனா நம்பிக்கை:

தலிபான்கள் தலைமையில் அமையும் அரசு, அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை தரும் வகையில் இருக்குமென்று நம்புவதாக சீனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, அந்நாட்டு வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங் தெரிவிக்கையில்,

"வன்முறையின்றி அமைதி வழியிலான ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தவும், உள்நாட்டு, வெளிநாட்டு மக்களைக் காக்கவும் தலிபான்கள் உறுதியளித்தனர். அந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகிறோம். போரால் மக்கள் பாதிக்காத வகையிலான நடவடிக்கைகளை தலிபான்கள் மேற்கொள்ள வேண்டும். மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது. ஆப்கானிஸ்தான் மக்களுடனான நட்புறவை மேம்படுத்தி, அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை சீனா மேற்கொள்ளும்" - என்றார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விவகாரம்:

எழுவர் விடுதலை தொடர்பான விவகாரத்தில் ஜனாதிபதியின் முடிவுக்காக காத்திருக்கிறோம்

தமிழக அரசு தெரிவிப்பு

"எழுவர் விடுதலை தொடர்பான விவகாரத்தில் குடியரசு தலைவரின் முடிவுக்காக காத்திருக்கிறோம்'' என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். இவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மதுரை மத்திய சிறையில் 29 ஆண்டுகளாக ஆயுள்தண்டனை அனுபவித்து வருகிறார். இவர் அண்மையில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில்,

''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 29 ஆண்டுகள் சிறையில் இருக்கிறேன். 14 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என சிறையில் இருந்தவர்கள் எல்லாம் பலர் முன்கூட்டியே விடுதலைசெய்யப்பட்டுள்ள நிலையில், நான் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. 29 ஆண்டுகளாக தொடர்ந்து சிறையிலிருக்கும் நிலையில், மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். உடல்நலம் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலிருக்கும் 7 பேரை விடுதலை செய்வது தொடர்பான சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருப்பிலுள்ளது. இது குறித்து விரைவில் முடிவெடுக்க கோரி மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

1600 ஆயுள்தண்டனை கைதிகளின் முன் கூட்டியே விடுதலைசெய்வதற்கான மனு பரிசீலிக்கப்பட்டுள்ள நிலையில், எங்களது மனு காத்திருப்பில் இருக்கிறது. ஆகவே 29 ஆண்டுகள் சிறையிலிருக்கும் என்னை விடுதலைசெய்ய உத்தரவிட வேண்டும்'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்கண்ட மனு நீதிபதிகள் பாரதிதாசன், நிஷா பானு அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இதே வழக்கில் சிறையிலிருக்கும் நளினி இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அதேபோல் ரவிச்சந்திரன் மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும் 7 பேர் விடுதலை தொடர்பான விவகாரத்தில் குடியரசு தலைவரின் முடிவுக்காக காத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எத்தகைய முடிவையும் எடுக்க இயலாது. குடியரசு தலைவரின் முடிவு மனுதாரரின் கோரிக்கைக்கு எதிராக அமைந்தது என்றால் அப்போது மனுதாரர் வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தை நாடலாம். இவ்வழக்கை 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கிறோம் என்று தெரிவித்தனர்.

ஒருவருக்கு கொரோனா தொற்று: மூன்று நாட்கள் நாட்டுக்கே பூட்டு

நியூஸிலாந்தில் ஒரேயொரு கொரோனா தொற்று நோயாளி உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நாடு முழுவதும் 3 நாட்களுக்கு முடக்கப்படுவதாக அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் அறிவித்துள்ளார்.

நியூஸிலாந்தின் மிகப்பெரிய நகரமான ஒக்லாந்தில் கொரோனா நோயாளியொருவர் கண்டறியப்பட்டுள்ளார். நாட்டில் கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளி இவராவார். இந்நிலையில், நோயாளரின் தொடர்புகளைக் கண்டறிந்து தனிமைப்படுத்த அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே நேற்று வெலிங்டனில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போது அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், ''3 நாட்களுக்கு நாடு முழுமையாக முடக்கப்படும்'' என அறிவித்தார். அந்தவகையில் இன்று (நேற்று) நள்ளிரவுமுதல் ஊரடங்கு அமுலுக்கு வரும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட நோயாளி எந்த வகை வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், இது ஆபத்தான டெல்டா திரிபாக இருக்கலாம் எனக் கருதப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

வேகமாகப் பரவும் டெல்டா திரிபு ஆபத்தானது. இதிலிருந்து நாங்கள் விரைவாக மீண்டு வர சில கஷ்டங்களை ஆரம்பத்திலேயே எதிர்கொண்டுதான் ஆகவேண்டும் எனவும் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்தார்.

ஒரு வருடத்திற்கு முன்பு கொரோனா நோயாளர்கள் கண்டறிப்பட்ட நிலையில், நாட்டை முடக்கி மிகச் சிறப்பாக கையாண்டு நியூஸிலாந்து வெற்றிகண்டது. இந்நிலையில், ஒரு வருடத்தின் பின்னர் நாடு இப்போதுதான் மீண்டும் 3 நாட்கள் முடக்கப்படுகிறது.

முடக்க நிலை அமுலில் இருக்கும் காலப்பகுதியில் நாட்டில் அனைத்து பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் பெரும்பாலான வணிக நிறுவனங்கள் மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்டவற்றை மட்டுமே திறக்க அனுமதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கண்டறியப்பட்ட கொரோனா நோயாளி 50 வயதானவர் எனவும். அவர் இதுவரை தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர் எனவும் நியூஸிலாந்து சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையில் தாலிபான்களிடம் சிக்கவைத்து உலக நாடுகள் எங்களை கைவிட்டுவிட்டன

ஆப்கன் மக்கள் கண்ணீர் மல்க வேதனை

இக்கட்டான சூழ்நிலையில் தங்களை தாலிபான்களிடம் சிக்கவைத்து உலக நாடுகள் கைவிட்டுவிட்டதாக ஆப்கனில் வாழும் மக்களும், வெளிநாடுகளின் வாழும் ஆப்கன் மக்களும் கண்ணீர் மல்க வேதனை தெரிவித்துள்ளனர்.

ஆப்கனில் 2 வாரத்தில் தாலிபான்கள் அனைத்து நகரங்களையும் கைப்பற்றியதால் அங்கு வசிக்கும் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். உயிர் பிழைப்பதற்காக ஆப்கனில் வாழும் மக்கள் வெளிநாடுகளுக்கு தப்பியோடும் காட்சிகள் வெளியாகி காண்போரை கலங்கச் செய்கின்றன. இந்நிலையில் உலக நாடுகள் தங்களை கைவிட்டுவிட்டதாக ஆப்கானியர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

''என்றாவது ஒருநாள் தாயகம் திரும்புவோம் என்ற கனவு தற்போது சிதைந்துவிட்டதாக கூறுகிறார்கள் ஆப்கன் மக்கள். ஆப்கன் தலைநகர் காபூலில் நிலைமை மிகவும் மோசம் அடைந்ததை அடுத்து அங்குள்ள தங்களது உறவினர்கள் என்ன ஆனார்கள் என்பது கூட தெரியவில்லை என வெளிநாடுகளில் வசிக்கும் ஆப்கன் மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து தரை மார்க்கமாகவும் விமானங்களிலும் மக்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர். ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதாரவாக செயற்பட்டவர்கள் தற்போது உஸ்பெகிஸ்தான், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தஞ்சமடைய கூட்டம் கூட்டமாக வீதிகளில் படையெடுக்கும் காட்சிகளும் வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

காபூலில் ஐ.எஸ். - லஷ்கர் ஜெய்ஷே தீவிரவாதிகள்!

கடந்த சில நாட்களில் ஐ.எஸ்., ஜெய்ஷே முகம்மது, லஷ்கர்-இ-தொய்பா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆப்கன் தலைநகர் காபூலுக்கு வந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தலிபான் கொடிகளுடன் இவர்கள் காபூலுக்கு வந்தாலும், அவர்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் இல்லை என சொல்லப்படுகிறது. ஆப்கனில் இருந்து தீவிரவாத செயல்களை நடத்த அனுமதிக்க மாட்டோம் என தலிபான்கள் அமெரிக்காவிடம் உறுதி அளித்துள்ளதால், எதிர்வரும் நாட்களில் இந்தத் தீவிரவாதிகளை தலிபான்கள் விரட்டி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானின் குவெட்டாவிலிருந்து தலிபான் நிறுவுனர் முல்லா ஓமரின் மகன் முல்லா யாகூப் வந்துள்ள நிலையில், முக்கிய படைத் தளபதியான அவரது தலைமையில் இந்த தீவிரவாதிகளை இராணுவ பலத்தை பயன்படுத்தி வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடங்கும் என கூறப்படுகிறது.

அடுத்துவரும் நாட்கள் மிக முக்கியமானவை

ஆப்கானியரை கைவிட முடியாது; கைவிடவும் கூடாது ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் அடுத்த வரும் நாட்கள் மிக முக்கியமானதாக இருக்கும். அந்நாட்டு மக்களை நாம் கைவிட முடியாது; கைவிடவும் கூடாது''- இவ்வாறு ஐ.நா. பொதுச் செயலாளர் அந்டோனியா குட்டேரஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ''பயங்கரவாதிகளின் சொர்க்கமாக ஆப்கானிஸ்தான் மீண்டும் மாறி விடாமலிருப்பதை சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து உறுதிசெய்ய வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் நடப்பவற்றை கனத்த இதயத்துடன் உலகம் கண்டு வருகிறது. தலிபான்கள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் மக்களை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களை நாடு கடத்த வேண்டாம்'' – இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் வன்முறைக்கு உடனடியாக முடிவு ஏற்படுத்தி, புதிய அரசு அமைவதற்கான பேச்சு நடத்தவேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில் இதுகுறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் நடைபெற்றது. ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதன் முக்கியத்துவத்தை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

அதன்பின்னர் வெளியிடப்பட்டுள்ள தீர்மானத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒருங்கிணைந்த, பெண்கள் உட்பட அனைத்து தரப்பையும் உள்ளடக்கிய ஓர் அரசை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், மற்ற நாடுகளை அச்சுறுத்தவோ, தாக்குதல் நடத்தவோ கூடாது என்றும் மற்ற நாடுகளிலுள்ள பயங்கரவாத குழுக்களை ஆதரிக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தோஹா மற்றும் சர்வதேச மன்றங்களில் தலிபான்கள் தங்கள் வாக்குறுதிகளை பின்பற்றவில்லை என்றும் மக்கள் அச்சத்துடன் இருப்பதாகவும் ஐ.நா சபைக்கான ஆப்கானிஸ்தான் தூதர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கான் மக்களுக்கு ஆதரவளிக்க தயார் என்று பிரான்ஸ் உறுதியளித்துள்ளது.

மேலும், ஆப்கானிஸ்தான் அண்டை நாடாக தற்போதைய சூழலில் இந்தியாவுக்கு பெரும் கவலை அளிப்பதாக ஐ.நாவுக்கான இந்திய தூதர் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் பெண்கள், குழந்தைகள் அச்சத்தில் இருப்பதாகவும் வன்முறையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது.

''ஆப்கன் மக்கள் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் வாழ உரிமையுள்ளவர்கள். அவர்களுக்கு உதவ சர்வதேச சமூகம் தயாராக உள்ளது'' - இவ்வாறு ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் லிண்டா தோமஸ் க்ரீன்ஃபீல்ட் தெரிவித்தார்.

உலக செய்திகள்

தலிபான்களின் பேஸ்புக் கணக்குகள் முடக்கப்படும்

தலிபான்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் கணக்குகள் முடக்கப்படும் என பேஸபுபுக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

தலிபான்களுக்கு எதிராக பெரும்பான்மையான பதிவுகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வந்தாலும், அவர்களுக்கு ஆதரவாகவும் சிலர் பதிவிட்டு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் "அமெரிக்க சட்டப்படி பயங்கரவாத அமைப்பாக தலிபான் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், எங்கள் நிறுவனத்தின் கொள்கையில்படி தலிபான்களின் கணக்குகளுக்கு தடை விதிக்கின்றோம்.

தலிபான்களுக்கு ஆதரவாக வெளியிடப்பட்டுள்ள பதிவுகளை நீக்குவதுடன், தலிபான்களுக்கு ஆதரவாக செயற்படும் கணக்குகளும் முடக்கப்படும்" என பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

'தகிகோகோச்சி':

அரிசி பைகளில் குழந்தைகளின் படம்; அன்பை பகிரும் ஜப்பானிய பெற்றோர்

கொரோனா பெருந்தொற்று உலகையே ஆட்டிப்படைத்து வருகிறது. அதனால் பலரும் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை பின்பற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஜப்பானில் புதிதாக பிறக்கும் குழந்தைகளின் முகத்தை மட்டுமே புகைப்படமெடுத்து அதை அரிசி பைகளின் மீது வைத்து, தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து வருகின்றனர் புதிதாக பெற்றோர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தம்பதியர்.

கொரோனா காரணமாக இந்த ஏற்பாடு என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஜப்பானில் 'தகிகோகோச்சி' (Dakigokochi) என்ற பெயரில் பிரபலமடைந்து வருகிறது. இந்த அரிசி பையை பார்ப்பதற்கு ஒரு குழந்தை தனது அம்மாவின் சேலையை கொண்டு தலை தவிர உடல் முழுவதும் போர்த்தப்பட்டுள்ளதை போல உள்ளது.

மேலும் இதன் மூலம் சக குடும்பத்தினர் சமூக இடைவெளியுடன் குழந்தையை ஆரத் தழுவி கொஞ்சவும் முடியும் என்கின்றனர் ஜப்பானியர்கள்.

குழந்தையின் உடல் எடைக்கு ஏற்ப இந்த பைகளில் அரிசி நிரப்பப்பட்டு வருவதாகவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். இந்த 'தகிகோகோச்சி' பயணம் தொடங்கி அனைத்தையும் குறைப்பதோடு குழந்தையை நேரில் பார்த்த சுகத்தை கொடுப்பதாக சொல்கின்றனர் அவர்கள்.

24 மணி நேரத்தில் வாழ்க்கையே மாறிவிட்டது

அச்சத்தில் உறைந்துள்ள ஆப்கான் பெண் ஊடகவியலாளர்கள்

ஆப்கானிஸ்தானை தாலிபன் கைப்பற்றியதையடுத்து அங்குள்ள பெண் செய்தியாளர்கள் தங்கள் உயிர் மற்றும் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற நிலையில் அச்சத்துடன் உள்ளனர்.

1990களில் ஆட்சியைக் கைப்பற்றிய போது தாலிபன்கள் பெண்கள் மீது கடுமையான அடக்குமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்தனர். மீண்டும் தாலிபன் அதிகாரத்தைக் கைப்பற்றியதையடுத்து இணைய வழி பதிவுகளை பெண் செய்தியாளர்கள் அச்சத்துடன் அழித்துக் கொண்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் தங்கள் வாழ்க்கையே மாறிவிட்டது என்றும் அச்சம் நிறைந்த அமைதியுடன் இருப்பதாகவும் பெண் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

பெண் பத்திரிகையாளர்களின் நிலை:

தலிபான்கள் குறித்து பெண் பத்திரிகையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள கவலைகள் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். காபூலை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் பெண் பத்திரிகையாளர் ஒருவர் நாட்டை விட்டு தப்பி ஓட முயன்றுள்ளார். விமான நிலையத்திற்கு செல்லும் வழியில் துப்பாக்கி முனையில் அவரின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை தலிபான்கள் எடுத்துச் சென்றுள்ளனர். இந்த சம்பவத்தை நினைவுகூரும் அந்த பெண் பத்திரிகையாளர்,

''நான் விமான நிலையத்திற்கு டெக்ஸியில் சென்றபோது, தெருவில் குழுவாக நின்றுகொண்டிருந்த சில ஆண்கள், தாலிபான்களுக்காக கைதட்டிக் கொண்டிருந்தார்கள். 'மாஷாஅல்லாஹ், கோ அமெரிக்கா' உள்ளிட்ட கோஷங்களை அவர்கள் எழுப்பிய கொண்டிருந்தனர். என் வாழ்க்கையில் இதுபோன்ற சம்பவங்களை பார்க்க வேண்டும் என்று இதுவரை நினைத்ததில்லை'' என்று ட்வீட் செய்துள்ளார்.

மற்றொரு பத்திரிகையாளர், "தலிபான்களின் வருகை குறித்த அச்சம் காரணமாக ஏற்கெனவே பொது இடங்களில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் எனக்கு தெரிந்தவர்கள் சிலர் எங்கள் வீட்டுக்கே வந்து, தலிபான்கள் உங்களால்தான் வருகிறார்கள். தாலிபான்கள் உங்களை ஒழுங்குபடுத்துவதற்காக மீண்டும் வந்துள்ளார்கள் என்று கூறி அச்சமூட்டுகின்றனர்" என்று கூறியிருக்கிறார். நாட்டை விட்டு வெளியேற முடியாத மற்றொரு பெண் பத்திரிகையாளர், "நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டோம். இனி இன்னும் கஷ்டப்பட போகிறோம்" என்று தலிபான்கள் வருகை குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியுள்ள தலிபான்கள் அரங்கேறியுள்ள அடுத்தடுத்த சம்பவங்களால் அந்நாட்டு பெண்களின் நிலை கேள்விக்குறியாக்கியுள்ளன.

"முழு நகரமும் கிட்டத்தட்ட ஒரே இரவில் பெண்களுக்கு எதிராக மாறிவிட்டது போல் தோன்றுகிறது. தெருவில் நடப்பது கூட வித்தியாசமாக உணர வைக்கிறது. வாழ்க்கை இத்தோடு நின்றுவிட்டது போல் நினைக்கிறேன்" - இந்த வார்த்தைகள் 20 ஆண்டுகளுக்கு பின் ஆப்கன் ஆட்சி அரியணையை கைப்பற்றி இருக்கும் தலிபான்கள் குறித்து காபூலைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் ஒருவர் உதிர்த்தவை.

ஜூலை ஆரம்பத்தில் தொடங்கிய தலிபான்கள் போர் ஞாயிற்றுக்கிழமை காபூலை கைப்பற்றிய பின் முடிவுக்கு வந்தது. தலிபான்களின் இந்த வெற்றி மற்றவர்களை விட குறிப்பாக பெண்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அச்ச உணர்வுக்கு பின்னணியில் பல வலிகள் இருக்கின்றன. அமெரிக்க படைகளால் தலிபான்கள் வீழ்த்தப்பட்ட இந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தான் பெண்கள் பல உரிமைகளை போராடி வென்றுள்ளனர். வேலைக்குச் செல்வது, கல்வி பயில்வது, பொதுவெளியில் தனியாக செல்வது போன்ற பல்வேறு உரிமைகள் இதில் முக்கியமானவை. ஏனென்றால் 1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானில் நடந்த தலிபான்கள் ஆட்சியின்போது, பெண்கள் வெளியே வேலைக்கு செல்லவோ அல்லது பள்ளியில் படிக்கவோ தடை விதிக்கப்பட்டிருந்தது.

பெண்கள் பர்தா அணிவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. மேலும், பெண்கள் வெளியே செல்லும் வேண்டும் என்றால், அவர் தனது ஆண் உறவியொருவருடன் மட்டுமே வர வேண்டும். இந்த விதிகளை மீறிய பெண்களை இஸ்லாமிய சட்டத்தின் மிகக் கடுமையான விதிகளின் கீழ் தலிபான்கள் தண்டித்தனர். பொதுவெளியில் அந்தப் பெண்களை அவமானப்படுத்தினர். மேலும், பாலியல் தொழில் செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட பெண்களை கல்லால் அடித்து கொடுமைப்படுத்தினார்கள் தலிபான்கள்.

இந்த செயல்கள் காரணமாக மீண்டும் தலிபான்கள் கோலோச்ச தொடங்கியுள்ளது, தங்களுக்கு எதிராக அமையும் என்று அஞ்சுகிறார்கள் அந்நாட்டு பெண்கள். இதற்கேற்ப கடந்த சில நாட்களாக சில சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்துள்ளன.

இதேவேளை தற்போது ஆப்கானிஸ்தானில் அரசு ஊழியர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். அரசு ஊழியர்கள் பணிக்கு திரும்பவேண்டும் என்றும் தலிபான்கள் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிலிருந்து படைகளை வாபஸ் பெற்றதற்கு வருந்தவில்லை

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்



ஆப்கானிலிருந்து படைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதற்கு தாம் வருந்தவில்லை. இது முன்பு எப்போதோ எடுத்திருக்க வேண்டிய முடிவு என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

மேலும் ''அமெரிக்க மக்களை தவறாக வழி நடத்தி வெளிநாடொன்றில் உள்நாட்டுப் போரை நீண்ட காலமாக நடத்திக் கொண்டிருக்க முடியாது என பைடன் தெவித்துள்ளார்.

தற்போது நிகழ்ந்திருப்பது மனதை மிகவும் வாட்டுவதாகக் கூறிய அவர் தாலிபன்கள் அமெரிக்கர்களைத் தாக்கினால் கடும் பதிலடி கொடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கர்களையும் அதன் நட்பு நாடுகளின் குடிமக்களையும் பாதுகாப்பாக அழைத்து வர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என பைடன் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவ விமானம் மூலம் ஆப்கான் மக்களை மீட்ட பிரிட்டன்

பிரிட்டன் விமானப் படையின் விமானத்தில் ஆப்கான் மக்கள் கொண்டு வரப்பட்டது குறித்த வீடியோவை பிரிட்டன் பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ளது.

தூதரக பணியாளர்களுடன் சேர்த்து பிரிட்டன் ஆதரவு ஆப்கான் மக்களை விமானங்கள் மூலம் பிரிட்டன் இராணும் மீட்டுள்ளது. ஆப்கான் மக்கள் மீட்கப்பட்டது குறித்து வீடியோ வெளியிட்ட நிலையில், எத்தனை பேர் மீட்கப்பட்டனர் என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

அதேநேரம் பிரிட்டன் மற்றும் நேட்டோ படைகள் மீண்டும் தாலிபான்களுக்கு எதிராக போரிடப் போவதில்லை என பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் Ben Wallace தெரிவித்துள்ளார்.

4 கார்கள் - ஹெலி. முழுவதும் பணத்துடன் தப்பிச் சென்ற ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி, 4 கார்கள், ஹெலிகாப்டர் முழுவதும் பணத்துடன் தப்பிச் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதையடுத்து, ஞாயிற்றுக்கிழமையே காபூலை விட்டு அஷ்ரப் கனி வெளியேறினார்.

தஜிகிஸ்தான் சென்ற அவருக்கு அங்கு தஞ்சமடைய அனுமதி வழங்கப்படததால், ஓமன் சென்றதாக கூறப்படுகிறது. அங்கிருந்து அமெரிக்கா செல்ல இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே அஷ்ரப் கனி காபூலிலிருந்து செல்லும் போது 4 கார்கள், ஒரு ஹெலிகொப்டர் முழுவதும் பணத்தை கொண்டு சென்றதை பார்த்ததாக ரஷ்ய தூதரக செய்தி தொடர்பாளர் நிகிடா தெரிவித்துள்ளார்.

நிரப்ப முடியாமல் பணத்தில் சிலவற்றை வீதியிலேயே விட்டுச் சென்றதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக ரஷ்ய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐ.சி.சி. T20 உலகக்கிண்ணத் தொடரின் போட்டி அட்டவணை வெளியீடு

ஒக். 18ஆம் திகதி நமீபியாவை சந்திக்கும் இலங்கை அணி

ஏழாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கான போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்று வெளியிட்டது.

முதல் சுற்றில் குழு 'ஏ', குழு 'பி' என்ற இரு பிரிவுகளில் 8 அணிகள் இடம்பெற்றுள்ளன. இதில் இலங்கை அணி குழு 'ஏ'யில் இடம்பெற்றுள்ளது. இலங்கை அணி தங்களது முதல் போட்டியில் ஒக்டோபர் 18ஆம் திகதி அபுதாபியில் வைத்து நமீபியா அணியை சந்திக்கிறது. அடுத்ததாக 20ஆம் திகதி அயர்லாந்து அணியையும், 22ஆம் திகதி நெதர்லாந்து அணியையும் சந்திக்கிறது.

ஒக்டோபர் 22ஆம் திகதியுடன் முதல் சுற்றுப்போட்டிகள் அனைத்தும் நிறைவடைகின்றன. 23ஆம் திகதி 'சுப்பர் 12' சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகின்றன. அன்றைய தினம் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன. அபுதாபியில் நடைபெறுகின்ற முதல் போட்டியில் அவுஸ்திரேலிய – தென்னாபிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்ற அதேவேளை, டுபாயில் நடைபெறும் மற்றைய போட்டியில் இங்கிலாந்து – நடப்பு சம்பியன் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதுகின்றன.

இந்திய – பாகிஸ்தான் அணிகள் மோதும் எதிர்பார்ப்பு மிக்க போட்டி 24ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. நவம்பர் 8ஆம் திகதியுடன் குழுநிலை போட்டிகள் அனைத்தும் நிறைவடைகின்றன. முதலாவது அரையிறுதிப்போட்டி நவம்பர் 10ஆம் திகதியும், இரண்டாவது அரையிறுதிப்போட்டி நவம்பர் 11ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. மாபெரும் இறுதிப்போட்டி நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டிக்காக மேலதிகமாக 15ஆம் திகதியும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விலகும் ரோஜர் பெடரர்

டென்னிஸ் உலகின் முன்னாள் முதல் நிலை வீரரும், 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனை வீரர்களில் ஒருவருமான சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரோஜர் பெடரர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துகொண்ட அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர் முழங்கால் அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ள நிலையிலேயே இவ்வாறு அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். முன்னதாக இரண்டு தடவைகள் முழங்கால் அறுவைசிகிச்சை மேற்கொண்டுள்ள பெடரர் தற்போது மூன்றாவது தடவையாக மீண்டும் அறுவைசிகிச்சை மேற்கொள்ளவுள்ளார். இதனால் பல மாதங்களுக்கு போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்படும் எனவும் ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு அவரது இரண்டு முழங்கால்களிலும் அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடம் வெறும் 13 போட்டிகளில் விளையாடிய நிலையில் மீண்டும் அவரது முழங்காலில் அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

ஹெய்ட்டிக்கு ஒசாகா உதவி

நிலநடுக்கத்தால் பேரழிவைச் சந்தித்த ஹெய்ட்டிக்கு உதவப்போவதாக நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையான ஜப்பனைச் சேர்ந்த நஓமி ஒசாகா அறிவித்துள்ளார். கரீபியன் நாட்டுடன் ஒசாகாவுக்கு தனிப்பட்ட தொடர்புள்ளது. அவருடைய தந்தை அங்கிருந்து வந்தவர். உலகில் அதிக வருமானத்தை ஈட்டும் வீராங்கனையான ஒசாகா அடுத்த வாரம் நடைபெறவுள்ள சின்சினாட்டி தொடரில் கிடைக்கும் பரிசுத்தொகையை ஹெய்ட்டி நிவாரணத்துக்காக வழங்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

23 வயதான ஒசாகா ஜப்பானில் பிறந்தவர். அவரது தாயார் மூன்று வயதில் அமெரிக்காவுக்கு பெற்றோரால் கொண்டுசெல்லப்பட்டவர். ஒசாகாவின் தந்தை லியோனார்ட் பிராங்கோயிஸ், தென்மேற்கு தீபகற்பத்திலுள்ள ஜாக்மெல் பகுதியைச் சேர்ந்தவர். ஹெய்ட்டியில் வசிக்கும் ஒசாகாவின் தாத்தாவுக்கும், பாட்டிக்கும் ஆங்கிலம் பேசத்தெரியாது. அவர்கள் தாய் மொழியான கிரியோலை மட்டுமே பேசுவார்கள்.

"எங்கள் மூதாதையரின் இரத்தம் வலுவானது என்பதை நாங்கள் அறிவோம். ஹெட்டியில் நடக்கும் அனைத்து அழிவுகளையும் பார்க்க மிகவும் வேதனையாக இருக்கிறது, எங்களுக்கு மத்தியில் இடைவெளி ஏற்படுவதை நான் விரும்பவில்லை'' என்று ஒசாகா ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

மூன்றில் மூன்று வெற்றிகளை குவித்துள்ள சானக்கவின் எஸ்.எல்.சி. க்ரேஸ்

இன்று இரு போட்டிகள்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வருகின்ற எஸ்.எல்.சி. இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் தொடரில் இன்றைய தினம் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

பகல் 2.30 மணிக்கு நடைபெறுகின்ற போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையில் எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியும், தனஞ்ஜய டி சில்வா தலைமையிலான எஸ்.எஸ்.சி. ப்ளூஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இரவு 7.00 மணிக்கு நடைபெறுகின்ற போட்டியில் அஷான் பிரியஞ்ஜன் தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் அணியும், தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 6ஆவது லீக் போட்டியில் எஸ்.எல்.சி. ப்ளூஸ் - எஸ்.எல்.சி. க்ரேஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற எஸ்.எல்.சி. க்ரேஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் லஹிரு மதுசங்க 39 பந்துகளில் ஆட்டமிழக்காது அதிரடியாக 5 சிக்ஸர்கள், 5 பௌண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்கள் குவித்ததுடன், சரித் அசலங்க ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றார்.

168 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய எஸ்.எல்.சி. ப்ளூஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இந்தப் போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து விளையாடிய மூன்று போட்டிகளிலும் மூன்று வெற்றிகளை பதிவுசெய்து புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

Dialog INVITATIONAL T20 LEAGUE

POINTS TABLE

TEAMS	MATCHES	WON	LOST	POINTS	NRR
GREYS	3	3	0	6	0.867
BLUES	3	2	1	4	0.751
REDS	3	1	2	2	-1.243
GREENS	3	0	3	0	-0.482

ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆடவர் ட்ரையத்லன் (நீச்சல், சைக்கிளோட்டம், மரதன்) போட்டியின்போது அதனை ஒளிப்பதிவு செய்த ஊடகமொன்றின் படகொன்று இடையில் புகுந்து போட்டியாளர்களை குழப்பியதால் பத்து நிமிடங்களின் பின்னர் போட்டி மீண்டும்

ஆரம்பமாகியது.

போட்டியில் பங்குபற்றுவதற்காக 56 வீரர்கள் டோக்கியோ விரிகுடாவிலுள்ள ஒரு பொன்டூனில் வரிசையாக நின்றார்கள். போட்டி ஆரம்பமானது, வீரர்கள் தண்ணீரில் குதித்தார்கள். போட்டியாளர்கள் 1,500 மீற்றர் நீந்த வேண்டும். அவர்கள் 200 மீற்றர் தூரம் சென்றபோது திடீரென ஒளிப்பதிவு செய்த ஊடகப் படகு போட்டியாளர்களுக்கு அருகில் சென்றது. படகு ஏற்படுத்திய அலையும்,

இயந்திரத்திலிருந்து வெளியேறிய வெப்பநீரும் போட்டியாளர்களை தடுமாறச் செய்தன.

போட்டியாளர்களுக்கு நடுவே படகு புகுந்ததால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். படகு ஏற்படுத்திய நீரலையால் சிலர் திசைமாறி நீந்தத்தொடங்கினர். நிலைமையை உணர்ந்த போட்டி ஏற்பாட்டாளர்கள் உடனடியாக போட்டியை நிறுத்தும் ஓசையை ஒலிக்கச்செய்தனர். போட்டியாளர்களை பாதுகாப்பாக படகுகளில் ஏற்றி ஆரம்ப இடத்துக்கு அழைத்துச்சென்றனர். மீண்டும் பத்து நிமிடங்களின் பின்னர் போட்டி ஆரம்பமானது.

ஐ.சி.சி. T20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்போம்

–ஆப்கானிஸ்தான் திட்டவட்டம்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் பங்கேற்கும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவிப்பு விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் விலகிக்கொள்ளும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்த பிறகு, ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தீவிர முயற்சிகள் எடுத்து வந்தன. முதலில் வடக்குப் பகுதியைக் கைப்பற்றிய அவர்கள் மெல்ல முன்னேறி தலைநகர் காபூலையும் கைப்பற்றி, ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானையும் தங்கள் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவந்துவிட்டார்கள்.

அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப்கானி உடனடியாக அண்டை நாடான தஜிகிஸ்தானுக்கு தப்பி

ஓடிவிட்டார். சில அமைச்சர்கள் இந்தியா தப்பி விட்டனர். பொதுமக்கள் பலரும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற விமான நிலையங்களில் கூட்டம் கூட்டமாக குவிந்துள்ளனர்.

இந்தச் சூழலில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி பங்கேற்பது குறித்து கேள்வி எழுந்தது. எனினும், நாட்டில் அசாதாரண சூழல் நிலவினாலும் ஆப்கானிஸ்தான் அணி விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலும் பங்கேற்போம் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

வேகப்பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல்போன இங்கிலாந்து இறுதி மணித்தியாலத்தில் இந்தியாவுக்கு த்ரில் வெற்றி

இங்கிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இறுதி மணித்தியாலத்தில் 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றியை பதிவுசெய்தது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய - இங்கிலாந்து அணிகள் விளையாடி வருகின்றன. முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்குவந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை லோட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, கே.எல்.ராகுலின் அபார சதம், ரோஹிட் சர்மாவின் அரைச்சதம் என்பவற்றின் உதவியுடன் 364 ஓட்டங்களை சேர்த்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, அணித்தலைவர் ஜோ ரூட்டின் மிக அபாரமான 180 ஓட்டங்களுடன் 391 ஓட்டங்களை குவித்தது.

27 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, 298 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் தங்களது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. அதனடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 272 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. குறித்த இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி ஆரம்பம் முதலே சரிவை சந்தித்து வந்தது.

இறுதி நாளில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல்போன இங்கிலாந்து அணி, 120 ஓட்டங்களுக்குள் சுருண்டு போக இந்திய அணி 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இறுதி மணித்தியாலத்தில் அபாரமான வெற்றியை பதிவு செய்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணிக்கு முதல் இன்னிங்ஸில் சதம் விளாசி 129 ஓட்டங்களை குவித்த கே.எல்.ராகுல் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி ஹெடிங்லி, லீட்ஸ் மைதானத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7